நளினி, முருகன் உட்பட 7 பேரை விடுவிக்கும்
**தமிழக அரசின் முடிவை**
**நிராகரித்தது மத்திய அரசு**
பக். 14-15

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

35°c - 29°c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 147 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 08, வியாழக்கிழமை, 21.04.2016

# அமெரிக்காவில் வைத்து கோத்தாவை பிடியுங்கள்



## இரண்டு பிரதான அமைப்புக்கள் ஒபாமாவிடம் அவசர கோரிக்கை

நியூயோர்க், ஏப்ரல் 21
முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான கோத்தபாயவை அமெரிக்காவில் வைத்துக் கைது செய்யுமாறு அங்குள்ள இரண்டு பிரதான அமைப்புக்கள், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.
அமெரிக்காவுக்குக் கோத்தபாய சென்றுள்ள சந்தர்ப்பத்திலேயே, இவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.
ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பும், அமெரிக்கத் தமிழர் பேரவையுமே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கையில் போர் நடந்த சந்தர்ப்பத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டன. பல இலட்சம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இந்தப் போர்க்குற்ற மீறல்களுக்குப் பொறுப்பானவர் கோத்தபாய ராஜபக்ச.
அதற்கமைய பொதுமக்களுக்கு எதிராக மேற்கொண்ட போர்க்குற்ற நடவடிக்கைகளுக்காக முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாயவைக் கைது செய்ய வேண்டும் என்று தமிழ் அமைப்புக்கள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.
(த-வ-5)

## தமிழர் விருப்புக்கு மாறாக செயற்படுகிறதா ஈ.பி.டி.பி.?

### சந்திரகுமார் சொன்ன பதில்

யாழ்ப்பாணம், ஏப். 21
தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக ஈ.பி.டி.பி. செயற்படுவதை ஏற்றுக் கொள்கின்றீர்களா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, தமிழ் மக்களின் விருப்பத்துக்கு அமைவாகச் செயற்பட்டிருந்தால் தேர்தல் முடிவுகள் வேறு விதமாக அமைந்திருக்கவேண்டும் என்று, ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பி.யிலிருந்து விலகுவதாகக் பக். 26

## தோல்வியடைந்து வெளியேறும்போதும் நானே ஜனாதிபதி



கொழும்பு, ஏப். 21
ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து, எனது பாதுகாப்புப் படையினருடன் அலரிமாளிகையில் இருந்து வெளியேறும் நேரத்தில் பக். 26

## சிறீதரன் எம்.பியின் மெய்க்காவலர் பொலிஸ் விசாரணைக்கு அழைப்பு

### பரவிப்பாஞ்சானுக்குச் சம்பந்தனை அழைத்துச் சென்றமை தொடர்பில்

கிளிநொச்சி, ஏப். 21
கிளிநொச்சி - பரவிப்பாஞ்சான் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை முன்னனுமதியின்றி அழைத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டில், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் மெய்ப்பாதுகாவலரை விளக்கமளிக்க வருமாறு பொலிஸாரிடம் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.
கடந்த வாரம் வடக்குக்குப் பயணம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சிக்கும் பக். 06

## கைதான 9 மாணவருக்கும் மே 4 வரை விளக்கமறியல்

### வாள் வெட்டுக்களை நடத்துவதற்கு தயாராகினர் என்ற குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம், ஏப். 21
இணுவிலில் வாள், கைக்கோடரி உள்ளிட்ட ஆயுதங்களுடன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட 9 மாணவர்களையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.
அத்துடன், அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட கூரிய ஆயுதங்கள் சான்றுப் பொருள்களாக நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளன.
இணுவிலில் கோயில் ஒன்றின் முன்பாக வைத்து வாள்வெட்டுக்களை நடத்தவிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 9 மாணவர்கள் பொலிஸ் விசேட அணியினரால் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு பக். 25

### முச்சந்தி முரளி



வாள், தூள், இவைதான் இப்ப பெடியள் கையில பாருங்கோ...

## கணவனைக் கொன்றுவிட்டு மனைவி பொலிஸில் சரண்

### வவுனியாவில் நேற்றுச் சம்பவம்

வவுனியா, ஏப். 21
படுக்கையில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டுக்காயங்களுடன் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரைத்தானே வெட்டிக்கொலை செய்ததாகக் கூறி, அவரது மனைவி சரணடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் வவுனியா, புதுகம - அவுசுதபிட்டிய பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.
இதில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான எஸ்.எஸ்.திஸாநாயக்க (வயது - 43) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
உறங்கிக்கொண்டிருந்த கணவனைத் தானே கோடரியால் வெட்டிக் கொலை செய்ததாகக் கூறி, அவரது மனைவி வவுனியா இரட்டைப்பெரியகுளம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். பக். 23

## ஆலயங்களில் வேள்வி; இடைக்கால தடை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21
இந்து ஆலயங்களில் நடத்தப்படும் வேள்விகளுக்கு யாழ். மேல் நீதிமன்று விதித்த இடைக்காலத் தடை உத்தரவு எதிர்வரும் ஜூன் 29 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்திலுள்ள இந்து ஆலயங்கள் சிலவற்றில் வேள்வி பக். 23

## அரசியல் தீர்வு முயற்சிக்கு உலை வைக்கின்றார் விக்கி

### சாடுகின்றார் அமைச்சர் டிலான்

கொழும்பு, ஏப். 21
இந்த ஆண்டு இறுதிக்குள் தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற எதிர்க் கட்சித் தலைவரின் நம்பிக்கை வெற்றி பெறும் சாத்தியம் இருக்கின்றது. ஆனால் அதற்கு உலை வைக்கும் வகையிலும், தெற்கிலுள்ள இனவாதிகளுக்குத் தீனி போடும் வகையிலும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் பக். 23



## தனக்குத் தானே தீ மூட்டிய தாயார் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 21
தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்ட குடும்பப் பெண் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.
கணவன் போதையில் துன்புறுத்தி வந்த நிலையில், அவர் தனக்குத்தானே தீ மூட்டி உயிரிழந்துள்ளார் என்றும், அவரைக் காப்பாற்ற அயலவர்கள் உதவவில்லை என்றும் விசாரணையில் பக். 26

metecno The Specialist
கூரைத் தகடுகள் | கேட் தகடுகள் | சென்விச் பெனல் | வளைந்த தகடுகள் | பொலிங்க்ஸ்
METROOF Total Roofing Solutions
மெட்டெகினோ லங்கா பிரைவட் லிமிடட்
இல: 734, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 5 672 672
077 7 845 544
www.metecnolanka.com
METECNO LANKA (PVT) LTD
Sri Lanka Germany Italy Spain Portugal Mexico Chile Columbia India Thailand
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 40 மில்லி கிராம் ஹெரோயின் பொதியுடன் இளைஞர் கைது

வவுனியா. ஏப். 21

40 மில்லி கிராம் ஹெரோயின் பொதியுடன் வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 40 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது என்று வவுனியா போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் 40 மில்லி கிராம் ஹெரோயினுடன் வந்தபோது வவுனியா, மன்னார், முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த நபரிடம் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் வவுனியா தேக்கவத்த பகுதியை சேர்ந்தவர் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் கைது செய்யப்பட்டவர் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (ம-21)

## புதிய பொலிஸ் மா அதிபருக்கு நேற்று நியமனக் கடிதம் வழங்கினார் மைத்திரி

புதிய பொலிஸ் மா அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட பூஜித் ஜயசுந்தரவுக்கு உத்தியோகபூர்வமாக நேற்று ஜனாதிபதியால் நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.



வடமாகாணம் உள்ளிட்ட பல இடங்களிலும் பணிபுரிந்த அவர் இறுதியாக மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றினார். இந்த நிலையில் 34 ஆவது பொலிஸ் மா அதிபராகப் பூஜித் ஜயசுந்தர சில நாள்களுக்கு முன்னர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இது தொடர்பான நியமனக் கடிதமே நேற்று நண்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வழங்கப்பட்டது.

33 ஆவது பொலிஸ் மா அதிபராகப் பணியாற்றிய என்.கே. இலங்கக்கோன் ஓய்வுபெற்றதை அடுத்து வெற்றிடமாகக் காணப்பட்ட பொலிஸ் மா அதிபர் பதவிக்காக ஜனாதிபதியால் அரசியலமைப்பு சபைக்கு மூன்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டிருந்தன.


அரசியலமைப்பு சபையால் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் நேற்று அதற்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. (ம-4)

# அதிகாலைவேளை வீடுடைத்து தாவடியில் கொள்ளை முயற்சி

## வீட்டிலிருந்தோரின் எதிர்ப்பால் கொள்ளையர் திட்டம் பிசுபிசுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21

அதிகாலை வேளை வீட்டுக் கதவை உடைத்துக் கொள்ளையிட முயன்ற கொள்ளையர்களின் முயற்சி வீட்டிலிருந்தவர்களின் சாமர்த்தியத்தாலும், பெண் ஒருவரின் துணிச்சலான செயலாலும் தடுக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் தாவடியில் நடந்துள்ளது. தமது முயற்சி பிசுபிசுத்துப் போனதையடுத்து கொள்ளையர்கள் வேறொரு வீட்டில் பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.



தாவடி, நந்தாவில் ஒழுங்கையில் உள்ள துரைசிங்கம் என்பவரது வீட்டிலேயே இந்தக் கொள்ளை முயற்சி நடந்துள்ளது. வீட்டுக்குள் கொள்ளையர்கள் நுழைவதை அவதானித்த வீட்டிலிருந்தோர் மின் விளக்குகளை ஒளிரச் செய்துள்ளனர். அப்போது அதிகாலை 1 மணி இருக்கும். கொள்ளையர்கள் கறுப்புத் துணிகளால் முகத்தை மறைத்திருந்துள்ளனர்.

வீட்டு வளவுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் மின் விளக்குகளை அடித்து நொறுக்கியுள்ளனர். அப்போது வீட்டில் இருந்த மூன்று முதியவர்களும் கூக்குரல் இட்டுள்ளனர். கொள்ளையர்களில் மூவர் வீட்டுக் கதவை உடைத்து உள்ளே நுழைந்து வீட்டைச் சல்லடையிட்டுத் தேடத் தொடங்கியுள்ளனர். அப்போது வீட்டிலிருந்த பெண் கொள்ளையன் ஒருவனைத் துணிந்து மடக்கியுள்ளார். ஏனைய கொள்ளையர்கள் தாக்கியபோதும் விடாது போராடிய அந்தப் பெண் கொள்ளையன் ஒருவனின் முகத்தில் இருந்த கறுப்புத் துணியைப் பறித்துள்ளார்.

அதன்பின்னர் அந்தப் பெண்ணைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர் கொள்ளையர்கள். பணம், நகைகளைக் கொடுக்குமாறு அச்சுறுத்தியுள்ளனர். எதிர்பாராத எதிர்ப்புகளால் பதற்றமடைந்திருந்த கொள்ளையர்களின் கண்களில் அங்கிருந்த கவறிங் நகைகள் தட்டுப்படவே அவற்றை எடுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

அதன்பின்னர் கொள்ளையர் கும்பல் அருகில் உள்ள செல்வநாயகம் என்பவரது வீட்டுக்குள் மாடி வழியாக உட்புகுந்துள்ளது. அங்கு படுத்துறங்கிய வீட்டு உரிமையாளரின் ஆடைப் பொக்கற்றில் இருந்த 10 ஆயிரம் ரூபா பணத்தை அபகரித்துச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவங்கள் நடந்து கொண்டிருந்த சமயம் - அதிகாலை 2 மணி முதல் பொலிஸாருக்குத் தொலைபேசி அழைப்புகள் பலராலும் எடுக்கப்பட்டன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். ஆயினும் சுன்னாகம் பொலிஸார் அதிகாலை 3 மணியளவிலேயே சம்பவ இடத்துக்கு வந்து சேர்ந்தனர் என்றும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொள்ளையர்களின் தாக்குதலுக்கு உள்ளான வீட்டு உரிமையாளர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குடாநாட்டில் தற்போது கொள்ளையர்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. வீட்டுக் கதவை உடைத்து வீட்டிலிருப்போரை ஆயுத முனையில் அச்சுறுத்திக் கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. (ம-4,10)

## சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுக்க இலத்திரனியல் ஊடகங்கள் முயல வேண்டும்

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

நாட்டு மக்களின் நன்மைக்காக சரியான தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு சகல இலத்திரனியல் ஊடக நிறுவனங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்- இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலத்திரனியல் அலை வரிசைகள் அரசினதும் பொது மக்களினதும் சொத்தாகும். நாட்டு மக்களின் நன்மைக்காக சரியான தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக அதனைப் பயன்படுத்துவது சகல இலத்திரனியல் ஊடக நிறுவனங்களினதும் பொறுப்பாகும் - என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவின் அதிகாரிகள் மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த சந்திப்பின் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சில ஊடக நிறுவனங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் சட்ட திட்டங்களுக்கு முரணாக செயற்பட்டு வருகின்றன. அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அலைவரிசைகளை பிழையான முறையில் பயன்படுத்தி வருகின்றன.

தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் தற்போதுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பில் நீதித்துறைக்கு விரிவாக தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊடக ஒழுக்கங்களைப் பேணி ஊடக சுதந்திரத்தை ஊடக நிறுவனங்கள் எவ்வளவு தூரம் பொறுப்புடன் பயன்படுத்துகின்றன என்பது பிரச்சினைக்குரியதொன்று. அரசு வழங்கியிருக்கும் ஊடக சுதந்திரத்தை முறையாகப் பயன்படுத்துவது எல்லா ஊடக நிறுவனங்களினதும் பொறுப்பாகும்.

தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன. அரச நிறுவனங்களில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதை ஒழிப்பதற்கு அரசு முன்னெடுத்துவரும் செயற்திட்டங்களினூடாக அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்- என்றார். (ம-5)

## யாழ்ப்பாணத்திலிருந்து இலக்கிய காலாண்டிதழ்

### சனியன்று வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணத்திலிருந்து தளவாசல் என்ற பெயரில் புதிய கலை இலக்கிய காலாண்டிதழ் ஒன்று வெளிவரவுள்ளது. இதன் வெளியீட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எழு கலை இலக்கியப் பேரவையால் இந்த இதழ் வெளியிடப்படவுள்ளது. இலக்கியச் சூழலில் தொடர்ந்து இயங்கிவரும் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் இதன் முதன்மை ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

நிகழ்வில் வெளியீட்டுரையை ந.மயூரரூபனும் விமர்சனத்தை கலாநிதி சி.ரகுராமும் பதிலுரையை கை.சரவணனும் ஆற்றவுள்ளனர். சிறப்புரையாற்றும் ம.செல்வின் இதழை வெளியிட்டு வைப்பார். முதற்பிரதியை ம.சி.சந்திரபோஸ் பெற்றுக்கொள்வார்.

"போர்ச் சூழல் அமைதியாக்கப்பட்ட பின்பு எமது சமூகம் பல பிறழ்வுகளால் துண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வாறு சிதைந்து போய்க்கொண்டிருக்கும் எமது சமூகத்தினருக்கு அல்லது எதிரே நிற்கும் சின்னஞ் சிறிய குரல்களுக்கு நாம் ஏதேனும் வார்த்தைகளை வைத்திருக்கிறோமா?" என்ற கேள்வியுடன் பணியை ஆரம்பித்திருக்கிறது தளவாசல் இதழ். இலக்கியம் பேசுகின்ற மரபு, நவீனம், பின் நவீனத்துவம் என்பவற்றைக் கடந்து சமூக இயக்கத்திற்கான ஒரு பொதுத் தளத்தினை இலக்கியத்தளத்தினால் அவாவுவதே தனது நோக்கம் என்றும் தெரிவித்திருக்கிறது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலய
# வருடாந்த மகோற்சவத்தின்
# பூங்காவனத் திருவிழா விஞ்ஞாபனம்



விநாயகப் பெருமான் அடியார்களே!

22.04.2016 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அபிஷேகத்துடன் பூஜை ஆரம்பமாகி மதியம் மகேஸ்வர பூசை நடைபெற்று அதனைத் தொடர்ந்து மாலை 6.00 மணியளவில் பூஜை ஆரம்பமாகி அலங்கரிக்கப்பட்ட பூம்பந்தலில் அமர்ந்து இருக்கும் வேளையில் தவில் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும் அவ்வேளையில் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் திருவீதி உலா வருவார்.

## இரவு 7.00மணிக்கு

## தென்னிந்தியப் பின்னணிப் பாடகர்கள் மற்றும் சென்னை சகாஜராஜாவின் திரை இசை நண்பர்களின்

# "இசைச்சங்கமம்"



பின்னணிப் பாடகர்
T.L. தியாகராஜன்



பின்னணிப் பாடகி
T.L. தீபிகா தியாகராஜன்



மலேசியா புகழ் பாடகர்
வில்லியன் சியா



புல்லாங்குழல்
இளவரசன்




லியோனி புகழ் பலகுரல்
மூர்த்தி



கீ போர்ட்
பாலாஜி



ரிதம் பேட் தாரை தப்பட்டை புகழ்
சிநு



சுப்பர் சிங்கர்
அழகேசன்




சுப்பர் சிங்கர் தபேலா
குமார்






பின்னணிப் பாடகர்
M.I.R. கார்த்திகேயன்



அறிவிப்பாளர்
திருமாறன்

ஒலி அமைப்பு
ஆலய தொண்டர் சபையினர்

சவுண்ட் சிஸ்ரம்
மோகன் சவுண்ட்ஸ்

ஒளி அமைப்பு
நவாஸ் பண்டத்தரிப்பு

சிகரம் சாத்துப்படி சப்பறம்
K.V. தாசன்

மேடை ஒளி
மனோ லைட் கோப்பாய்

ஊடக அனுசரணை: Feather

ஏக விநியோகஸ்தர் **Bala Enterprisess**
Alaveddy
T.P: 0770076035

இங்ஙனம்.
அளவெட்டி அழகொல்லை,
விநாயகர் ஆலய தொண்டர் சபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
## சீரணி, சண்டிலிப்பாய்
# இரதோற்சவ சிறப்பிதழ் – 2016

### மஹோற்சவ குருவின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணத்தின் திவ்விய தேசமாய் விளங்கும் சண்டிலிப்பாய் சீரணி என்னும் அருட்பதியில் ஆனந்த அருள் ஆட்சி புரியும் தாய்க்கு இன்று தேர்த் திருவிழா பல ஊர் பக்தர்கள் பக்தியோடு நேர்த்தி செய்யும் புண்ணிய தலமாகிய இத்தலத்தில் சிறப்பு தனித்துவமானது அன்னை இன்று சித்திரா பௌர்ணமி நன்நாளில் தன் சிங்கரதத்தில் தேர் ஏறி அடியார்களுக்கு அருள் புரியும் பெரு நோக்கோடு இன்று தேர் வலம் வருகின்றாள். தேர்த்திருவிழா இனிதே சிறக்க மன நிறைவுடன் ஆசி கூறுகின்றேன்.

**பிரம்மஸ்ரீ கு. சோமாஸ்கந்தக்குருக்கள்**
**(தேவஸ்தான குரு)**

### அம்பிகையின் அருள் பெருகட்டும்

சீரணி அம்பாள் அருள் புரிய உன் பாதத்தில் என் மனதை கொடுத்தேன் அம்மா. இசை மழை பொழிய இன்புற்ற மக்கள் எல்லாம் துன்பத்தை மறந்து இன்பத்தில் அலை மோதுகிறார்கள். கண்கொள்ளாக் காட்சியெல்லாம் அடியார் சந்நிதியில் ஆரணி பூரணி அபிராமித் தாயே உன் கடைக்கண் பாராயோ நீதான் சரணம் என்று வந்தவர்க்கு அருள் கொடுக்கும் தாயே எங்களது இதயக் கதவை துறந்து விட்டாய் அம்மா உன் பற்றை மறந்து தவிக்கும் புழுக்கள் போல் துடிதுடித்து இறப்பதைக் கண்ணால் காண்பதற்கு கருணை உள்ளம் பிறக்குதம்மா எங்கள் கனவுகளை நினைவாக்கிக் கொள்பவளே உன் நாமத்தை சொல்ல சொல்ல என் மேனி சிலிர்க்குதம்மா உன் பற்றை அறியாத மானிடர்க்கு உன் பற்றை புகட்டுகிறாய் அம்மா உன் காலடியில் வந்தாலே என் கவலை தீர்ந்துவிடும் அம்மா. தேன் அருவியில் உன் இன்பத்தை காண்பதற்கு வீழ்ந்தேன் அம்மா. இது போல் உலக மக்களுக்கும் பாக்கியம் கிடைக்க வேண்டும் அம்மா என்றும் உன் காலடியில் சரணம் அடைந்தேன் அம்மா .இறைவனின் இதயத்தை தொடுவதற்கு நாங்கள் செய்யும் தொண்டினால் தான் இறைவனின் இதயத்தைத் தொட முடியும். இத்தொண்டு செய்பவர்களுக்கு ஒரு கையால் கொடுத்தால் மறு கைக்கு தெரியாமல் இருக்க வேண்டும்.

**தம்பையா பரஞ்சோதி - ஆதீன கர்த்தா**
**சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்.**

### ஆலய வரலாறு

இலங்கையில் புகழ்பெற்ற யாழ்ப்பாண நகரத்தில் அமைந்துள்ள பதியில் வாழ் மணியகாரன் உடையார் பரம்பரையினராகிய இராமன் சீரணி என்னும் மண்ணில் சிறப்புற்று வாழ்ந்து வந்தார். அவர் மகன் இராமர் அவர் மகன் முருகேசு. மூத்தர் இனசன வழியில் பெரிய சாஸ்திரியார் தெய்வானைப்பிள்ளை. அன்னப்பிள்ளை. நன்னிப்பிள்ளை. மயில்வாகனம். பெரிய பிள்ளை. சின்னப்பிள்ளை. வேலர் ஆகியோருடன் இசைந்து வாழ்ந்து வந்தார். நாகபூஷணி அம்பாள் வாலாயம் பெற்ற முருகேசுவிடம் சோமவாரநாள் ஒன்றிலே நாகபூஷணி அம்பாள் கனவில் தோன்றி தான் இவ்விடத்தில் சீரணியில் எழுந்தருள வேண்டும் என்றும் தனக்கொரு கோயில் அமைக்கும்படி கேட்டதற்கு அமைய சைவ முறைப்படி ஒரு கொட்டகை அமைத்து அதில் பூசை செய்துவர வைத்திலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார். இம்முறைப்படி இனசன மக்கள் எல்லோரும் சேர்ந்து வழிபட்டு வந்தார்கள். காலம் காலமாக முருகேசு பரம்பரையினர் பரிபாலித்து வருகின்றனர்.

**தாங்கரத தேரேறி........**

சித்தர்கள் கூடி வாழும்
சீரணியாம் பதியினிலே
பக்தர்கள் புடை சூழ
'பவனி வரும் நாயகியே
முப்பொழுதும் நமைக்காக்க
முத்துரதத் தேரேறி
சொர்ப்பணமாய் வலம் வருவாள்
சுந்தரி எம் நாகபூசணியே......

**இ.சிறிதரன் - தலைவர்**
**இந்து இளைஞர் மன்றம்.**

### வாழ்த்துச் செய்தி

இந்து சமுத்திரத்தின் முத்தெனத் திகழும் இலங்கைத் தீவின் வடக்கே அமைந்துள்ள யாழ்ப்பாண குடாநாட்டின் வலிகாமம் தென் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களுள் சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய மும் ஒன்றாகும். இங்கு வீற்றிருக்கும் அருள்மிகு சீரணி நாகபூஷணி அம்பாள் பக்தர்களுக்கு அருளாட்சி புரிந்து வருகின்றார். இவ் ஆலயத்தில் வருடாந்த மஹோற்சவம் ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

அவ்வகையில் இவ்வருட வருடாந்த மஹோற்சவமானது மன்மத வருடம் பங்குனி மாதம் 23ஆம் நாள் (05.04.2016) ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அவ்வகையில் மலர்ந்துள்ள துர்முகி வருடம் சித்திரை மாதம் 8ஆம் நாளாகிய இன்று (21.04.2016) மஹோற்சவத்தின் தேர்த்திருவிழாவானது மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வகையில் இன்று நடைபெறும் தேர்த்திருவிழாவில் தேர்த்திருவிழா சிறப்பிதழ் வெளியிடப்படுகின்றமை சிறப்பம்சமாகும். இத் தேர்த்திருவிழா சிறப்பிதழுக்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைவதுடன் அம்பாளின் அருளாசி அனைவருக்கும் கிடைக்க எல்லாம் வல்ல அருள்மிகு சீரணி நாகபூஷணி அம்பாளை வேண்டுகின்றேன்.

**உ.யசோதா பிரதேசசெயலாளர்,**
**பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.**

### செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி

அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம். சண்டிலிப்பாய் திருவூரில் எழுந்தருளி அருள்பாலிக்கும் சீரணி நாகபூஷணி அம்பாள் தேர் ஏறிவரும் திரு நாள் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். அருள் வளம் நிறைந்த அம்பாளின் தருத்தேர் விழாக் காண்பதற்கு பலவூர் மக்களும் பக்தியோடு ஒன்று கூடும் நன் நாள் இன்று ஆடுவோர்கள் அடியளித்துக் கும்பிடுவார்கள் பாடிப் பரவசமாக பக்தர் கூட்டம் வீதியெல்லாம் மெய்யுருகி நிற்கும் காட்சியை இவ்வாலயத்தில் இந் நாளில் காணலாம். சீரணி அம்பாளுக்கு நேர்த்தி வைத்து காவடி எடுப்பவர் தொகை எல்லையில்லை. தனித்துவச் சிறப்பு மிக்க இத்திருநாள் சிறக்க வேண்டி எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்.**
**தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

### தேர்ப்பவனி வரும் அம்பாளின் திருவருள் கிடைக்க நல்லாசிகள்

சண்டிலிப்பாய் பதியினில் வீற்றிருந்து அடியவர்களுக்கெல்லாம் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் இவ்வருடமும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தன்னைத் தேடி வரும் அடியவர்களின் துயர் நீக்கி அருள் சுரக்கும் அம்பாளின் திருக்கடாட்சம் சகலருக்கும் கிடைக்க வேண்டுமென அன்னையின் பாதாரவிந்தங்களை வணங்கி உளமார பிரார்த்திக்கின்றோம்.

**குணசிங்கம் சற்குணராசா, செயலாளர்,**
**வலி.தென்மேற்கு பிரதேசசபை,மானிப்பாய்.**

**MANIYAM IMPEX**
இல.121A
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222819.
077 3632963

**ஐங்கரன் மோட்டோர்ஸ்**
சியாட் ரயர், Fevicol
தயாரிப்புக்களின் ஏக
விநியோகஸ்தர்கள். ஆட்டோ,
மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர
வண்டி, வாட்டர்பம் உதிரிப்
பாகங்கள் விற்பனையாளர்.
சந்தை முன்பாக, மானிப்பாய்.

**லீலா**
**வெதுப்பகம்**
சைவ உணவகம்
சீரணி, சண்டிலிப்பாய்.

**சுந்தர்சன்**
பிரதான வீதி,
மானிப்பாய்.
தொ.பே: 021 22 55136

**துர்க்கா**
**மரத்தொழிற்சாலை**
மில் ஒழுங்கை,
சண்டிலிப்பாய்.
தொ.பே: 0777 114852

**பாக்கியரட்ணம் ஹாட்வெயார்ஸ்**
பிரதான வீதி, சங்கானை.
தொ.பே: 0212250105
**தரன் ரேடர்ஸ்**
130, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212222664

**சந்திரா கல் உடைக்கும்**
**தொழிற்சாலை**
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
தொ.பே: 077 103 7026

**சக்தி எலக்ரிக்கல்ஸ்**
மின்சார உபகரணங்கள்,
இலத்திரனியல் பொருள்கள்,
வீட்டு மின் இணைப்பு பொருள்கள்,
PVC குழாய்கள் என்பவற்றை
மலிவான விலையில் பெற்றுக்
கொள்ளலாம்.
ஒடைக்கரை வீதி, சங்கானை.

**YASO TEX**
பிரதான வீதி,
நெல்லியடி.

**நாகபூசணி**
அரிசி ஆலை
சீரணிச்சந்தி,
சண்டிலிப்பாய்.

**ஐடியல் அக்கடமி**
சீரணிச் சந்தி,சண்டிலிப்பாய்.
681/13, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தரம் 6 முதல் O/L,A/L வரை

**மொடேண் மற்ஸ் அக்கடமி**
MODERN MATHS ACADEMY
சண்டிலிப்பாய்.
தரம் 3 முதல் O/L,A/L வரை
ஆங்கில மொழிமூல வகுப்புகளும்
நடைபெறுகின்றன.
நிர்வாகி. S.குகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன்



# தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 21.04.2016

## மஹோற்சவ குருவின் ஆசிச் செய்தி



வல்வை நகரில் பல்லாண்டு காலம் கோயில் கொண்டு எழுந் தருளி இருக் கும் எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம் பாளுக்கு இன்று இரதோற்சவம். இந்த இர தோற்சவ நன்நாளில் வல் வெட்டித் துறை நகர மெங்கும் மக்கள் ஆசார சீலர்களாக அம் பிகையின் திருவிழா வான பெரு விழாவைக் கொண்டாடும் முகமாக நகரத் தினை அழகுபடுத்தி மெருகூட்டிக் தூய்மை யாகக் கொண்டாடும் இவ் வேளையிலே அம்பாளும், விநாயகர், சுப்பிரமணியர் ஆகிய தெய்வங்களும் அழகான மூன்று சித்திரத் தேர்களிலே வீதி வலம் வரும் காட்சியினைக் காணக் கண்கள் போதாது. அம்பாள் தேரில் ஆரோகணித்து வேண்டுவோர் வேண்டும் வரம் அளிப்பார். எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் அடியவர்கள் சகல செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்தித்து எனது ஆசிகளையும் கூறிக் கொள்கின்றேன்..

லோகா சமஸ்தா சுகினோ பவந்து இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

**சிவ ஸ்ரீ மு.தயாபரக் குருக்கள்**
**மஹோற்சவக் குரு**
**வல்வை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.**

## செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வல்வை நகரில் இன்று முத்துமாரி அம்மன் சித்திரத்தேர் ஏறி வலம் வருகிறாள். அத்தருணத்திலே எமது ஆணவம் அகந்தை அறியாமைகளை நீக்கி எல்லோரையும் நல்லவராகவும் துன்பம் இன்றியும் புண்ணிய பலன்களைத் தருவதற்கு தாயவள் வருகிறாள் .இந்த நன்நாளில் அம்பாளின் பாதங்களைப் பணித்து அருள் பெறுவோமாக.

**திரு. தி. ஜெயராஜ்**
**ஆயை தர்மகர்த்தா சபைச் செயலாளர்**

## தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும்

வல்வை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்
மெய் அடியார்களே!
நிகழும் துர்முகி வருடம் சித்திரை மாதம்
எட்டாம் ஆம் நாள் 21.04.2016
வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு
நாதஸ்தவர கலைஞர்களின் மங்கல
வாத்தியங்கள் முழங்க
எம் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்
தேரேறி அடியார்களுக்கு
வீதி உலா வந்து அருள்பாலிப்பார்,
அனைவரும் வருக
அம்பிகை அருள் பெறுக !

**சு. சேதுலிங்கம்**
**தலைவர்**
**ஆலய தர்மகர்த்தா சபை.**

## தலைவரின் வாழ்த்துச் செய்தி

வல்வை ஸ்ரீ முத்துமாரியின் திருவிழாவில் கலந்து கொண்டுள்ள பக்தர்களின் உள்ளம் மகிழ அம்பாள் அருள்புரிய வேண்டும் என்றும் வேண்டுவதோடு வெளிநாடுகளில் இருந்து இந்நாளில் அம்பாளை நினைப்பவர்களுக்கும் அருள் கிடைக்க வேண்டு மென்று வேண்டுகிறேன்.

**சு. சேதுலிங்கம்**
**தலைவர் - ஆலய தர்மகர்த்தா சபை.**

வல்வை முத்துமாரியம்மா...
வந்தவரைக் காக்கும் தாயே
வந்தனைகள் செய்பவரை வாழ
வைக்கும் தெய்வம் நீயே
வெற்றி தரும் அன்புத் தாயே.

வானளவுக் கோபுரமாம்
வீதியெங்கும் தோரணமாம்
தானம் தவம் ஓங்கிடுமாம்
தரணி புகழ் பெருவிழாவில்
தாயின் திருக் கோவிலினிலே
மங்கையர் கூடியே நோன்பு இயற்றி
மானிலம் போலவே ஓடி வந்து
தந்தனவென்று உடுக்கை முழங்கிட
தங்கமென மின்னும் பொங்கரகம்
எங்கள் குல தேவியவள்
எங்கள் குலம் ஓங்கிடவே
வந்தாரைக் காத்தருள்வாய் எங்கள்
கண்மணியே
திரைகடல் ஓடிச் செல்வோம்
தேடும் தமிழர் வாழும் நிலம்
நிகரில்லாத வல்வை நகரம் தானே
நல்ல கப்பல் தோணி செய்வோம்
நமது தாயின் திருவருளாலே

**திருமதி அமிர்தலிங்கம்**
**வல்வெட்டித்துறை.**

## தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

**கோ.சி.ஆடையகம்**
யாழ்வீதி, வல்வெட்டித்துறை.
மங்கலகரமான நிகழ்வுகளுக்கு பட்டுவேட்டிகள் பட்டுப்புடவைகள் மற்றும் பெரியோர்களுக்கு, சிறியோர் களுக்குமான ஆடைகளை தெரிவுசெய்ய நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
விலையில் மலிவு தெரிவில் நிறைவு

**S.S.V.R.மல்ரி ரேடர்ஸ்**
நெடியகாடு வல்வெட்டித்துறை 021 722 3161
யாழ்வீதி, வல்வெட்டித்துறை 077 6540056
பலகை வகைகள்,நீப்பை, கம்பஸ் மர வகைகள் ஓடு, சொங்கல், கொங்கிறீற்கல், லெவல் சீற் மற்றும் கன்ரர் சிறிய டிப்பர், போக்குவரத்து சேவைகளுக்கு நாடவேண்டிய இடம்.

**அம்பிகை காட்வெயார்**
பருத்தித்துறை வீதி,
வல்வெட்டித்துறை.
தொ.பே. 077 152 8901

**ஸ்ரீ லஷ்மி பவன்**
சைவ உணவகம்
யாழ்வீதி, வல்வெட்டித்துறை
எங்கள் நாவிற்கு சுவையூட்டும் சிறந்த சைவ உணவு வகைகளுக்கும், வைபவங்களுக்கான சைவ உணவுகளை ஓடர்களுக்கு பெற்றிட சிறந்த சைவ உணவகம்.
021 722 3161/ 077 968 5122

**சுவையருவி**
**Suvaiaruvi**
K.K.S.Road,V.V.T
T.P. 021 226 5105/ 077 352 7579

**அபி எலற்ரிக்கல்ஸ்**
வயரிங் பொருள்கள் SLON பைப் வகைகள் லுமாலா சைக்கிள்கள், சைக்கிள் உதி ரிப்பாகம் மற்றும் SUN T.V. ரீலோட் செய்து தரப்படும்.
3மாதம் - 1300/=, 6 மாதம் - 2500/=,12 மாதம்-4500/=
**ABI ELECTRICALS**
வேம்படி வீதி, வல்வெட்டித்துறை,
077 284 5442, 021 226 5187

**சந்நிதியான் புடவையகம் & ரவல்ஸ்**
தொ.பே. 077 796 5442
077 151 7898

**கணபதி இரும்பகம்**
ORANGE
யாழ் ஏக விநியோகஸ்தரும்
கட்டடப்பொருள் மொத்த சில்லறை விற்பனையாளர்
தொ.பே. 077 418 2338

**சிவகாமி**
ஹாட்வெயர் &எலற்றிக்கல்
வல்வெட்டித்துறை
தொ.பே. 077 644 8547

**சந்நிதியான் அழகுச்சோலை அன்ட் எலற்றிக்கல்ஸ்**
இல.03 கே.கே.எஸ். வீதி, வல்வெட்டித்துறை
தொ.பே. 077 796 5442

**ஸ்ரீ முத்துமாரி ஸ்ரோர்ஸ்**
கே.கே.எஸ். வீதி, வல்வெட்டித்துறை
உரிமையாளர்: ஞா.பிறேமதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மயிலன் கந்தசாமி
(ஓய்வுபெற்ற புகையிரத திணைக்கள ஊழியர்)

திதி :பூரணை

நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி
இரண்டு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
மனதை விட்டு நீங்காது!



குடும்பத்தினர்.
மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

அன்னை மடியில் 14.01.1954
இறைவன் அடியில் 14.05.2014

கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 09.07.1928
இறப்பு 19.04.2016

எமது கல்லூரி ஆசிரியர்
சி.ஜெயபாலன்
அவர்களின் அன்புத் தந்தை
நாகநாதர்
சிவசுப்பிரமணியம்



அவர்களின் மறைவினால் துயருறும்
குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த பங்குனி மாதம் 23 ஆம் நாள் இறைவனடி
சேர்ந்த எமது குடும்பத்தலைவர்

வைத்திய கலாநிதி
அமரர் இராஜசிங்கம் தெய்வேந்திரன்

அவர்களின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய மற்றும் அனுதாபச் செய்திகள், மலர்வளையங்கள் அனுப்பிய அனைத்து நல் உள்ளங் களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் 22.04.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் சேர்.பொன். இராமநாதன் வீதியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபம்) நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

(68699)(12.17.18)

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

தோற்றம் 20 . 09 . 1933



மறைவு 25 . 04 . 2013

அமரர் துரையப்பா நடராஜா
(கார் கராஜ் உரிமையாளர்- ஐந்துசந்தி யாழ்ப்பாணம்)

எம்மை அன்போடு அரவணைத்து இவ்வையத்தினுள்
வாழ்வாங்கு வாழ வைத்த
அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களைப் பிரிந்து
மூன்று ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் சிரித்த முகம்
எங்கள் மனதை விட்டு என்றும் நீங்காது....

12 B.S வீதி,
யாழ்ப்பாணம்.

ந. முரளிதரன்
(மகன்)

# மரபணு ஆய்வு அறிக்கை தாமதம்; நிறுவனத்துக்கு அழைப்பாணை

## வித்தியா வழக்கில் நீதிமன்று உத்தரவு

வித்தியா வழக்கில் மரபணுப் பரிசோதனை அறிக்கை கிடைப்பதில் தாமதம் நிலவும் நிலையில், குறித்த மரபணு பரிசோத னையை மேற்கொள்ளும் நிறுவனத்துக்கு அழைப்பாணை அனுப்ப நீதிமன்று உத் தரவிட்டுள்ளது.

வழக்கில் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள 11 ஆவது மற்றும் 12 ஆவது சந்தேக நபர்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன் போதே குறித்த விடயம் மன்றில் முன் வைக்கப்பட்டது.

இதன்போது, மரபணு பரிசோதனை அறிக்கையை வழங்குவதில், அதன் ஆய்வை மேற்கொள்ளும் நிறுவனம் தாமதப்படுத்துவதாக, சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் அந்த நிறுவனம் மரபணு பரிசோதனை அறிக்கை வழங்குவதில் ஏற்படும் தாமதத்துக்கான விளக்கத்தை மன்றுக்கு வழங்குமாறு, அழைப்பாணை அனுப்ப நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன், குறித்த வழக்கில் நேற்று முற் படுத்தப்பட்ட சந்தேகநபர்கள் இருவருக் கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

(வ-4)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கந்தசாமி
கமலவேணி

திதி: பௌர்ணமி

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய அம்மாவே !
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும்
நிலைத்து வாழும்

குடும்பத்தினர்.
தோப்புக்காடு, காரைநகர்,
யாழ்ப்பாணம்.



தோற்றம் 04.08.1942
மறைவு 04.05.2015

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 . 05 . 1976



மறைவு 03 . 05 . 2015

அமரர் தியாகராஜா சசிக்குமார்

பெற்றவர்கள் பெருமை கொள்ள பேரொளியாய் ஒளிர்ந்தாயன்று !
உன் பிறப்பை நேசித்து உயர்வாய் மகிழ்வித்தாயன்று !
பெற்றெடுத்த செல்வங்களை பேரன்பை ஊட்டி விட்டு – சசி நீ....
பாதியில் பறந்த தென்ன ?
நிலையற்ற இவ் வாழ்வில் நிலையான முற்று வைத்து
சோதிப் பெருவெளிக்கு சொல்லாமல் சென்றதென்ன ?
வாழ்வை வென்று விட்டு வானகம் நீ சென்று விட்டாய்
ஏங்கித் தவித்து ஓராண்டை முடித்து விட்டோம்

பிரிவாலும் துயரத்தாலும் வாடும்
பெற்றோர்கள், சகோதரர்கள்.

[illegible]
[illegible]
யாழ்ப்பாணம்.

அப்பா : தியாகராஜா
அம்மா: புஸ்பராணி
தம்பி: ஜெயரூபன், பிரதீபன், மதனமோகன்
தங்கை: சுஜாதா, சியாமளா

### சிறீதரன் வருகை தந்திருந் தார்.

கிளிநொச்சிக்கு வருகைதந்த எதிர்க் கட்சித் தலைவர் உட்பட நாடாளு மன்ற உறுப்பி னர்களை இராணு வத்தின் கட்டுப்பாட் டில் உள்ள பரவிப் பாஞ்சான் பகுதிக் குள் முன்னனுமதி எதுவுமின்றி அழைத்து சென் றார் என்று நாடா ளுமன்ற உறுப்பி னர் சி. சிறீதரனின் மெய்ப்பாதுகாவ லர்மீது குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட் டுத் தொடர்பில் விளக்கமளிக்கவரு மாறு தெரிவித்து கிளிநொச்சி-இர ணைமடு உதவிப் பொலிஸ் அத்தியட் சகர் அலுவலகத் தில் இருந்து நாடா ளுமன்ற உறுப்பி னர் சி. சிறீதரனின் மெய்ப்பாதுகாவ லருக்கு அழைப் பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி- பர விப்பாஞ்சான் பகுதி யைச் சொந்த இட மாகக் கொண்ட மக் களின் காணிகளை அபகரித்த இராணு வத்தினர், அந்தப் பகுதியில் பெரியள வில் முகாமிட்டுக் குடிகொண்டுள் ளனர்.

சொந்த இடத்தில் இருக்க முடியாது வாடகை வீடு களிலும், உறவி னர் வீடுகளிலும் குடியிருக்கும் பொது மக்கள் நீண்ட நாள் களாக அதிகாரிகளி டமும், அரசியல் தலைவர்களிடமும் நிலத்தை விடுவிக் குமாறு கோரிக்கை களை முன்வைத்தி ருந்தனர்.

எனினும் மக்களு டைய கோரிக்கை கள் யாவும் அரசி னால் நிறைவேற் றப்படாத நிலை யில், கடந்த வாரம் வடக்குக்குப் பய ணம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலை வர் கிளிநொச்சிக் கும் சென்று, பரவிப் பாஞ்சான் பகுதி யில் இராணுவத்தி னரால் ஆக்கிரமிக் கப் பட்டிருக்கும் மக் களுடைய சொந் தக் காணிகளை பார் வையிட்டிருந்தார்.

இதன்போது, அந் தப் பகுதி மக்களை யும், தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை யும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம் பந்தன் பரவிப்பாஞ் சானுக்கு அழைத் துச்சென்றிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

(த-வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்த நேர அட்டவணை மே 1 முதல் நடைமுறைக்கு

## பின்பற்றாதோர் மீது நடவடிக்கை; வடக்கு போக்குவரத்து அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21

பலமுறை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இழுபறியால் நடைமுறைப்படுத்தப்படாதுள்ள பஸ் சேவைகளுக்கான இணைந்த நேர அட்டவணை எதிர்வரும் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இந்த இணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்துவதற்கு பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், இலங்கை போக்குவரத்துச் சபையின் ஒத்துழைப்பு கிடைத்திருக்கவில்லை. அதனை வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்துக்கும் கொண்டு வந்திருந்தார். அத்துடன் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண பிரதம பிராந்திய முகாமையாளர் உபாலி கிரிபத் துருவவை, போக்குவரத்து சீராக்கம் தொடர்பில் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு பணித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை, வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் அலுவலகத்தில் தனியார் பஸ் சங்கங்களின் பிரதிநிதிகள், இலங்கை போக்குவரத்துச் சபையின் அதிகாரிகள், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டம், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

> தனியார் மற்றும் அரச பஸ்களுக்கு இடையே போக்குவரத்தில் ஈடுபடும் நேரம், சேவைகளின் எண்ணிக்கைகள் தொடர்பாக நீண்ட காலமாக பல தரப்பட்ட சிக்கல்கள், முரண்பாடுகள் இருந்து வந்தன.

இந்தக் கூட்டத்திலேயே, இணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்துவதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தனியார் மற்றும் அரச பஸ்களுக்கு இடையே போக்குவரத்தில் ஈடுபடும் நேரம், சேவைகளின் எண்ணிக்கைகள் தொடர்பாக நீண்ட காலமாக பல தரப்பட்ட சிக்கல்கள், முரண்பாடுகள் இருந்து வந்தன. அதனால் இரு தரப்பினராலும் மக்களுக்கு சீரான சேவை வழங்கப்படவில்லை.

அவற்றைச் சீர்செய்து மக்களுக்கு சிறந்த போக்குவரத்தை ஏற்படுத்தும் முகமாக வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சால் தனியார் பஸ்களுக்கு 60 வீதமும், அரச பஸ்களுக்கு 40 வீதமும் என்று பஸ் சேவைகள் திட்டமிடப்பட்டன. இது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையில் பல கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. ஆனால், இந்தக் கலந்துரையாடல்கள் யாவும் வாய்ப் பேச்சுக்களுடனும், வாக்குவாதங்களுடனுமே முடிவுற்றதால் 60க்கு 40 என்ற விகிதாசாரமும் இணைந்த நேர அட்டவணையும் இழுபறி நிலையில் இருந்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போது நேர அட்டவணையில் சிறிய மாற்றங்கள் செய்யப்பட்டு இரு தரப்பினருடைய ஒப்புதலுடனும் இணைந்த நேர அட்டவணை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இந்த நேர அட்டவணையைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் அறிவித்துள்ளார். (ற-5-21)

## மீள்குடியேற்ற அமைச்சு ஊடாக 3,000 குடும்பங்களுக்கு உதவிகள்

### யாழ். மாவட்ட அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்.21

மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக யாழ். குடாநாட்டில் 3 ஆயிரம் குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது என்று யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

யாழ். குடாநாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பின்தங்கிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக 3 ஆயிரம் குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன. தற்போது மூவாயிரம் குடும்பங்களுக்கான பயனாளிகள் தேர்வு தற்போது இடம்பெறுகின்றது. அதில் விதவைகள், மாற்றுத்திறனாளிகள், அதிக சிறுவர்களையுடைய குடும்பங்கள் போன்றோருக்கு முன்னுரிமை அடிப்படையில் குறித்த தேர்வு இடம்பெறுகின்றது.

தேர்வு செய்யப்படும் பயனாளி விரும்பிய ஓர் வாழ்வாதார முறையைத் தேர்வு செய்ய முடியும். பயனாளிக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்படும்.

பயனாளிகள் தேர்வின் போது கடந்த காலங்களில் மத்திய , மாகாண அரசுகளில் உதவிகளைப் பெற்ற பயனாளிகள் உள்வாங்கப்படமாட்டார்கள் – என்றார். (ற-101)

## இ.போ.ச. பஸ்ஸை வழிமறித்து சாரதி மீது நால்வர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 21

தனியார் பஸ் நடத்துநர் உள்ளிட்ட நால்வர் கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸை வழிமறித்து அதன் சாரதி மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றுக்கு அருகில் நடந்துள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான சாரதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் அது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டியிலிருந்து பயணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் வவுனியாவில் தரித்து, அங்கிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்துக்குச் சென்றபோது தனியார் பஸ் துரத்தி வந்தது என்றும் இரு பஸ்களும் போட்டியிட்டு பயணித்தன என்றும் பயணிகள் தெரிவித்தனர்.

தாக்குதலையடுத்து சாரதி சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் எனவும், பயணிகள் வேறு வாகனங்களில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் – முருங்கனைச் சேர்ந்த சாரதியே தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4,9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் கையகப்படுத்தியுள்ள பொது இடங்களை விடுவியுங்கள்

## எதிர்க்கட்சித் தலைவரிடம் முல்லை. பொது அமைப்புகள் கோரிக்கை

முல்லைத்தீவு. ஏப்.21

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் உள்ள பொது இடங்கள் - பல ஏக்கர் நிலங்களைக் கொண்ட தனியார் காணிகள் தற்போதும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டினுள் இருக்கின்றன. அவற்றை மீட்டு தர வேண்டும். – இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் எதிர்க்கட்சி தலைவர் இரா சம்பந்தனிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மாங்குளம் பகுதிக்குச் சென்றிருந்த எதிர்க்கட்சி தலைவர் அங்கு மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். அதன்போதே பொது அமைப்புக்கள் இந்த கோரிக்கையை முன்வைத்தனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள மாங்குளம் நகரில் மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு எதிரே அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தை மையப்படுத்தி இராணுவத்தினர் சிறு முகாம்களை அமைத்துள்ளனர். அதனால் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்ட காலம் முதல் கடந்த ஏழு வருடங்களாக தமது பொதுத் தேவைகளுக்கு இந்தக் கட்டடத்தை பாவிக்க முடியாத அவல நிலையில் மக் கள் உள்ளனர்.

அவற்றை இராணுவத்தினரிடம் இருந்து விடுவிக்கவும், மாங்குளம் பிரதான இராணுவ முகாமை அண்டியதாக உள்ள மத்திய வகுப்பைச் சேர்ந்த மக்களின் 30 ஏக்கரைக் கொண்ட காணிகளை இராணுவத்தினர் தம் வசம் வைத்துள்ளனர். அவற்றை விடுவித்து உதவ வேண்டும் என மாங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எதிர்க்கட்சி தலைவரிடம் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள ஆலங்குளம் கிராமத்தைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தமது பகுதியிலும் மீள் குடியமர்வின் பின்னர் அங்குள்ள சிறார்களின் முன்பள்ளிக் கட்டடத்திலும், பொது நோக்கு மண்டபத்திலும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டினார்.

மீள்குடியமர்த்தப்பட்டு ஏழு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இராணுவத்தினரால் அவை இன்னமும் கையளிக்கப்படவில்லை. சிறார்களின் கல்வி வளர்ச்சியையும் பொது மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டும் குறித்த கட்டடங்களை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்து உதவ வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

மக்களுடைய கோரிக்கை தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது; இது பற்றிய தகவல்கள் அனைத்தும் ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலாளர் என்ற ரீதியில் இதை விடவும், எந்த முடிவும் எடுக்கும் அதிகாரம் எனக்கு இல்லை.- என்று தெரிவித்தார்.

(ற-102,ரி7)

## வறட்சி காரணமாக மன்னாரில் குறைந்தளவு சிறுபோகச் செய்கை

மன்னார். ஏப். 21

கடும் வறட்சி காரணமாக மன்னார் மாவட்டத்தில் இந்த ஆண்டு சிறுபோக பயிர் செய்கை குறைந்தளவு நிலப்பரப்பிலேயே மேற்கொள்ளப்பட உள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி முதல் மன்னார் மாவட்டத்தில் சிறுபோகத்துக்கான விதைப்புகளை ஆரம்பிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான சிறுபோக நெற்பயிர் செய்கையின் ஆயத்தங்கள் அனைத்தும் முடிவுற்ற நிலையில்- விதைப்பு தொடர்பான முடிவெடுக்கும் கூட்டம் நேற்று மன்னார் உயிலங்குளம் வண்ணாமோட்டை விவசாய பயிற்சி நிலையத்தில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது. அதன்போதே இவ்வாறு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை செய்யப்படவுள்ளது. கடந்த ஆண்டு 10 அடியாகக் காணப்பட்ட கட்டுக்கரை குளத்தின் நீர் மட்டம் இவ்வாண்டு 7 முதல் 8 அடியாக குறைவடைந்ததை அடுத்தே இவ்வாண்டு சிறுபோகத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

சிறு போகத்தின் விதைப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட உள்ளது. விதைப்பு எதிர்வரும் 21ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் குறித்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்த முறை சிறுபோக விதைப்புக்காக 13 வகையான நெல்லினங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கூட்டத்தில் மன்னார் பிரதேச செயலாளர் வசந்தகுமார், நானாட்டான் பிரதேச செயலாளர் பரமதாஸ், மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-21)

## சதாவதானியின் 109ஆவது ஆண்டு நினைவு விழா நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.21

சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 109 ஆவது ஆண்டு நினைவு விழா நிகழ்வுகள் இன்று மாலை 5.30 மணியளவில் பருத்தித்துறை சதாவதானி சனசமூக நிலைய முன்றிலில் அமைந்துள்ள சதாவதானி அரங்கில் இடம் பெறவுள்ளன.

சனசமூக நிலையத்தின் தலைவர் பா.கஜேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜனும், சிறப்பு விருந்தினராக பொருளியல் ஆய்வாளர் கலாநிதி மு.சர்வானந்தனும், கௌரவ விருந்தினராக பருத்தித்துறை நகராட்சி மன்ற செயலாளர் பு.ரமேஸ்வரனும், சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கத் தலைவர் அ.ஜெயநிமலனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் சதாவதானி முன்பள்ளி மாணவர்களின் மாம்பழக் கதை நாடகம், உழவர் நடனம், சனசமூக நிலைய உறுப்பினர் நா.சண்முகதாசன் வழங்கும் ஆலடிப்பிள்ளையார் கவிதை, பேச்சு மற்றும் கலைநிகழ்வுகள் குருபூசை தின போட்டிகளில் முதலிடம் பெற்ற பேச்சுக்கள் என்பன இடம்பெறவுள்ளன.

அத்துடன் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையின் குருபூசை தினத்தை முன்னிட்டு 'உதயன்' பத்திரிகையின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளில், இல. 10, இராஜ வீதி நல்லூரைச் சேர்ந்த அருளானந்தம் விஜயராம் முதலிடத்தையும் இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியை சேர்ந்த மார்க் கண்டு செல்வதாஸ் இரண்டாம் இடத்தையும், இல.07, சோமசுந் தரம் அவனியு சுண்டுக்குளியைச் சேர்ந்த திருமதி சோழமாதேவி அருளானந்தம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

(ற-ரி2)

## வருடாந்த திருவிழா

அரியாலை புனித யூதாததேயு ஆலய வருடாந்த திருவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு இடம்பெறும். ஒவ்வொரு நாளும் அயற் பங்கு ஆலயத்தினர் வழிபாடுகளை நடத்துவர்.

இந்த மாதம் 30ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் முதலாம் திகதி காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது என்று பங்குத்தந்தை அருட்திரு. ஜே. நீக்லஸ் அடிகள் தெரிவித்துள்ளார். (ற-135)

## தந்தை செல்வா நினைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப்.21

தந்தை செல்வா நினைவு தின நிகழ்வுகள் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் கொழும்பு 13 இல் அமைந்துள்ள விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

விழாத் தலைவர் ஏ.சந்தானம் தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வுகளில் பிரதம விருந்தினர்களாக தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மொழிகள் அமுலாக்கல் அமைச்சர் மனோ கணேசன் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக மேல் மாகாணசபை உறுப்பினர் கே.ரி.குருசாமி, பேராசிரியர் சபா ஜெயராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ரி2)

## வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள்

வவுனியா. ஏப். 21

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் வவுனியாவில் வறுமை கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வவுனியா மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் வழங்கப்பட்டன.



இந்த நிகழ்வு நேற்று வவுனியா பூந்தோட்டத்தில் உள்ள கால்நடை உற்பத்திப் பண்ணையில் நடைபெற்றது. வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் அதில் கலந்து கொண்டு உதவி பொருள்களை வழங்கினார்.

இதன்போது 15 பேருக்கு ஆடுகளும், ஆட்டு கொட்டகை அமைப்பதற்கான உதவி 20 பேருக்கும், 40 பேருக்கு காளை மாடுகளும், மாட்டு கொட்டகை அமைப்பதற்கான உதவிகள் 10 பேருக்கும், ஒரு மாதக் கோழிக் குஞ்சுகள் 270 பேருக்கும், ஒருநாள் குஞ்சுகள் 300 பேருக்கும், கால்நடைகளுக்கு புல் வளர்ப்பதற்கான உதவி, முள்ளுக்கம்பிகள் உள்ளிட்ட பொருட்கள் 16 பேருக்கும், 500 பேருக்கு விற்றமின்கள் அடங்கிய பொதிகளும், 80 பேருக்கு பால் தாங்கிகளும் வழங்கப்பட்டன.

வடக்குமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராஜா, இ.இந்திரராஜா, வவுனியாமாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி தபோதினி தேவனேசன் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய வடக்கு விவசாய அமைச்சர் ஐங்கரநேசன்–

இயங்காத நிலையில் உள்ள பால் பதனிடும் நிலையத்தை இயங்குவதற்கும், யாழ்பாணத்தில் உள்ள பால் பதனிடும் நிலையங்களை விரிவுபடுத்துவதற்கும் வட மாகாணத்தில் பாலை வீடுகளுக்கு பொதி செய்து விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளையும் வடக்கு மாகாண சபையால் மேற்கொள்வதற்கான முயற்சியை தான் எடுப்பேன்– என்று தெரிவித்தார்.

(ற-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குத்தொடுவாயில் அடாவடியாக தென்பகுதி மீனவர்கள் வாடி அமைப்பு

## அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ நடவடிக்கை எடுக்கவில்லை என முல்லைத்தீவு மீனவர்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு. ஏப். 21
கொக்குத்தொடுவாயில் சட்ட விரோதமாக கடற்றொழிலில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் எந்தவிதமான அனுமதியுமின்றி அடாவடித்தனமான முறையில் புதிதாக 7 வாடிகளை அமைத்துள்ளனர் என்று முல்லைத்தீவு மீனவர்கள் தெரிவித்தனர். தென்னிலங்கை மீனவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரங்கள் அரசியல் தலைவர்களுக்கோ, அதிகாரிகளுக்கோ இல்லையா எனவும் அவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட வாடிகளை பார்வையிடச் சென்ற இரண்டு கிராம சேவகர்கள், தென்னிலங்கை மீனவர்களால் தாக்கப்பட்டமையும், இது விடயத்தில் இராணுவத்தினர் தலையிட்டமையும் நல்லாட்சி அரசின் முகமூடியை கிழித்தெறிந்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் கடற்கரைப் பிரதேசத்தில் மாவட்ட நிர்வாகங்களின் அனுமதியின்றி சட்ட விரோதமாக கடற்றொழிலில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் கடந்த 10ஆம் திகதி தனியார் ஒருவரின் காணியில் அடாத்தான முறையில் வாடி அமைக்க முற்பட்டுள்ளார்கள். அதையடுத்து குறித்த காணி உரிமையாளர் கிராம சேவகர்களிடம் இது குறித்துக் கூறவே காணி உரிமையாளரின் முறைப்பாட்டின் அடிப்படையில் சட்ட விரோதமான முறையில் தென்னிலங்கை மீனவர்களால் அமைக்கப்பட்ட வாடிகளைப் பார்வையிடச் சென்ற கிராமசேவகர் தங்களது அனுமதி இன்றி வாடி அமைக்க முடியாது என தென்னிலங்கை மீனவர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதையடுத்து வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட தென்னிலங்கை மீனவர்கள் இறுதியில் கிராம சேவகர்களைத் தாக்கியுள்ளனர். அத்தோடு இராணுவத்தினரை அழைத்துகிராமசேவகர்களையும் அச்சுறுத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து பொலிஸாரின் கவனத்துக்கும் மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்கும் குறித்த, விடயம் கொண்டு செல்லப்பட்டது. அத்தோடு பொலிஸ் நிலையத்திலும் முறைபாடு பதிவு செய்யப்பட்டுகிராமசேவகர்களை தாக்கினார்கள் என்று கூறி தென்னிலங்கை மீனவர்கள் 10 பேர் மாஞ்சோலைபொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

> சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட வாடிகளை பார்வையிடச் சென்ற இரண்டு கிராம சேவகர்கள் தென்னிலங்கை மீனவர்களால் தாக்கப்பட்டமையும், இது விடயத்தில் இராணுவத்தினர் தலையிட்டமையும் நல்லாட்சி அரசின் முகமூடியை கிழித்தெறிந்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் தற்போது இரவோடு இரவாக மீண்டும் படையினரின்அனுசரணையுடன் அடாவடித்தனமாக, மேலும் 7 வாடிகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் - தற்போது தென்னிலங்கை மீனவர்களது வாடிகள் 25 ஆக அதிகரித்துள்ளன என்றும் - முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் தெரிவித்தனர். தென்னிலங்கை மீனவர்களுடய இந்த அராஜகத்தை கட்டுப்படுத்துவதற்கு அரசியல் தலைவர்களாலோ, அதிகாரிகளாலோ முடியாதா என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மீனவர்களுடைய குற்றச்சாட்டு குறித்த முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது;

குறித்த சம்பவம் தொடர்பில் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இருப்பினும் புது வருட விடுமுறை, கொழும்புக் கலந்துரையாடல் இவை அனைத்துக்கும் பின்பு இன்று (நேற்று ) பணியை ஆரம்பித்துள்ளோம். இருப்பினும் உடனடியாக இது தொடர்பில் ஓர் முழுமையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படும்- என்றார். (ஞ-21,101)

## சிவமகாராசாவின் சிலை திறப்பு



யாழ்ப்பாணம்,ஏப்.21
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவருமான சின்னத்தம்பி சிவமகாராசாவின் பத்தாவது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு, அவரது உருவச் சிலை தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் கடந்த சனிக்கிழமை திரை நீக்கம் செய்யப்பட்டது. தமிழரசுக் கட்சியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா சிலையைத் திரை நீக்கம் செய்து வைத்தார்: தெல்லிப்பழைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய தலைவர் உமாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், புளொட் தலைவரும், யாழ் . மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், வட மாகாண சபை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வட மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் தலைவர் ஆறு.திருமுருகன், யாழ். பல்கலைக்கழக முன்னை நாள் உபவேந்தர் சண்முகலிங்கம் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ஞ-ஐ)

### ஒளிரும் வாழ்வு அமைப்பு கட்டடத்துக்கு அடிக்கல்

'ஒளிரும் வாழ்வு' அமைப்புக்கான புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு மல்லாவியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வன்னிநாடாளுமன்ற உறுப்பினர் திரு மதி சாந்தி சிறீஸ்கந்தராஜா கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார். இதன்போது துணுக்காய் பிரேதச செயலர் பிரிவில் மல்லாவி மத்திய கல்லூரியில் இயங்கி வரும் விசேட தேவையுடையவர்களின் பிள்ளைகளின் போக்குவரத்து வசதிக்காக 13 சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (ஞ-ஐ)

## காணாமற் ஆக்கப்பட்டோர் குறித்த ஆணைக்குழு அமர்வு கிளிநொச்சியில்

கிளிநொச்சி. ஏப். 21
காணாமற் ஆக்கப்பட்டோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அடுத்த அமர்வு இந்த மாதம் கிளிநொச்சியில் இடம்பெற உள்ளது என்று ஆணைக்குவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் உள்நாட்டு போரின் போது ஆயுத தாரிகளினாலும், வேறு நபர்களினாலும் கடத் தப்பட்டு காணாமற் ஆக்கப்பட்வர்களைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் இரண்டாம் கட்ட விசாரணைகள் கடந்த மாதங்களில் யாழ்ப்பாணம்,வவுனியா,மன்னார்,முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைபெற்றது. அதன்தொடர்ச்சியாகஆணைக்குழு கிளிநொச்சியில் தனது அடுத்த அமர்வை நடத்த உள்ளது.

கிளிநொச்சியில் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையான மூன்று நாள்கள் அமர்வுகள் நடைபெறவுள்ளன. கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டவர்களுக்காக 25, 26ஆம் திகதியும், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டவர்களுக்காக 27ஆம் திகதியும், பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான அமர்வுகள் 28ஆம் திகதியும் நடைபெறும்.

குறித்த ஆணைக்குழுவின் விசாரணைகள் யாவும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவும் எனவும் இவர்களுக்கான அழைப்பாணைகள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரி வினூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (ஞ-21)

## முல்லை. 'நிதர்சனம்' அமைப்பின் ஏற்பாட்டில் விளையாட்டு விழா



முல்லைத்தீவு, ஏப்.21
முல்லைத்தீவு "நிதர்சனம்" அமைப்பினரால் விசேட தேவைக்குரிய சிறுவர்களுக்கான சித்திரை புது வருட விளையாட்டு விழா கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்டது.

அமைப்பின் தலைவி வி.விசல்யா தலைமையில் முள்ளியவளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடாசாலை மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வில், இறுதிப் போரில் அங்கவீனவர்களாக ஆக்கப்பட்ட சிறார்களும், பிறப்பிலேயே விசேட தேவையுடையவர்களாக பிறந்த சிறார்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் "விதியை மாற்றிட நெறி செய்வோம்", "அவர்கள் தமது சுய தெரிவை மேற்கொள்வதில் சுதந்திரமானவர்கள்", "இவர்களும் சமூகத்தில் எல்லா மக்களுக்கும் உள்ள உரிமைகளைப் பெற தகுதி உள்ளவர்கள்", "அனைவருக்கும் சம வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்", "அனைவருக்கும் சம அணுகுதல் வழக்கப்பட வேண்டும்" போன்ற விழிப்பூட்டும் வாசகங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சைல்ட் பண்ட் நிறுவனத்தின் வன்னிக்கான திட்டப் பணிப்பாளர் அகிலன் குருஸ், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்கும், கலந்துகொண்ட சிறுவர்களுக்கும் பரிசில்களையும் கைவிசேடமும் வழங்கினார். (ஞ-ஐ-ரி5-102)

### கிராமத்துக்கு ஒரு மில்லியன்; முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

சாவகச்சேரி, ஏப்.21
தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 60 கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப் படவுள்ள கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத் திட்டத்துக்கான முன்மொழிவுகளை நேற்றுவரை சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் பிரிவு தவிர்ந்த ஏனைய 59 கிராம அலுவலர் பிரிவுகளும் சமர்ப்பித்துள்ளன என பிரதேச செயலக வட்டாரங்கள்தெரிவித்தன. சில கிராம அலுவலர் பிரிவுகள்மட்டும்ஒரு வேலைத் திட்டத்தையும் ஏனையவை இரண்டுதொடக்கம் ஐந்து வேலைத் திட்டங்களையும் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து கையளித்துள்ளன எனவும் தெரிவிக்கப் பட்டது. (ஞ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதச் சட்டத்துக்கு பதில் தீவிரவாத முறியடிப்புச் சட்டம்

## உருவாக்க இலங்கைக்கு உதவி வழங்கவுள்ளது ஐ.நா.

கொழும்பு, ஏப். 21
சர்வதேச நடைமுறைகளுக்கு ஏற்பவும், ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்களுக்கு அமைவாகவும், பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக, விரிவான தீவிரவாத முறியடிப்புச்சட்டம்ஒன்றை கொண்டு வருவதற்கு, இலங்கைக்கு உதவி வழங்கப்படவுள்ளது என்று ஐ.நா.வின் தீவிரவாத முறியடிப்பு குழுவின் நிறைவேற்றுப் பணியகம் வாக்குறுதி அளித்துள்ளது.

> நியூயோர்க்கில் கடந்த திங்கட்கிழமை சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, ஐ.நா.வின் தீவிரவாத முறியடிப்பு குழுவின் நிறைவேற்றுப் பணியகத்தின், நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜீன் போல் லபோட்டைச் சந்தித்த போதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க்கில் கடந்த திங்கட்கிழமை சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, ஐ.நா.வின் தீவிரவாத முறியடிப்புக் குழுவின் நிறைவேற்றுப் பணியகத்தின், நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜீன் போல் லபோட்டைச் சந்தித்த போதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது உலகளாவிய ரீதியில் தலைதூக்கியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கவாதம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையில் பயங்கரவாதக் குழுக்களின் அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும், ஆலோசனை நடத்தப்பட்டது.

பயங்கரவாதத்தை முழுமையாக இல்லாமல் செய்வதற்கு தொழில்நுட்ப ரீதியான உதவிகளை ஐ.நா. வழங்கும் என்றும் ஜனநாயக வலுவூட்டல் செயற்பாடுகளுக்கு ஐ.நா. பூரண ஆதரவை வழங்கும் என்று நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜீன் லெபோட் குறிப்பிட்டுள்ளார்.
(ற-5)

# மே தினக் கூட்டத்துக்கு அழைக்கவில்லை சு.க

## மகிந்த எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.21
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்துக்கு அழைப்பு வரவில்லை. அழைப்பில்லாமல் திருமண வீட்டுக்குச் செல்வது முறையற்றது. எனவே, அழைப்புக் கிடைத்த கூட்டு எதிரணியின் மேதினக் கூட்டத்திலேயே கலந்துகொள்வேன்- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின், பத்திரமுல்லை அலு வலகத்தில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பால் காய்ச்சும் வைபவம் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்திருந்தோம். மிகவும் எளிதாக உண்ணக் கூடிய வகையில் கேக்கை தயாரித்திருந்தோம். ஆனால் தற்போதைய அரசு திடீரென ஆட்சிக்கு வந்து அனைத்தையும் சீரழித்து விட்டது. அதாவது நாம் தயாரித்து வைத்திருந்த கேக்கை தற்போதைய அரசு ஒழுங்காக உண்ணவில்லை. அனைத்தையும் குழப்பிவிட்டது.

நாட்டின் பொருளாதாரம் மிகமிக மோசமான நிலையில் காணப்படுகின்றது. எதிர்வரும் மே தினம் தொடர்பாக நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். கொழும்பில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள கூட் டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு எனக்கு அழைப்புக் கிடைத்துள்ளது. ஆனால் காலியில் நடைபெறவுள்ள மேதினக் கூட்டம் தொடர்பில் எமக்கு எந்த விதமான அழைப்போ அல்லது அறி விப்போ இதுவரை கிடைக்கப் பெறவில்லை என்றார்.
(ற-ஐ-5)

# திடீர் மின்தடையால் லிப்டில் சிக்கிய பெண்



கொழும்பு, ஏப். 21
கொழும்பு சொகுசு மாடி வீட்டுத் தொகுதியொன்றிலுள்ள ஏழாவது மாடியில் இருந்து லிப்டில் கீழ் மாடியை நோக்கி இறங்கிக் கொண்டிருந்த பெண் ஒருவர், மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் அதனுள் சிக்கிக் கொண்டுள்ளார். 45 நிமிட நேரத்தின் பின்னர் அவர் காப்பற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மின் துண்டிக்கப்பட்டவுடன் லிப்டில் இடையில் சிக்கியுள்ளேன் என்று தனது தாய்க்கு அவர் தொலைபேசியில் அறிவித்துள்ளார். தாய் உடனடியாகப் பொலிஸாருக்கோ, தீயணைப்புப் பிரிவுக்கோ அறிவிக்கத் தவறியதால் அவரை மீட்கத் தாமதம் ஏற்பட்டது என்று குறிப்பிடப்படுகின்றது.

தீயணைப்புப் பிரிவுக்கு தகவல் வழங்கிச் சுமார் 5 நிமிடங்களுக்குள் குறித்த பெண் மீட்கப்பட்டுள்ளார். ஹைட்ரோலிக் இயந்திரத்தை உடைத்து குறித்த பெண்ணை மீட்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்று தீயணைப்புப் பிரிவு அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளாா.
(ற-5)

# பெண் பொலிஸாருக்கு இரவில் தொல்லை கொடுக்கும் அதிகாரி

## பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, ஏப். 21
பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொல்லை கொடுத்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் கிழக்கின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு எதிராக விசாரணை நடத்தி இரு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கிழக்கு மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்க உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலர் பொலிஸ்ஆணைக்குழுவுக்குச்செய்துள்ள முறைப்பாட்டின் பிரதியொன்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்துக்கு கிடைத்ததை அடுத்தே இது குறித்த விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

விசாரணைகளில் குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கத்தக்க ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் வெளிப்படின் அதன் கீழ் நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தொடர்ந்தும் குறித்த உயர் பதவியில் இருப்பது விசாரணைக்குப் பாதிப்பை ஏற்படுத்துமாயின் அவரை உடனடியாக இடமாற்றம் செய்யவும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்கவால் விசாரணை அதிகாரிக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் அறிய முடிகிறது.

குறித்த உயர் பொலிஸ் அதிகாரி கடந்த டிசம்பர் மாதமே கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். பொலிஸ் விசேட அதிரடிப்படையில் உள்ள இருவருடன் சேர்ந்து அந்த அதிகாரி, பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குத் தொல்லை கொடுக்கின்றார் என்றும், இரவு வேளைகளில் தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் குறுஞ்செய்திகளை அனுப்புவதால் பல பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்களது தொலைபேசி இலக்கங்களை மாற்றியுள்ளனர் என்றும் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ள முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி பொலிஸ் நிலையம் ஒன்றில் இடம் பெற்ற மாதாந்தச் சோதனை நடவடிக்கை ஒன்றில் குறித்த பொலிஸ் அதிகாரி தனது இடுப்புப் பட்டியைக் கழற்றிப் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடம் கொடுத்துள்ளார் என்றும் அதனால் அந்தப் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகினார் என்றும் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.
(ற-5)

# வாட்டும் கடும் வெப்பநிலையால் நுவரெலியாவில் மக்கள் கூட்டம்

கொழும்பு, ஏப்.21
நாட்டில் நிலவும் அதிகரித்த வெப்பத்திலிருந்து, தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஏராளமானோர் நுவரெலியாப் பிரதேசத்துக்குப் படையெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றிலேயே அதிக வெப்பத்தைக் கொண்ட நாள்களாக தற்போதைய நாள்களைக் குறிப்பிட முடியும் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இந்து சமுத்திரத்தில் காற்றலைகள் மிகக் குறைந்து போயுள்ளமை, முகில்கள் குறைவடைந்திருப்பது, சூரியன் உச்சத்தில் நிற்பது, கடல் வெப்பநிலையின் அதிகரிப்பு என்பன இந்த வெப்ப நிலைக்குக் காரணமாகவுள்ளன என்று காலநிலை அவதான நிலையத்தின் பணிப்பாளரான சரத் பிரேமலால் தெரிவித் துள்ளார்.

இந்த உயர் வெப்ப நிலை எதிர்வரும் மே மாத நடுப்பகுதி வரையான காலம் வரை நிலவும் எனவும் அதற்கு முன்னராக இந்த வெப்பம் தணியும் என்று எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது வவுனியாவிலேயே அதிகரித்த வெப்ப நிலை பதிவாகியுள்ளதோடு, அநுராதபுரம், பொலனறுவை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி, பொத்துவில் பிரதேசங்களிலும் அதிகூடிய வெப்பம் நிலவுகின்றது.
(ற-ஐ-22)

# ஐ.ம.சு.மு. மே தினக் கூட்டத்துக்கு வருமாறு மகிந்தவுக்கு அழைப்பு

## கடிதம் அனுப்பினார் பொதுச் செயலாளர் அமரவீர

கொழும்பு, ஏப்.21
கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபடுவோம் எனத் தெரிவித்து, காலியில் மைத்திரி தலைமையில் இடம்பெறும் மே தினக் கூட்டத்துக்கு வருகை தருமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

காலியில் இடம்பெறும் மே தினக் கூட்டத்துக்குத் தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்த நிலையிலேயே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் - ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மே தினக் கூட்டம் காலியில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இத்தால் அழைப்பு விடுக்கின்றேன். கட்சி என்ற ரீதியில் நாம் ஒன்றுபட வேண்டும். அப்போது [illegible] யெழுப்ப முடியும். எனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்த வேண்டும். அத்தோடு அதன் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் பலப் படுத்தப்பட வேண்டும்.



இதற்கு நாம் ஒற்றுமையாக இணைந்து செயலாற்ற வேண்டும். அப்போது தான் எதிர்காலத்தில் நடக்கவுள்ள தேர்தல்களில் வெற்றி கொள்ள முடியும். எமது தலைமையில் ஆட்சியதிகாரத்தைப் பிடிக்க முடியும். எனவே கருத்து முரண்பாடுகளைக் கைவிட்டு நாம் ஒன்றுபட வேண்டும். அதனால் காலியில் இடம்பெறும் கூட்டத்தில் நீங்கள் கலந்து கொள்ள வேண்டும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் அனல் மின் நிலையம் இந்தியாவின் சதித் திட்டமே

## இலங்கை மின்சார சேவையாளர் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 21
மின்சாரத்துறையில் இலங்கையை ஆக்கிரமிக்கும் சதித் திட்டமே இந்தியாவின் சம்பூர் அனல் மின் உற்பத்தித் திட்டமாகும். இந்தியாவுடனான சம்பூர் உடன்படிக்கையின் விவரங்களை அரசு பகிரங்கப்படுத்த வேண்டும். - இவ்வாறு சவால் விடுத்துள்ளது, மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கமான இலங்கை மின்சார சேவையாளர் சங்கம்.

இது தொடர்பில் இலங்கை மின்சார சேவையாளர் சங்க பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளதாவது-

இந்தியாவின் சம்பூர் அனல் மின் உற்பத்தித்திட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணக்கப்பாட்டுடனேயே இந்தியாவால் ஆரம்பிக்கப்பட்டது. இன்று கூட்டமைப்பினர் இதனை எதிர்ப்பது மக்களை ஏமாற்றும் நாடகமாகும். இந்தத் திட்டத்துக்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மற்றும் சூழலியலாளர்களின் எதிர்ப்புகள் தலைதூக்கியதால் அதனை எதிர்ப்பது போன்ற நாடகத்தை கூட்டமைப்பினர் அரங் கேற்றியுள்ளனர்.

சம்பூர் திட்டத்தில் ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், ஏன் குப்பை அகற்றும் பணியில் கூட இந்தியர்களே தொழில்புரிவதோடு அந்தத் திட்ட பகுதிகளில் இலங்கையர்கள் எவரும் உள்ளே செல்லவும் முடியாது. இங்கு 500 மெகா வோட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

> "சென்னையில் மின் உற்பத்தி நிலையம் ஒன்று இரண்டாம் கட்டமாக அமைக்கப்படவுள்ளது. அதில் 500 மெகாவோட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்வதோடு, அதனை கடலுக்கடியில் கேபிள் மூலம் இலங்கைக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பின்னணியிலும் சதித்திட்டம் உள்ளது.

அதேவேளை சென்னையில் மின் உற்பத்தி நிலையம் ஒன்று இரண்டாம் கட்டமாக அமைக் கப்படவுள்ளது. அதில் 500 மெகா வோட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்வதோடு, அதனை கடலுக்கடியில்கேபிள்மூலம்இலங்கைக்குவழங்கதிட்டமிடப்பட்டுள்ளது. இதன் பின்னணியிலும் சதித் திட்டம் உள்ளது.

மன்னார் கடல் பிரதேசத்தில் எண்ணெய் வளம்உள்ளமைகண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இங்கு அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள சீனாவுக்கோ, ஜப்பானுக்கோ கையளிக்க இலங்கை அரசு முயற்சித்தால், அதற்கு இந்தியா எதிர்ப்பு தெரிவிக்கும். அத்தோடு மின்சார விநியோகத்தை தடை செய்வோம் என்று எச்சரிக்கை விடுக்கும். இவ்வாறானதோர் நிலையில் எமது நாடு இருளில் மூழ்கும் ஆபத்து ஏற்படும்.

இந்தியாவின் அச்சுறுத்தலுக்கு அடிபணிய வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்படும். இவ்வாறு மின்சாரத்துறையில் இலங்கையை ஆக்கிரமிக்கும் சதித்திட்டமே இந்தியாவின் சம்பூர் அனல் மின் உற்பத்தித் திட்டமாகும். எனவே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இந்தியா செய்து கொண்ட சம்பூர் திட்டம் தொடர்பானஉடன்படிக்கையை முடிந்தால் புதிய அரசு பகிரங்கப்படுத்த வேண்டும். இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டால் இலங்கை இந்தியாவின் அடிமை நாடாக மாறி விடும் - என்றார். (ற-5)

# பனாமா ஆவணம் தொடர்பில் விரைவு நடவடிக்கை தேவை

## ஊழலுக்கு எதிரான மக்கள் குரல் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஏப். 21
பனாமா ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில் மத்திய வங்கி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஊழலுக்கு எதிரான மக்கள் குரல் அமைப்பின் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால கட்சியின் தலைமைத்துவத்தைத்தக்கவைத்துக் கொள்வதற்காக மகிந்த ஆட்சியில் ஊழல் செய்தவர்களைத் தன் பக்கம் வளைத்துப் போடுகின்றார். ஊழல் செய்தவர்களின் கோப்புக்களை வைத்துக் கொண்டு அவர்களை தமது தேவைக்கு ஐக்கிய தேசியக் கட்சி பயன்படுத்தி வருகின்றது. - என்றும்அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நிதி மோசடிப் பிரிவின் விசாரணை தொடரும் என்று நம்பிக்கையில்லை. சட்டவிரோதச் செயற் பாடுகள் இடம்பெறுகின்றன. புதியபொலிஸ் தலைவராவது இதற்கு எதிராகச் செயற்படவேண்டும். சர்வதேச நாடுகளையே உலுக்கிய பனாமா ஆவணங்களால்பலநாடுகளின்தலைவர்கள் நிலை குலைந்துள்ளனர்.

ஐஸ்லாந்து பிரதமர் பதவி விலகவும் நேரிட்டது. குறித்த ஆவணங்களில் இலங்கையிலிருந்தும் சட்டவிரோதமான முறையில் வரி கட்டாமல் பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும்பாலும் அமைச்சர்களின் ஆலோசகர்களாகவும், உறவினர்களாகவும் உள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மத்திய வங்கி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசும் கூடிய கவனத்துடன் இந்த விடயத்தைப் பரிசீலிக்கவேண்டும். எனவே, நாங்கள் கொடுத்துள்ள அனைத்து முறைப்பாடுகளும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்காவிடின் மக்களை ஒன்றிணைத்து வீதியில் இறங்குவோம். அத்துடன், சில விடயங்களை ஊடகங்களில்தான் அறிந்து கொள்கின்றேன் என்று மைத்திரி கூறுவது பொறுப்பற்ற கருத்தாகும் - என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## தெற்காசியாவின் மிக உயரமான புத்தர் சிலை சனியன்று திறப்பு

கொழும்பு, ஏப். 21
தெற்காசியாவின் மிக உயரமான புத்தர் சிலையை, மத்துகமவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளைமறுதினம் சனிக்கிழமை திறந்து வைக்கவுள்ளார்.

மத்துகமவில் உள்ள பட்டமுல்ல கந்த சர்வதேச பௌத்த நிலையத்தில், அமைக்கப்பட்டுள்ள இந்தப் புத்தர் சிலை, 135 அடி உயரமானது.

சுமார் 90 மில்லியன் ரூபா செலவில், மத்துகம தொகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர், ஜெகத் பின்னகொட விதானவால் இந்தப் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரவில் உள்ள பழைமை வாய்ந்த அவுகண புத்தர் சிலையைப் போன்று இந்த புத்தர் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தர் சிலைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள வண. மாதுளுவாவே சோபித தேரரின் சிலையையும் ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார். (ற-5)

## பாதாள உலகக் குழுவை சேர்ந்த முன்னாள் புலி உறுப்பினர் கைது

கொழும்பு, ஏப். 21
கொழும்பில் பாதாள உலகக் குழுவுடன் இணைந்து செயற்பட்ட, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறப்பு அதிரடிப் படையின் புலனாய்வு அதிகாரிகளால், காலியில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 9.மி.மீ கைத்துப்பாக்கி, ஒரு மகசின், 8 ரவைகள், மூன்று கைத் தொலைபேசிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆரம்பக்கட்ட விசாரணைகளில், சந்தேக நபர் கொட்டாஞ்சேனையில் வசித்து வருபவர் என்றும், 29 வயதான ஸ்ரான்லி கென்னடி என்றும் தெரிய வந்துள்ளது.

முக்கியமான பாதாள உலகக் குழு உறுப்பினரான இவர், கென்னடி என்று அழைக்கப்பட்டு வருபவர் என்றும், நான்கு கொலைகள் தொடர்பாக தேடப்பட்டவர் என்றும் தெரியவந்துள்ளது.

இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில், இராணுவப் பயிற்சி பெற்று, ஐந்து ஆண்டுகள் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவில் இணைந்திருந்தார். அரசபடைகளிடம் சரணடைந்த பின்னர், இவர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதன்பின்னரே, இவர், கொஸ்கொட சுஜி தலைமையிலான முக்கியமான பாதாள உலகக் குழுவுடன் இணைந்துள்ளார் என்று கூறப்படுகிறது. (ற-5)

## ஹிருணிகா மீதான வழக்கு ஓகஸ்ட் மாதம் விசாரணை

கொழும்பு, ஏப்.21
இனந்தெரியாத நபர் ஒருவரைக் கடத்தியமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஹிருணிகாவின் வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி நடைபெறும் என்று நீதி மன்றம் அறிவித்துள்ளது.

அத்துடன் இந்த வழக்கின் விசாரணை அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றத்தால் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்கு விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஹிருணிகா உள்ளிட்ட 8 பேருக்கு எதிரான வழக்குக்காக சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் நீதிமன்றில் தெரி வித்துள்ளனர்.

வழக்கு விசாரணை நீதிமன்றில் இடம்பெற்ற வேளை, ஹிருணிகா உள்ளிட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். (ற-ஐ-5)

## திருத்தங்களுடன் வற் வரியை நடைமுறைப்படுத்த தீர்மானம்

கொழும்பு, ஏப். 21
பொது மக்களுக்கு சுமை ஏற்றாத வகையில் வற் வரியை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றுக்கு அனுமதி வழங்கிய பின்னர், வற் வரி (பெறுமதி சேர் வரி) விவகாரம் பற்றி வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

இதன்போதே சேவைத்துறைக்குப் பாதிப்பு ஏற்படாத விதத்தில் அதாவது மருத்துவம், கல்வி உள்ளிட்ட விடயங்களுக்குத் தாக்கம் ஏற்படாத வகையில் வரி நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப திருத்தங்களை மேற்கொண்டுவிட்டு, உரிய வகையில் எல்லைகளை வகுத்துக் கொண்டு வற் வரி அதிகரிப்பை மேற்கொள்ளலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மே 2 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வற் வரி 15 சதவீதமாக அதிகரிக்கப்படும் என்று நிதி அமைச்சு அறிவித்ததை அடுத்து அதற்கு சகல தரப்புகளில் இருந்தும் எதிர்ப்புகள் கிளம்பின.

மக்களுக்குச் சுமை அதிகரிக்கும் விதத்தில் வரி அதிகரிப்புக்கு இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி கடந்த திங்கட்கிழமை அறிவித்திருந்தார். இந்த நிலையிலேயே அமைச்சரவைக் கூட்டத்திலும் இதுபற்றி பேசப்பட்டுள்ளது. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் விடயத்தில் மட்டும் இழுவல்-நழுவல் போக்கு

அனைத்துலக நாடாளுமன்றின் விசேட பிரதிநிதிகளின் குழு ஒன்று, இலங்கைக்கு-கொழும்புக்கு-வருகை தரவுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இலங்கை நாடாளுமன்ற எதிரணியைச் சேர்ந்தவர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்தே, விசேட பிரதிநிதிகள் குழு இங்கு வரவுள்ளதாக அறிவித்திருக்கிறது.
மேற்போந்த தகவலை, நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்து உள்ளார்.

நாடாளுமன்றின் கூட்டு எதிர்க்கட்சியினரின் கடந்த மாதப் பயணத்தைத் தொடர்ந்து, இந்த நிலைமை தோன்றி உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார். அந்த வேளையில்--நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உறுப்புரிமைகள் குறித்து, நேரில் கண்டு அறியும் பொருட்டு விசேட குழு ஒன்று--

இலங்கைக்கு அனுப்பப்படும் என்று நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் உறுதி அளித்திருந்தார் என்பதும் தகவல்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐம்பத்திமூன்று பேர்களின் கையெழுத்துக்களுடன் ஆட்சேப மனு சமர்ப்பிக்கப்பட்டதும் இங்கு தொட்டுக்காட்டப்பட வேண்டியதாகும்.

அதேவேளை, நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர், எங்கள் நாட்டின் சபாநாயகர் கருஜய சூரியவுடன் கலந்துரையாடினார் என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது.

இந்த நாட்டில், நீதி கிடைப்பதில் இழுவல் நழுவல் போக்குகள் நிலவுகின்றன என்பது பல தரப்புகளாலும் சுட்டிக்காட்டப்படும் ஒரு விடயம்.

மேலும், இன்றைய ஆட்சியாளர்கள் மட்டுமன்றி, முந்தைய ஆட்சித் தரப்புகளும் சரி--நாட்டில் நீண்ட காலமாக நிலவும், மக்களின், குறிப்பாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இங்கேயே தீர்க்க வல்ல ஆளுமையும், சக்தியும் உண்டு என்று, அவ்வப்போது பலத்த குரலில் பறைசாற்றினர்.


இங்கு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அனைத்து அதர்மச் செயற்பாடுகளையும், கண்களுக்குத் தெரியாத ஒன்றாக ''மறந்து'' ஊதித் தள்ளிய நிலைமைகளை சரித்திரத்தில் மாற்றி எழுத இயலாது!
வலிந்து காணாமற் போகச் செய்யப்பட்டோருக்கும்--

நீதி விசாரணை இன்றித் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளோருக்கும்--

போர் முடிவுக்கு வந்து ஆண்டுகள் ஆறு கடந்து போயுள்ள நிலையிலும், தமது சொந்த மண்ணில் குடியிருக்க முடியாது அல்லற்படும் தமிழ் மக்களுக்கும்--நீதி வழங்குவதற்கு முன் வருவார்களா? எப்போது??

காலம் கடந்து கரைந்துபோன பின்னரும், பாதிக் கப்பட்ட தமிழர் தரப்புக்கு ஆதரவாக, இப்போதைய ஆட்சியாளருக்கு எதிராக அனைத்துலக மட்டத்தில் குரல் கொடுக்க, எதிர்த் தரப்புத் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் முன் வருவார்களா?
அதற்காகச் சபதம் எடுப்பார்களா? எப்போது...?

# முதலமைச்சருக்கு ஒரு திறந்த மடல்



அன்புள்ள முதலமைச்சருக்கு,

தங்களுக்கும் தாங்கள் சார்ந்திருக்கின்ற வடமாகாண சபைக் குடும்பத்துக்கும் முதற்கண் தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்களை வட மாநிலத்து பொது சனங்கள் சார்பாகத் தெரிவித்து உளம் உவகை அடைகின்றேன்.
இப்புத்தாண்டிலே தாழ்வுற்று, வறுமைமிஞ்சி, கல்வியிழந்து அற நெறி பிறழ்ந்து போதைப் பொருளதும் குடிபோதையினதும் ஆக்கிரமிப்பில் வாழும் எம் நிலையில் சிறு மாற்றத்தையாவது ஏற்படுத்த இறைவன் சக்தியை யும், இதய சுத்தியையும் அருளவேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.
தங்கள் மீது பேரன்பும், பேரபிமானமும் வைத்திருக்கின்ற தமிழ் குடிமகன்களில் ஒருவன் என்கின்ற ரீதியில் வரலாற்றில் இடம்பிடித்திருக்கின்ற தங்கள் பெயர் ஏழைத் தமிழர்களின் நெஞ்சகங்களிலும் நிலைத்து நிற்க வேண்டுமென்ற ஆதங்கத்துடன் வெட்கத்தை விட்டு வேதனைகளுடன் இம்மடலை இப் புதிய தமிழ் வருடத்தில் தங்களுக்கு வரைகின்றேன்.
அண்மைய நாள்களாக தமிழ் தேசத்தின் எதிர்கால நலனை முன்னிறுத்தி தீர்வுத்திட்டம் தொடர்பாக நீங்கள் காட்டி வருகின்ற துணிகரமான இதய சுத்தியுடன் கூடிய அர்ப்பணிப்பு மிக்க வேலைத்திட்டங்கள் உலக அரங்கிலும், நாடளாவிய ரீதியிலும் தமிழர்கள் மனங்களில் நம்பிக்கைக்குரிய உயரிய தலைவராக தங்களை முன்னிறுத்தி உள்ளது.

### அழுத்தங்களுக்கு ஈடுகொடுக்கும் முதல்வர்

அதேநேரம் அதற்காக உள்ளக ரீதியிலும், வெளியக ரீதியிலும் தாங்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்களையும் அவற்றுக்கு சளைக்காமல் தாங்கள் ஈடு கொடுத்து வருவதையும் பொது சனங்களாகிய நாம் அறிவோம்.
தியாகங்களின் மீது எழுப்பப்பட்டிருக்கும் முயற்சிகள் எதிர்காலத்தில் நிச்சயம் வெற்றி பெறும் என்பதில் நாம் நம்பிக்கையோடு காத்திருக்கின்றோம்.
எதிர்காலத்தை பற்றிய நீண்ட கனவுகளுடனும், கடந்த காலத்தில் துயர்மிகுந்த பதிவுகளின் தொடர்ச்சியான மீள்நினைவு கூறல்களோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களாகிய நாம் நிகழ்காலத்தை தொலைத்து விடுவோமோ என்ற ஐயம் தோற்றம் பெற்று வருவதனால் யதார்த்தபூர்வமான உண்மைகள் சிலவற்றை பகிர முற்படுகின்றேன்.
நாம் கனவு காண்கின்ற இலட்சிய தீர்வை அடைகின்ற காலம் வரை எமது அடிப்படை தேவைகள் பற்றிச் சிந்திக்க தவறுவோமானால் அடுத்த ஆண்டுகளில் மது பழக்கத்துக்கும், போதைப் பொருள் பாவனைக்கும் அடிமையாகி எமது சமூகத்தின் இளைய தலை முறையின் கணிசமான பகுதி அதலபாதாளத்தை நோக்கிச் சென்றுவிடும்.
சாதாரண கிராமத்து பிள்ளைகளின் கல்வியை அளவீடு செய்கின்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் எமது வடமாகாண மாவட்டங்களின் நிலை மோசமடைந்து செல்வதைவேடிக்கை பார்ப்பவர்களாக இருக்கின்றோம். அந்நிய சக்திகளை நோக்கி சுட்டு விரலை நீட்டுகின்ற நாங்கள் இத்தருணத்திலே எம்மை நோக்கி மற்றைய நான்கு விரல்களும் நீளுவதைச் சற்று சிந்திப்பது நலம் பயக்கும்.
எமது மாகாண சபை அதிகார மற்றசபையாக பலவிடயங்களில் இருக்கின்றபோதிலும் இப்போதிருக்கின்ற புறச்சூழலில் கல்வி, சுகாதாரம் சமூக சேவை, கூட்டுறவு போன்ற சேவைத்துறைகளிலும் விவசாயம், நீர் முகாமைத்துவம், மீன்பிடி போன்ற வாழ்வாதாரத் துறைகளிலும் தங்களுக்கு கீழ் உள்ள அமைச்சர்களின் கீழ் பணியாற்றும் அதிகாரிகளையும் உத்தியோ கத்தர்களையும் வினைத்திறனான ரீதியில் முகாமைத்துவம் செய்வதன் ஊடாக இன்றைய எமது அதலபாதாள நிலையில் இருந்து நம்பிக்கை தரும் சிறு மாற்றத்தையாவது ஏற்படுத்த முடியும்.
வெறும் கண்காட்சிகள் ஊடாகவும் படிவங்கள் நிரப்புதலுடனும் காலத்தைக் கடத்தி வரும் தங்கள் அமைச்சுக்களின் செயற்பாடுகளைத் தயவு கூர்ந்து இந்தச் சந்தர்ப்பத்திலாவது மீள் பரிசீலனைக்கு உட்படுத்துங்கள். நிலைத்து நிற்கக்கூடிய அறிவுபூர்வமான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவும், மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வு காண்பதற்கும் இதய சுத்தியுடன் செயற்படக் கூடிய மனிதர்களிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வகையில் துரித மாற்றத்தை ஏற் படுத்துங்கள். செயற்றிட்டங்களை விஞ்ஞானபூர்வத் தரவுகளுடன் மீளாய்வு செய்யும் பொறிமுறைகளை ஏற்படுத்தி மாகாணத் திட்டமிடும் அலகை செவ்வனே செயற்படுத்தி மாதாந்தம் முன்னேற்றங்களை ஆராயுங்கள்.

### வாராந்தக் கூட்டங்கள்

வாராந்தம் அமைச்சரவை கூட்டங்களை கூட்டி தேங்கி நிற்கும் நிதிகளை உண்மையிலையே கடைநிலை வாழ்க்கை நடத்தும் மக்களைச் சென்றடைய வழிவகை செய்யுங்கள். அரச அதிகாரிகளை வினைத்திறன்களாக வேலை செய்யத்தூண்டும் வகையில் திணைக்களங்களுக்கு நீங்களும் உங்கள் உறுப்பினர்களும் அடிக்கடி சென்று வாருங்கள். விழாக்களுக்கும், சங்கங்கள், மன்றங்கள் நடத்தும் பாராட்டு வைபவங்களுக்கும் கலந்து கொள்வதை இயன்றளவு தவிர்த்து, கிராமிய மக்களின் குறைகேள் கூட்டங்களுக்கு அதிகநேரம் செலவிட உறுப்பினர்களை வலியுறுத்துங்கள்.
இன்னும் சொற்ப காலமே இருக்கின்ற மாகாண சபையின் ஆயுள் காலத்தில் தங்களின் அதிகாரத்துக்கும் சக்திக்கும் உட்பட்ட ரீதியில் அதிரடி மாற்றங்கள் ஏற்படுத்துவதன் மூலம் தமது சந்ததியின் வாழ்க்கைக்காக தமது வாழ்வை தொலைத்து விட்டவர்களினதும் அவர்களினது குடும்பங்களினதும் வாழ்வில் ஒளியேற்றிய மகத்தான மனிதர் என்றும் பெருமையைத் தாங்கள் தேடிக்கொள்வீர்கள் என்பதை தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வந்து எனது மடலை நம்பிக்கையுடன் நிறைவு செய்கிறேன்.

என்றும் உங்கள்
பனையூரான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவில் நிர்வாகத்தில் இனவாதத் தலையீடு

வந்தியத்தேவர்

போரைத் தொடர்ந்து சிவில் நிர்வாகத்தில் இராணுவம் தலையிடுவதென்பது வழமையாகிவிட்டது. தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்கான கோரிக்கைகளை விடுத்த காலம் தொட்டு இராணுவம் தமிழர்கள் மீதான தலையீடுகளையும் நெருக்கடிகளையும் அதிகரித்துக் கொண்டே இருந்துள்ளது. போர் முடிவுக்கு வந்த பின்னர் சிவில் நிர்வாகம் என்று பெயரளவில் அரச அதிபர், பிரதேச செயலர் என்று இருந்தாலும் கூட முழு நிர்வாகமும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்தது. ஓர் அரச அதிபரோ அல்லது ஒரு தமிழ் அதிகாரியோ தனது பணியைச் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் மேற்கொள்ள முடியாதபடி இராணுவத் தலையீடுகள் எந்த ஒரு விடயத்திலுமே தாராளமாகக் காணப்பட்டன. மகிந்த ஜனாதிபதியாக இருந்த சமயம் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதும் வடக்கு, கிழக்குப் பகுதிகள் இராணுவ ஆட்சியில் இருந்துள்ளது.

மகிந்த இலங்கை ஜனாதிபதி என்ற போதும் அவர் சிறுபான்மை மக்களை ஆட்சி செய்யும் உரிமையைப் படையினருக்கு வழங்கிவிட்டு தென் பகுதி அரசுத் தலைவராகவே தன்னை நிலைநாட்டினார். இதனால் இராணுவம் சிறிய அலுவல்களுக்கும் மக்கள் தன்னிடமே வரவேண்டும் என்பது போல் மக்கள் தொடர்புக்கான அலுவலகங்களையும் நடத்தி வந்தது.

**மகிந்தவின் தோல்வி**

மகிந்தவின் தோல்வியின் பின்னர் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் அரசில் இராணுவம் சிவில் நிர்வாகத்தில், தலையிட அனுமதிக்கப்படமாட்டாது என்று மக்கள் எதிர்பார்த்திருந்த போதும் ஏற்கனவே தாங்கள் சுவை கண்ட சிவில் நிர்வாகத்தைக் கைவிட விருப்பமின்றியே இராணுவம் செயற்படுகின்றது. தமிழ்ப் பிரதேசங்களில் விவசாயிகள் தோட்டச் செய்கையாளர்களின் நிலங்களையும் தொழில்களையும் பறிமுதல் செய்து அவர்களின் உடைமைகளையும் தொழில் வளங்களையும் தமது நிர்வாகத்துடன் ஒன்றித்துள்ளது. அரச அதிகாரிகள் தமது கட்டளைகளுக்கு இணங்கவே செயற்பட வேண்டுமென்ற நிலை இன்றும் தொடர்கிறது. இன்றும் கூட ஒரு கிராமத்தில் இடம் பெறும் சிறிய நிகழ்வு என்றாலும் அதன் ஏற்பாட்டாளர்கள் அங்குள்ள படை அதிகாரிகளுக்கு அறிவித்து அவர்களையும் முக்கிய விருந்தினர்களாக்கி வரவேற்றே அந்த நிகழ்வை நடத்த வேண்டிய நிலை காணப்படுகிறது.

கிராமப்புறங்களில் உள்ள அதிகாரிகளும் பாடசாலை அதிபர்களும் படையினரைப் புறந்தள்ளி எந்த ஒரு விழாவையோ விளையாட்டுப் போட்டிகளையோ நடத்த முடியாத நிலை உள்ளது. தீவுப் பகுதிகளில் துறைமுகங்களில் அத்துமீறி நுழைந்து அவற்றைத் தமது அதிகாரங்களின் கீழ் வைத்துக் கொண்டு மக்களைக் காத்திருக்க வைத்து ஏறு இறங்கு என்று அச்சுறுத்திக் கொண்டிருப்பதும் அவர்களின் சிவில் நிர்வாகம் தான்.

**முல்லைத்தீவில் நடப்பது என்ன?**

இப்போது முல்லைத்தீவில் சிங்கள மக்களின் நலனுக்காக கிராம சேவையாளர்களை அச்சுறுத்தி அவர்களின் பதவிக்கான அடையாள அட்டைகளையும் பறித்து இலஞ்சம் கேட்டதாக கிராம அலுவலர்கள் மீது பழி சுமத்துமாறு சிங்கள மக்களுக்குப் புத்தி கூறி, சிவில் நிர்வாகம் சீராக இடம்பெற தடையாக இருந்துள்ளனர். சிங்கள மீனவர்களின் அத்துமீறல்களை அங்கீகரிக்கும் வகையில் இந்த இராணுவத்தலையீடு இடம்பெற்றுள்ளது.

தற்போதைய அரசுக்கு இராணுவத்தினர் தமிழ்ப் பிரதேசங்களில் சிவில் அதிகாரிகளைக் கண்டு கொள்ளாது தங்களது இஷ்டம்போல் உத்தியோகத்தர்களையும் மக்களையும் மிரட்டி வருவது தெரியாதது அல்ல. மகிந்த ஆட்சி இராணுவம் எப்படி தமிழ்மக்களது பகுதிகளில் நடந்து கொண்டதோ அது மைத்திரியின் ஆட்சியிலும் தொடரத்தான் செய்கிறது. நாங்கள் பெரும்பான்மைப் பலத்துடன் வந்தால் படையினரை முற்றாகத் தமிழ்ப்பகுதிகளில் இருந்து வெளியேற்றி விடுவோம் என்று மேடை மேடையாக பேசிய வடக்கு மாகாண சபைப் பிரதிநிதிகள் பார்த்திருக்கவே சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடுகள் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இராணுவம் முகாமிட்டுள்ள இடத்தில் இருந்து ஓர் அங்குலம் கூட அவர்களை நகர்த்த முடியாத வடக்கு மாகாண சபை சிவில் நிர்வாகத்தில் இனிமேல் இராணுவத் தலையீடு வேண்டாம் என மன்றாடுவது போல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் இந்த நல்லாட்சி அரசால் தீர்வு காணப்படும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நம்பிக்கை. படிப்படியாகத்தீர்வு காணப்படும் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் கருத்து வெளியிட்டுள்ளார். தனது பதவிக் காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படையாக நம்பிக்கை தெரிவித் தாலும்கூட, இந்தச் சிக்கல்கள் முழுமையாக தனது காலத்தில் களைய முடியுமா என்ற அவநம்பிக்கையும் அவரிடத்தில் இருக்கத்தான் செய்யும் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் தத் தளிக்கும் ஓர் அரசு, சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை தனது பதவிக்காலத்தில் முழுமையாகத் தீர்த்துவைக்கும் என்று நம்பலாமா?

## எவர் மீது இந்தப் பழி?

யாழ்.குடாநாட்டு உள்ளூர் பயணங்கள் மேலும் மேலும் சீர்கெட்டுப் போகின்றன என்பது கண்கூடு.

பொதுமக்களின் போக்குவரத்து வசதி என்பது கீழ்மட்டத்தில் உள்ளது. ஏழைத் தாய்மார்களினதும் பெண்களினதும் போக்கு வரத்துக்குமான ஒரே சாதனம் ஒட்டோ. ஒட்டோவில் பயணிக்க முடியாதோரும், சொந்தமாக மோட்டார்சைக்கிள் வாங்க முடியாதோரும் மினிபஸ்களில் பயணிக்கிறார்கள். இந்தப் பயணிகள் இந்த மினிபஸ்களில் படும் அவஸ்தையை எவர் அறிவார்?

உலகில் நான் பல நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். நகரங்களுக்கு மக்களை ஏற்றிச் செல்லவும் திரும்பத் தமது ஊர்களுக்குக் கூட்டிச் செல்லவும் பல்வேறு சாதனங்களுண்டு. எமது குடாநாட்டைப் போல் சீர்கெட்ட உள்ளூர் போக்குவரத்து முறை உலகில் எந்தப் பாகத்திலுமே இல்லை என்பது மறைக்கமுடியாத உண்மை.

முன்பு ஒரு காலத்தில் பொலிஸார் ஓவர்லோட் என்று பயணிகள் தொகையைக் கட்டுப்படுத்தினர். இன்று அப்படி ஒரு சட்டமே இல்லை என்பதுபோல் தென்படுகிறது.

பா.சுபாசினியின் சத்திய ஆவேசத்தைப் பாராட்டும் அதேவேளை, ஒழுங்கு, கட்டுப்பாடு என்பனவற்றைக் கவனிக்கும் பெரியோர்கள் என்ன செய்கின்றனர் என்று கேட்க ஆசைப்படுகின்றேன். சோமசுந்தரப்புலவர் பாடினார்,

ஆசாரி மேலோ அதிகாரி தன்மேலோ
மா மாரி மேலோ இப்பழி வந்து சேருமடா?

மினிபஸ்ஸில் பெண்கள் படும் வேதனையைக் குறித்து
பொலிஸ் பகுதி மீதோ, மாகாண சபை மீதோ, அரசு மீதோ இந்தப் பழி வந்து சேருமடா? என்று பாடத்தோன்றுகின்றது.

பேராயர் எஸ்.ஜெபநேசன்

## சங்கானை மட்டிகைக் குளக்கட்டை எப்போது எவர் திருத்துவார்கள்?


வலி.மேற்கு பிரதேசத்தில் உள்ள சங்கானை நகரின் மையத்தில் இருந்து 100 மீற்றருக் குள் அமைந்திருக்கும் மட் டிகைக் குளத்தின் அணைக் கட்டு உடைந்து ஒரு வருடத் துக்கு மேலாகியும் இது வரையில் அதைப் புனரமைக்க எவரும் நடவடிக்கை எடுக்காதது ஏன்? இதனால் அருகில் இருக்கும் வர்த்தகக் கட்டடத் தொகுதியின் அத்திபாரம் பாதிப்படைய நிறைய வாய்ப்புக்கள் உள்ளதாக பொறியியலாளர்கள் கூறி வருகின்றார்கள்.

அது மட்டுமல்லாது சங் கானை மீன் சந்தையானது தற் போது அந்தக் குளத்தின் அருகில் இடமாற்றம் செய் யப்பட்டு, மீன்சந்தையின் வீதி அருகில் குறித்த அணைக் கட்டு இருப்பதால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் அந்த வீதியைப் போட முடியாமல் வலி.மேற்கு பிரதேச சபை அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் திணைக்களங்கள் இந்த விடயத்தின் முக்கியத்துவத்தைப் பார்வையிட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சங்கானை மக்கள் சார்பாக வேண்டி நிற்கின்றோம்.

கு.குணஶ்ரீ
தலைவர்
சங்கானை பட்டின
அபிவிருத்திச் சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




டைட்டானிக் கப்பலில் இருந்த உயிர்காக்கும் படகின் ஒளிப்படம் வெளியாகியுள்ளது. அத்துடன் அக்கால கட்டத்தில் டைட்டானிக் குறித்து கையால் எழுதப்பட்ட கடிதமும் இந்தவார இறுதியில் ஏலத்தில் விடப்படவுள்ளது. குறித்த ஒளிப்படம் 1912 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி எடுக்கப்பட்டுள்ளது. மீட்புக் குழுவினரால் அந்தப் படகு மீட்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒளிப்படம் எடுக்கப்பட்டுள்ளது. டைட்டானிக் அதே வருடம் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி இரவு 11.40 மணிக்கு பனிப்பாறையுடன் மோதி விபத்துக் குள்ளானது. இந்த விபத்தில் ஆயிரத்து 500 பேர் உயிரிழந்தனர். உயிர்காப்புப் படகுகளில் தப்பித்தவர்கள் மீட்புப் படையால் மீட்கப்பட்டனர். இவ்வாறாகப் மீட்கப்பட்ட படகில் ஒளிப்படத்தில் இருக்கும் படகு இறுதிப் படகாகும். (த-ரி4)

# போதைப்பொருள்கள் கடத்தலில் கூட்டாக ஈடுபடும் ஐ.எஸ், மாபியா

## இத்தாலிய அதிகாரிகள் தகவல்

ரோம், ஏப்.21

ஐ.எஸ். அமைப்பும், இத்தாலியின் மாபியா குழுவும் இணைந்து போதைப் பொருள் கடத்தலில் கூட்டாக ஈடுபடுவதாக இத்தாலியின் தீவிரவாத எதிர்ப்புப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வட ஆபிரிக்காவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு இவர்கள் போதைப் பொருள் கடத்துவதாக அவர் மேலும் தெரிவித்தார். இத்தாலியின் தீவிரவாத எதிர்ப்புப் படையினரும், மாபியா எதிர்ப்புப் படையினரும் ஒன்றிணைந்து இவற்றுக்கான ஆதாரத்தைக் கண்டு பிடித்துள்ளனர்.

கசபெலன்கா, மொறோக்கோ ஊடாக அல்ஜீரியாவுக்குக் கஞ்சா போதைப் பொருள் கடத்தப்படுகின்றது. கிழக்கு லிபியாவின் துன்சீனியா பகுதியூடாகவும் இவை கடத்தப்படுகின்றது என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்தப் பாதைகள் ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டினுள் இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

போதைப் பொருள்கள் பாவிப்பது ரியா சட்டத்தின் படி தவறானதாகும். ஆனாலும் ஐ.எஸ். அமைப்பினர் இதன் மூலம் மில்லியன் கணக்கான பணத்தை ஈட்டிவருகின்றனர் எனக் கடத்தல் தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

போதைப் பொருள் கடத்தல் மூலம் மாபியாக் கும்பல் 32 பில்லியன் யூரோவை வருடாந்தம் ஈட்டுகிறது என அமெரிக்க போதைப் பொருள் பிரிவினர் தெரிவித்தனர்.

ஐ.எஸ். அமைப்பினரும், மாபியாவினரும், வர்த்தகப் பொருள் கடத்தல்கள், எண்ணெய் கடத்தல், புராதன பொருள் கடத்தல், போதைப் பொருள் கடத்தல் போன்றவற்றில் பணத்துக்காக ஈடுபடுகின்றனர் எனவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-ரி4)



# ஆப்கனில் மீண்டும் குண்டுத் தாக்குதல்

காபூல், ஏப்.21

ஆப்கனிஸ்தானின் காபூல் நகரில் மீண்டும் குண்டுவெடிப்பு இடம்பெற்றது. காபூல் நகரின் மத்திய பகுதியில் நேற்று முன்தினம் தேசிய பாதுகாப்புத் திணைக்களத்துக்கு முன்னால் குண்டு வெடித்ததை அடுத்து பல மணி நேரங்களின் பின்னர் மீண்டும் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இரண்டாவது வெடிப்பின் மூலம் எந்த உயிராபத்துக்களும் ஏற்படவில்லை என்றும், ஆனால் மிகவும் சக்தி வாய்ந்த வெடிபொருள் சாதனம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் உள்துறை அமைச்சக ஊடகப் பேச்சாளர் சித்திக் சித்திக்கி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரிக்கப்பட்டதுடன், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 320 ஆக அதிகரித்துள்ளது என தேசிய பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.



அரச அலுவலகங்களில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலுக்குத் தலிபான் பொறுப்புக் கூறியுள்ளது. இதுவரை ஆப்கான் நகரில் இடம்பெற்ற தாக்குதலை விட இந்தத்தாக்குதல் மிகவும் சக்திவாய்ந்தது என அதிகாரிகள் தெரிவித்தனர். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நளினி, மு

# தமிழ

# நிராக

புதுடில்லி, ஏப் 21
ராஜீவ் கொலைக் குற்றவ
முருகன், பேரறிவாளன்
பேரை விடுவிக்கும் த
முடிவை மத்திய அரசு நிர
கடந்த இரண்டு ஆன்
வெளியில் ராஜீவ் கொ
விடுவிக்கும் தமிழக அ
மத்திய அரசு இரண்டா
நிராகரித்துள்ளது என்பது
கது.
முதல் கடிதம் கடந்த 201
ஐக்கிய முற்போக்குக் க
யின்போது அனுப்பப்ப
கடிதம் நிராகரிக்கப்பட்ட
இந்த நிலையில் தற்போ
முறையாகவும் தமிழக
நிராகரிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து உள் துவ
தின் மூத்த அதிகாரி
கூறும்போது, தமிழக
அனுப்பியிருந்த கடிதம்
சட்ட அமைச்சகத்திடம்
கேட்கப்பட்டிருந்தது.
அடிப்படையில் ராஜீவ் கெ
குற்றவாளிகள் 7 பே
விடுவிக்கும் தமிழக அ
முடிவை நிராகரிப்பதாக
ழக அரசுக்குத் தெரிவி
கிறோம் என்றார்.
ராஜீவ் காந்தி கொலை வ
ஆயுள் தண்டனை வி
பட்டுள்ள பேரறிவாளன்,
உள்ளிட்ட 7 பேரை வி
செய்ய முடிவு செய்திரு
கருத்துத் தெரிவிக்குமாறு
கடந்த மார்ச் 2ஆம் திக

# நாடுச

# பால்

லண்டன், ஏப்.21
பால்மைரா நகரில் இரு
ஆயிரத்து 800 வருடா
பழைமையான வாயில் த
மீண்டும் லண்டன் நக
உருவாக்கப்பட்டுள்ளது.
பரிமாணப் படங்களை
ஏனையதரவுகளையும்
டிஜிட்டல் தொல்பொ
நிறுவனத்தினர் இத
உருவாக்கி யுள்ளனர்.
உலகபாரம்பரியவாரம்அ
டிப்பதால்அழிக்கப்பட்டா

# 2,000

யவுண்டே, ஏப்.21
ஆபிரிக்காவில் கமரூன
மாக வேட்டையாடிப் பது
தந்தங்கள், ஏனைய வி
பொருள்கள் தீயிடப்பட்
ஆபிரிக்க வரலாற்றில்
செயல் இதுவென்று
துள்ளனர். கிட்டத்தட்ட 2
கள் இவ்வாறு எரியூட்ட
கமரூன் தலைநகரில் உ
இந்த நிகழ்வு நடைபெற
வேட்டையைக் கண்டி
நிகழ்வில் அமெரிக்கத்
கலந்து கொண்டார்.
மத்திய ஆபிரிக்க காடுக

## , முருகன் உட்பட 7 பேரை விடுவிக்கும்

# ழக அரசின் முடிவை

# கரித்தது மத்திய அரசு

குற்றவாளிகள் நளினி, வாளன் உள்ளிட்ட 7 கும் தமிழக அரசின் அரசு நிராகரித்துள்ளது. ஆண்டுகள் இடை கொலையாளிகளை ழக அரசின் முடிவை ண்டாவது முறையாக என்பது குறிப்பிடத்தக்

த 2014 ஆம் ஆண்டு க்குக் கூட்டணி ஆட்சி னுப்பப்பட்டது. அந்தக் கப்பட்டது.

தற்போது இரண்டாவது தமிழக அரசின் முடிவு ள்ளது.

ள் துறை அமைச்சகத் கோரி ஒருவர் தமிழக அரசு கடிதம் குறித்து ந்திடம் கருத்து த்து. அதன் ஜீவ் கொலைக் 7 பேரையும் ழக அரசின் ப்பதாகத் தமி தெரிவித்திருக்

லை வழக்கில் ன விதிக்கப் ளன், நளினி ரை விடுதலை செய்திருப்பதாகவும், இது தொடர்பாகக் குமாறும் மத்திய அரசுக்குத் தமிழக அரசு ம் திகதி கடிதம் எழுதியது.



முருகன்



சாந்தன்



பேரறிவாளன்



நளினி



ரவிச்சந்திரன்



ராபர்ட் பயஸ்



ஜெயகுமார்

> ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டுள்ள பேரறிவாளன், நளினி உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்ய முடிவு செய்திருப்பதாகவும், இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்குமாறும் மத்திய அரசுக்குத் தமிழக அரசு கடந்த மார்ச் 2ஆம் திகதி கடிதம் எழுதியது.

தமிழக சட்டப்பேரவைக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் இந்தக் கடிதம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது.

இந்த நிலையில், மத்திய உள்துறை செய லர், தமிழக உள்துறை செயலர் ஞானதேசிகனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்,

முன்னாள் ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ராபர்ட் பயஸ், ஜெயகுமார், ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேர் விடுதலை தொடர்பாகத் தமிழக அரசு அனுப்பிய கடிதம் குறித்து, மத்திய சட்ட அமைச்சகத்தின் கருத்தை கேட்டது. இதனடிப்படையில் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் உள்ளதால் 7 பேரை விடுதலை செய்ய மத்திய அரசுக்கு அதி காரம் இல்லை என்று அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (தி)



# உமனிதப்புதைகுழிகள் ஈராக்கில் கண்டுபிடிப்பு

பக்தாத், ஏப்.21

ஈராக் நகரான ரமாடியில் இரு மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நகரின் கால்பந்து மைதானத்தில் பெண்கள், சிறுவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டதுடன், அவர்களின் ஆடைகள் என்பனவும் புதைக்கப்பட்டுள்ளன. புதைகுழியில் இருந்து கிட்டத்தட்ட 40 சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன என ரமாடி நகர அதிகாரிகள் தெரிவித்தனர்.


இந்த உடல்கள் ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் நகரம் இருந்தபோது புதைக்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர். ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் மேலும் இவ்வாறான புதைகுழிகள் இருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர். கடந்த டிசெம்பர் மாதம் சின்ஜார் நகருக்கு அருகில் 16 மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப் பட்டன என ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையத்தினர் தெரிவித்தனர்.

இத்துடன் இவ்வாறு புதைக்கப்பட்டவர்கள் சாவுத் தண்டனை வழங்கப்பட்டவர்கள் எனவும், ஷெல், குண்டுத்தாக்குதலுக்கு இலக்கானவர்கள் அல்லர் எனவும் புதைகுழிகளை ஆய்வு செய்த ஐ.நாவின் குழுவினர் தெரிவித்தனர். (த-ரி4)

# சாதனை படைத்த 108 வருடங்கள் பழைமை வாய்ந்த தகவல் போத்தல்

லண்டன், ஏப்.21

போத்தலில் தகவலை வைத்து அடைத்து அனுப்பும் நடைமுறை பழைய காலத்தில் இருந்து வந்துள்ளது. அவ்வாறு அனுப்பப்பட்ட போத்தல் 108 ஆண்டுக்குப் பின்னர் கரையை வந்தடைந்துள்ளது. உலகின் பழைமை வாய்ந்த தகவல் கடிதம் எனும் சாதனைப் பதிவை இது நிகழ்த்தியுள்ளது. இந்தப் போத்தல் 1908 ஆம் ஆண்டு கடலில் எறியப்பட்டுக் கடந்த வருடம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பிரிசியன் தீவுகளில் மரியான் விங்லன் எனும் பெண்ணால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.




இந்தத் தகவல் போத்தலை கின்னஸ் சாதனை நிறுவனம் ஆய்வு செய்து சாதனை பதியப்பட்டுள்ளது. இந்தத் தகவல் அட்டையில் குறிப்பிட் டிருந்த தாவது:-

இதனைக் கண்டெடுக்கும் நபர் இதில் வைக்கப்பட்ட தபால் அட்டையைக் குறித்த முகவரியில், எங்கே பெற்றுக் கொள்ளப்பட்டது என்ற விவரத்துடன் அனுப்பி வைக்கவும். அத்துடன் குறித்த முகவரிக்கு தகவல் கொடுத்துப் பரிசாக ஐரோப்பிய நாணயத்தைப் பெற்றுக் கொள்ளவும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது எனக் கடல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்தப் போத்தல் ஜோர்ஜ் பார்க்கர் பிட்டருக்குச் சொந்தமானது. இவர் பிரிட்டன் கடல் உயிரியலாளராவர். கடல் உயிரியலாளர் சங்கத் தலைவராக 1939 ஆம் ஆண்டு தொடக்கம் 1945 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பதவி வகித்தார். மேலும் இவர் 1904 ஆம் ஆண்டு தொடக்கம் 1906 ஆம் ஆண்டு வரை ஆயிரத்து 20 தகவல் போத்தல்களைக் கடலினுள் வீசினார் என்பது குறிப் பிடத் தக்கது. இதற்கு முன்னர் 2013 ஆம் ஆண்டு 99 வருடம் 43 நாள்கள் பழைமை வாய்ந்த போத்தல் உலக சாதனைப் பதிவில் இடம்பெற்றிருந்தது. (த-ரி4)

# நகளை வலம் வரவுள்ள ல்மைரா நுழைவாயில்

ல் இருந்த வருடங்கள் யில் தூண் ன் நகரில் ள்ளது. முப் களையும், யும்வைத்து பொருள் இதனை னர். ரம்அனுஷ் ட்ட பால்மைரா நுழை



வாயில் உலகின் முக்கிய நகரங்களை வலம் வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது நியூயோர்க், டுபாய் என்பவற்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதியாகச் சிரியாவுக்கும் எடுத்துச் செல்லப்படவுள்ளது. 12 தொன் எடையுள்ள இந்த மாதிரிப் படைப்பு உலக மக்களுக்குப் பாரம்பரியச் சின்னம் பற்றிய தகவல்களையும், விழிப்புணர்வையும் வழங்கும் எனப் புராதன பொருள் பணிப்பாளர் மஃமூன் அப்துல் கரீம் தெரிவித்தார். குறித்த நுழைவாயில் பால்மைரா நகரின் சிறந்த படைப்பாகக் கருதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# 0 யானைத் தந்தங்கள் ஆபிரிக்காவில் எரியூட்டல்

மரூன் பகுதியில் சட்டவிரோத பதுக்கி வைக்கப்பட்ட யானைத் ய விலைமதிப்புள்ள வேட்டைப் ப்பட்டு அழிக்கப்பட்டன.

ற்றில் பிரமாண்டமான அதிரடிச் ன்று அதிகாரிகள் தெரிவித் ட்ட 2 ஆயிரம் யானைத் தந்தங் யூட்டப்பட்டன.

ரில் உள்ள சான்டி சதுக்கத்தில் டைபெற்றது. சட்டவிரோத மிருக ண்டித்து நடத்தப்பட்ட இந்த க்கத் தூதுவர் சமந்தா பவரும் ர்.

காடுகளில் 2002 ஆம் ஆண்



டில் இருந்து 2012 ஆம் ஆண்டு வரை யானைகளின் எண்ணிக்கை மூன்றில் இரண்டாக வீழ்ச்சி அடைந்துள்ளது. உலக நாடுகள் இவ்வாறான அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனச் சமந்தா பவர் தெரிவித்தார். மேலும், யானைகளில் இருக்கும்போது மாத்திரமே தந்தத்துக்குப் பெறுமதி எனவும் அவர் தெரிவித்தார்.

எரியூட்டப்பட்டவற்றில் தந்தத்திலான சிற்பங்கள், செஸ் பலகைகள், மணிகள் என்பனவும் இருந்தன. இவ்வாறான எரியூட்டல் வேட்டையாடுபவர்களுக்கு நல்ல பாடமாக அமையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், தந்தம் மாத்திரம் 3.5 தொன்கள் நிறையுடையவை. மில்லியன் டொலர் பெறுமதியான பொருள்கள் 3 நாள்களாக எரியூட்டப்படுகின்றன எனத் தெரிவித்தனர்.

ஆனால் உலக அளவில் மக்கள் பலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். யானைகள் இறந்துவிட்டன.

அவற்றின் தந்தங்களை நல்ல முறை யில், நன்மையான விடயங்களுக்குப் பயன்படுத்தலாம் எனக் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்களது எண் பலன் எப்படி?

**(உங்களது எண் பலன் எப்படி? என்ற தலைப்பில் எட்டாம் எண்காரர்களுக்கான பலன்கள் நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தன. இன்று 9 ஆம் எண்காரர்களுக்கான பலன்கள் பிரசுரமாகிறது)**

## எண் 9

இயற்கையிலேயே துடிப்பும், வேகமும் கொண்ட 9 எண்காரர்களின் சிறப்பு இயல்புகளை இங்கு விவரமாகப் பார்ப்போம். இந்த எண்ணின் நாயகர் முருகப் பெருமான். அவரே தேவர்களுக்குச் சேனாதிபதியாவார். எனவே சேனாதிபதிக்குள்ள கட்டுப்பாடும், திறமையும், சவால்களைத் துணிந்து எதிர்கொள்ளும் தன்மையும் இவர்களுக்கு உண்டு. குருதியைப் பார்த்து இவர்கள் பயப்பட மாட்டார்கள். தெருச் சண்டை, போர்க்களம் போன்ற இடங்களில் இவர்களைப் பார்க்கலாம். மேலும் அதிகாரமுள்ள காவல்துறை, இராணுவம் ஆகிய தொழிலில் மிகவும் விருப்பம் உடையவர்கள் இவர்கள் தான்! மற்றவர்கள் பயப்படும் காரியங்களைத் துணிந்து ஏற்றுக் கொள்வார்கள். துணிவே துணை என்று நடை போடுவார்கள். இவர்களுக்கு முன் கோபமும் படபடப்பும் உண்டு.

உடலும் சற்று முறுக்கேறி நிற்கும். நான்கு எண்காரர்களைப்போல் இவர்களுக்குக் கோபம், ரோசம், தன்மானம் ஆகிய மூன்று குணங்களும் நிறைந்திருக்கும். எனவே இவர்களுக்கு எதிர்ப்பு இருந்து கொண்டே இருக்கும். இவர்கள் எத்தொழிலிலும், பதவியிலும், நிர்வாகத்திலும் வல்லவர்கள். இவர்கள் ஓரளவு ஒல்லியானவர்களே. ஆண்களில் பெரும்பாலோர் மீசை வளர்ப்பதில் விருப்பம் உடையவர்கள். பேச்சாற்றல் மிகுந்தவர்கள். இவர்களில் அதிர்ஷ்டசாலிகள் மென்மேலும் அதிர்ஷ்டசாலிகளாகவும், துரதிர்ஷ்டசாலிகள் தொடர்ந்து துரதிர்ஷ்டசாலிகளாகவும் இருப்பார்கள். இந்த எண்காரர்களுக்கு உடலில் அடிக்கடி காயங்கள், விபத்துக்கள் போன்றவை ஏற்படும். ஆயினும் அதைக் கண்டு பயப்பட மாட்டார்கள். 9 ஆம் எண்ணில் பிறந்தவர்களின் பெயர்கள் 8 ஆம் எண்ணில் மட்டும் இருந்து விட்டால் தற்கொலை முயற்சிகளும், வாகனங்களால் விபத்து உண்டு. இந்தச் செவ்வாய்க்கிரக ஆதிக்கத்தால் சைக்கிள், மோட்டார் சைக்கிள், நீச்சல் போட்டிகள், மிருகவேட்டை, உடற்பயிற்சிகள் ஆகியவற்றில் மிகவும் விருப்பம் உடையவர்களாக இருப்பார்கள்.

சர்க்கஸ் விளையாட்டுக்களில் விருப்பமுடன் ஈடுபடுபவர்கள் இவர்கள்தான். கார், சைக்கிள், பஸ் ஆகியவற்றை மிகவும் வேகமாக ஓட்டுபவர்கள் இவர்கள் தான். இவர்கள் எதற்கும், எப்போதும் பயப்படமாட்டார்கள். மேலும், தங்களது நோக்கத்துக்காகக் கடுமையான உழைக்கவும் தயங்க மாட்டார்கள். இவர்கள் எப்போதும் அலைபாயும் மனத்தை உடையவர்களாக இருப்பார்கள். இறைவன் இவர்களின் மனத்தை அமைதியாக வைத்திருக்க அனுமதிப்பதில்லை போலும்; இவர்கள் நடப்பதில் மிகவும் பிரியமுடையவர்கள். இவர்களுக்கு என்னதான் வசதியிருப்பினும் கால் தேய நடந்து செல்வதில் இவர்களுக்கு விருப்பம் அதிகம். எந்த ஒரு அரச அலுவலகத்திலும், தனியார் ஸ்தாபனங்களிலும் தலைமைப் பதவியில் இவர்கள் நன்கு புகழ் பெறுவார்கள். இவர்கள் உழைப்பதில் சுகம் காண்பார்கள். சோம்பலை இவர்கள் வெறுப்பவர்கள். ஊர் சுற்றுவதிலும் அலாதிப் பிரியம் உடையவர்கள். நடுவீதியில் ஒரு நோஞ்சானை ரௌடி ஒருவன் தாக்கினால் அதைக் கண்டு பொறுக்காமல், அந்த முரடனுடன் தைரியமாகச் சென்று போராடுபவர்கள் இவர்கள்தான்.

சிறு வயதுகளில் மிகவும் சிரமப்பட்டாலும், தங்ளது மன உறுதியினாலும், விடா முயற்சியினாலும், இவர்கள் எப்படியும் பிற்காலத்தில் முன்னேறி விடுவார்கள். இவர்கள் சுதந்திரப் போக்கு உடையவர்கள்! அவசரக்காரர்கள், உணர்ச்சி மயமானவர்கள், பிடிவாத குணம் இயற்கையிலேயே உண்டு. ஆபத்து மிகுந்த தொழிலில் இறங்கி விடுவார்கள். அதில் வெற்றியும் பெறுவார்கள். இவர்களின் சண்டைக் குணத்தால், குடும்பத்தில் அடிக்கடி குடும்பப் பிரச்சினைகள் ஏற்படும். தங்களை எல்லோரும் மதிக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற நினைப்பு இவர்களுக்கு எப்போதும் உண்டு. எந்த நிர்வாகத்திலும் தலைமைப் பதவி அல்லது பொறுப்புகள் கிடைத்தால்தான், இவர்கள் அவற்றில் மிகவும் தீவிரமாகவும், சிறப்பாகவும் ஈடுபட்டு, அந்தக் காரியங்களைச் செய்து முடிப்பார்கள். இல்லை என்றால் அவைகளை அப்படியே விட்டுவிட்டு ஒதுங்கி விடுவார்கள். பின்பு அந்தக் காரியங்கள் கெட்டழிந்தாலும் கூட அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்பட மாட்டார்கள். இவர்களது திருமணம் இவர்கள் தாம்பத்தியத்தில் மிகுந்த விருப்பமும், வேகமும் உடையவர்கள்.

தங்களது நட்பு எண்களான 3, 5, 6, 9 ஆகிய எண்களில் பிறந்தவர்களை (பிறவி எண், கூட்டு எண்) மணந்து கொண்டால், இவர்களுக்கு ஆனந்தமான திருமண வாழ்க்கை அமையும். குழந்தை பாக்கியம் இவர்களுக்கு உண்டு. ஆண் குழந்தை நிச்சயம் ஏற்படும். 2, 11, 20, 29, 8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களையும், கூட்டு எண் 2, 8 வரும் பெண்களையும் திருமணம் செய்யக் கூடாது. திருமண வாழ்க்கையே கசந்து விடும். திருமண நாளின் எண்கள் 3, 6, 9, 1 ஆகியவை வந்தால், குடும்ப வாழ்க்கை நன்கு அமையும்.

# சீரான படகுச் சேவையே தேவை

**ஊரவன்**

நெடுந்தீவு – குறிகாட்டுவான் இடையிலான பயணிகள் படகு சேவையை வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் தனியாரும் இணைந்து நேர அட்டவணைப்படி நடத்தி வருகின்றனர்.

வடதாரகை படகு திருத்த வேலைக்காக கொழும்புக்கு சென்றுள்ளதால் அதனது சேவை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. காலை 8மணிக்கு குறிகாட்டுவானில் இருந்து புறப்பட்டு மாலை 4.30 மணிக்கு நெடுந்தீவில் இருந்து மீளத் திரும்பும் வகையில் வடதாரகை சேவையாற்றி வந்தது. இந்த சேவையால் அரச உத்தியோகத்தர்களும் விசேட தேவை கருதி நெடுந்தீவு சென்று திரும்பு வோரும் நன்மை அடைந்தனர். இன்று திருத்தம் காரணமாக இந்தச் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பலர் பாதிக்கப்பட்டதை அறிய முடிகிறது. அரச அலுவலகங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அங்கு தங்குவதற்கு சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், பல லட்சம் ரூபாவைக் கொட்டி, விடுதிகள்கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நெடுந்தீவு பிரதேச அரச உத்தியோகத்தர்களுக்கென அரச விடுதிகள் இருந்தும் இதனைப் பயன்படுத்தி தங்கி நின்று சேவையாற்ற முடியாதா?

இந்த விடுதிகளில் படுக்கை வசதிகள், தொலைக்காட்சி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் குறைந்தளவான மாத வாடகையே அறவிடப்பட்டும் வருகின்றது. அந்த நிலையில் அரச உத்தியோகத்தர்கள் அங்கு தங்கி நின்று சேவை செய்ய முடியாத நிலை என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.



தற்போதுள்ள நேர அட்டவணைப்படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய படகான குமுதினி காலையில் 7.30 மணி தொடக்கம் பி.ப. 2.30 மணி என நெடுந்தீவில் இருந்தும் காலை 9.30 மணி – மாலை 4 மணி என குறிகாட்டுவானில் இருந்தும் சேவை செய்வதுடன் தனியார் படகுகள் காலை 6.30 மணிக்கு நெடுந்தீவில் இருந்தும் பிற்பகல் 3 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்தும் சேவையில் ஈடுபடுகின்றன.


இந்தச் சேவை நெடுந்தீவு மக்களுக்கு போதுமானது. இதனை மாற்றம் செய்து, பொதுமக்கள் சேவையை மாற்றி அரச உத்தியோகத்தர்களது தேவையை நிறைவேற்றும் சேவையாக மாற்றுவதற்கும் முயற்சிப்பதாக தகவல்கள் வந்துள்ளன. இதனால் இருவழிகளிலும் பாதிக்கப்படுவது நெடுந்தீவு மக்கள்தான். ஏனெனில் மாறப்போகும் நேரமாற்றமானது அரச உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்பாக மாறவுள்ளது.

காலை 9 மணிக்கு அலுவலகம் வந்து மாலை 4 மணிக்கு அலுவலகத்தை விட்டு கிழமை முழுவதும் செல்ல முடியும் என எந்த அரச சட்டம் உள்ளது. [illegible] அரச அதிகாரம் [illegible] அவ்வாறு [illegible] நெடுந்தீவு உள்ளது. எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் நெடுந்தீவில் சேவை செய்த பல அரச உத்தியோகத்தர்கள் எந்த வித மேலதிக கொடுப்பனவும் இன்றிச் சேவை செய்தனர்.

இன்று எத்தனையோ வசதிகள் இருந்தும் அரச சக்கரம் தங்கள் கையில் என்ற நோக்குடன் இங்குள்ள அரச அதிகாரிகள் தங்களது நலன்கருதி நெடுந்தீவு மக்களது போக்குவரத்து ஒழுங்குகளைச் சீரழித்து மக்களுக்கான அரச சேவையைக் கூட நிறைவாகக் கிடைக்க முடியாத நிலையை தோற்றுவித்துள்ளனர். நெடுந்தீவு வாழ் மக்களது பயணத் தேவையை கருத்தில் கொண்டு சீரானதொரு படகுச் சேவையே இன்றைய தேவையாகும். இதனையே நாம் எதிர்பார்க்கின்றோம். அதனை எவர் தீர்மானிப்பது? ஒரு பக்கச் சார்பான நெடுந்தீவு அரச நிர்வாகமா? நெடுந்தீவு மக்கள் நலன் சார்ந்த சமூக அமைப்புக்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்



# குற்றவாளிகளை இனியும் தப்பிக்க விடலாமா?

இலங்கையில் குற்றவாளிகள் உரிய வகையில் தண்டிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே சுமத்தப்பட்டு வருகின்றது. அமெரிக்காவும் தற்போது இதை உறுதி செய்துள்ளது.

அரசுக்கு வேண்டியவர்கள் எத்தகைய குற்றங்களைப் புரிந்தாலும் தண்டனை பெறுவதிலிருந்து, தப்பித்து விடுவதும், அரசுக்கு எதிரானவர்கள் அப்பாவிகளாக இருந்தாலும் தண்டனைகளை அனுபவிப்பதும் இந்த நாட்டின் மரபுகளில் ஒன்றாக மாறிவிட்டது. இதனால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் சிறுபான்மை இனத்தவரான தமிழ் மக்கள் தான் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. போரைக் காரணம் காட்டித் தமிழர்கள் தண்டிக்கப்பட்டனர்.

**கைது செய்யப்பட்டவர்களைக் காணவில்லை**

கைது செய்யப்பட்ட ஏராளமானவர்கள் காணாமற் போயுள்ளனர். இவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? என்பது கூடத் தெரியவில்லை. இன்றும்கூட இவர்களின் உறவுகள் இவர்களைத் தேடி அலைந்து கொண்டிருக்கின்றனர். இறுதிப்போரின்போது தமிழர் மீதான வஞ்சம் தீர்க்கப்பட்டது. ஆயிரக்கணக்கானவர்கள் கொன்றொழிக்கப்பட்டபோதிலும், இதற்குக் காரணமானவர்கள் எவரும் தண்டிக்கப்படவில்லை. மாறாகப் போர் வெற்றியின் நாயகர்களாகவே மதிக்கப்படுகின்றனர்.

மகிந்த இந்த நாட்டின் தலைவராக இருந்தபோது நாட்டின் சட்டதிட்டங்கள் சீர்குலைந்துபோய் காணப்பட்டன. அரசை எதிர்த்தவர்களும், விமர்சித்தவர்களும் சென்ற இடம் தெரியாமல் ஆக்கப்பட்டனர். உயர் பதவிகளில் இருந்தவர்களும் இதற்கு விதிவிலக்காக இருந்ததில்லை. முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க ஆகியோரை இதற்கு உதாரணமாகக் கூறமுடியும். ஆனால், அரசுக்கு வேண்டியவர்கள் என்னதான் குற்றச் செயல்களைப் புரிந்தாலும் தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொண்டனர். முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, சமுர்த்தி அலுவலர் ஒருவரை மரத்துடன் கட்டி வைத்தார். ஊடக நிறுவனங்களுக்குள் புகுந்து அடாவடித்தனத்தில் ஈடுபட்டார். ஆனால் அவருக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் அரசினால் மேற்கொள்ளப்படவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து செயற்பட்டு வரும் ஊடக நிறுவனம் ஒன்று பல தடவைகள் தாக்குதல்களுக்கு உள்ளானது. இதில் மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டதுடன் சொத்துக்களுக்கும் பேரழிவு ஏற்பட்டது. ஆனால் குற்றவாளிகள் கைது செய்யப்படவுமில்லை, தண்டிக்கப்படவுமில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், மாணவர்கள், பொதுமக்கள், தொண்டு நிறுவனப் பணியாளர்கள் எனப் பலர் கொலை செய்யப்பட்டனர். ஆனால் கொலையாளிகள் எவருமே தண்டிக்கப்படவில்லை.





**தற்போதைய அரசும் முன்னைய வழியில்**

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஏராளமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகத் தற்போதைய அரசும் உறுதியான நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. வெறும் கண்துடைப்புக்காக விசாரணைகள் இடம் பெறுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது. முன்னாள் முக்கிய அரசியல்வாதிகளின் ஊழல், மோசடிகள் குற்றச்சாட்டுகள், பிரபல றகர் வீரரின் கொலை தொடர்பான விசாரணைகள், காணாமற் போகச் செய்யப்பட்டவர்களின் விவகாரம், இறுதிப் போரின் போது இடம்பெற்ற குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் யாவும் கிணற்றினுள் வீழ்ந்த கல்லின் நிலையில் அமிழ்ந்து போய்க் காணப்படுகின்றன. குற்றம் சுமத்தப்பட்டவர்களைச் சிலநாள்கள் மறியலில் வைப்பதும் பின்னர் பிணையில் வெளியே விடுவதும் வழக்கமாகவே மாறிவிட்டது. இந்த நிலை நீடிக்குமாயின் குற்றவாளிகள் ஒருபோதுமே தண்டிக்கப்படப் போவதில்லை.

**நீதித்துறையில் தராதரம் வேண்டாம்**


ஒரு நாட்டின் மிக உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்படுவது நீதித்துறை ஆகும். நீதிக்கு முன்பாக உயர்வு, தாழ்வு, தராதரம் எதுவும் இருக்க முடியாது. அனைவருக்கும் நீதி என்பதே தாரக மந்திரமாக இருக்க வேண்டும். நீதி பழுதான ஒரு நாட்டில் யாவுமே பழுதடைந்து செயலற்றுப் போய்விடும். தற்போதைய அரசு குற்றவாளிகளைத் தண்டிப்பதிலும், அப்பாவிகளுக்கு நீதி வழங்குவதிலும் இனியும் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது. இது இந்த நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்கு இழைக்கப்படுகின்ற மிகப் பெரிய துரோகமாகும். குற்றவாளிகளுக்கு நீதியின் பாற்பட்டு காலதாமதமின்றி உரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். இதில் ஏற்படுகின்ற தாமதங்கள் நாட்டின் ஜனநாயகத்தையும், அபிவிருத்தியையும் அழித்துவிடும்.

> “கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஏராளமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகத் தற்போதைய அரசும் உறுதியான நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. வெறும் கண்துடைப்புக்காக விசாரணைகள் இடம்பெறுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது.”

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# உழைத்து வாழ வேண்டும்



வசந்த், சுந்தர் இருவரும் அண்ணன் தம்பிகள். அவர்கள் மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒருநாள் நண்பகல் நேரம், அவர்கள் இருவரும் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அவர்களிடம் அவன், சாப்பிட்டுப் பல நாள்கள் ஆகின்றன. ஏதேனும் உணவு தாருங்கள் என்று கெஞ்சினான். இரக்கப்பட்ட வசந்த் அவனுக்கு உணவு தந்தான்.

இதைப் பார்த்த சுந்தர், அண்ணா! இப்படிப்பட்ட சோம்பேறிகளிடம் இரக்கம் காட்டக் கூடாது என்று சொன்னான். அடுத்த நாளும் அந்தப் பிச்சைக்காரன் அங்கே வந்தான். அவனுக்கு வசந்த் உணவு தந்தான். மீண்டும் இவன் இங்கே வந்து பிச்சை எடுக்கிறானே என்று கோபம் கொண்டான் சுந்தர்.

சோம்பேறிப் பயலே! அடுத்த முறை உன்னை இங்கே பார்த்தால் தொலைத்து விடுவேன் என்று கத்தினான் சுந்தர். மூன்றாவது நாளும் பிச்சை கேட்டு அங்கே வந்தான் அவன். கோபத்தால் துடித்த சுந்தர் அங்கிருந்த தூண்டில் ஒன்றை எடுத்துக் கொண்டான். அவனைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு ஏரிக் கரைக்கு வந்தான்.

இப்படிப் பிச்சை எடுத்து இழிவான வாழ்க்கை நடத்துகிறாயே? உனக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தருகிறேன். இந்தத் தூண்டிலை வைத்துப் பிழைத்துக் கொள் என்றான். அவனுக்கு மீன் பிடிக்கக் கற்று கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றான். பல ஆண்டுகள் சென்றன. செல்வந்தர் ஒருவர் அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் அங்கே வந்தார். அவர் கையில் தங்கத்தால் செய்யப்பட்ட சிறிய தூண்டில் ஒன்று இருந்தது. வசந்தும், சுந்தரும் அவரைப் பார்த்தனர். தங்கத் தூண்டிலை சுந்தரிடம் தந்தார் அவர். என் அன்புப் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

தன் வீட்டிற்கு வந்த பிச்சைக்காரன்தான் அவன் என்பது வசந்துக்கு தெரிந்தது. கோபத்தால் துடித்த அவன், உனக்கு உணவு தந்துக் காப்பாற்றியவன் நான். எனக்குத்தான் இந்தத் தங்கத் தூண்டில் உரியது என்று கத்தினான். ஆனால், அவரோ, இது உங்கள் தம்பிக் குத்தான் உரியது என்று உறுதியாகச் சொன்னார். இதை வசந்த் ஏற்றுக் கொள்ளவில்லை. வழக்கை நீதி மன்றத்திற்குக் கொண்டு சென்றான். நடந்ததை எல்லாம் விசாரித்தார் நீதிபதி.

வசந்தைப் பார்த்து அவர், நீ இவருக்கு உணவு அளித்துக் காப்பாற்றியது உண்மைதான். உன் தம்பியோ இவர் வாழ்வதற்கு வழி காட்டினார். அதைப் பயன்படுத்தி இவர் இந்த நிலைக்கு உயர்ந்தார். இதனால் தூண்டில் சுந்தருக்கே உரியது எனத் தீர்ப்பு வழங்கினார்.



## விடுகதைகள்


1) கசப்புக்காரன் கலரில் மட்டும் பசப்புக்காரன் அது என்ன?
2) எங்கள் ஊர் இரும்பு ஏகப்பட்ட தூரம் மிதக்கும் அது என்ன?
3) நலம் பெற ஒரு நறுக். அது என்ன?
4) எலும்பில்லாதவன் தான், வம்பில்லாதன் அல்ல. அது என்ன?
5) காட்டுக்குள்ளே நின்றவனைக் கூட்டுச் சேர்த்தால் சுத்தத்துக்கு உதவுவான் அது என்ன?
6) தங்கம் நடுவே வைரக்குவியல்கள் அது என்ன?
7) மேலே வெட்டவெளி, கீழே பொட்டல் வெளி, நடுவில் தண்ணீர்பந்தல், அது என்ன?
8) முள்ளுக்கட்டை, அதைத் தாண்டினால் இனிப்புக்கூடு.- அது என்ன?
9) சுற்றிச் சுற்றி வருவான், சுற்றிலும் இருப்பான். ஆனால், இவனை உணரலாமே தவிர பார்க்க முடியாது. அது என்ன?

### விடைகள்:

1) குன்றிமணி
2) கப்பல்
3) டாக்டர் போடும் ஊசி
4) நாக்கு
5) விளக்குமாறு
6) வானத்தில் நிலவு, நட்சத்திரங்கள்
7) வானம், பூமி, மேகம்
8) பலாப்பழம்
9) காற்று



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





## வரலாற்றில் இன்றைய தினம்

753 - கி.மு. றோமுலாஸ் என்பவரால் றோம் கண்டுபிடிக்கப்பட்டது.

1506 - யூதர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட 1900 இற்கும் மேற்பட்டோர் போர்த்துக்கேய கத்தோலிக்கர்களால் வெட்டிச் சாய்க்கப்பட்ட நிலையில் மூன்று நாள் லிஸ்பன் படுகொலை முடிவுக்கு வந்தது.

1509 - தனது தந்தை ஏழாம் ஹென்றி சாவடைந்ததையடுத்து எட்டாம் ஹென்றி இங்கிலாந்தின் ஆட்சிபீடம் ஏறினார்.

1987 - தலைநகர் கொழும்பில் இடம்பெற்ற 106 பேரின் சாவுக்குக் காரணமான கார்க்குண்டுத் தாக்குதலுக்குத் தமிழ்ப் புலிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

1989 - சீன சீர்திருத்தத் தலைவர் ஹீ யுவா பாங்க் ஞாபகார்த்தமாக 100,000 மாணவர்கள் வரை பீஜிங் தியனமன் சதுக்கத்தில் ஒன்று கூடினர்.

1993 - பொலிவியா லா பாஷ் உச்ச நீதிமன்றினால் முன்னாள் சர்வாதிகாரி லூயிஸ் கார்சியா மெஷாவுக்கு கொலை, திருட்டு, மோசடி மற்றும் அரசியல் யாப்பை மீறியமை தொடர்பில் 30 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

2004 - பாஸ்ராவைச் சுற்றி பொலிஸ் நிலையங்களை இலக்காக வைத்து மேற்கொள்ளப்பட்ட 5 தற்கொலை கார்க் குண்டுத் தாக்குதலில் 74பேர் சாவு. 174பேர் காயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மகா சக்தியாகிய பெண்கள்

அரியாலையூர் சரஸ்வதி

பெண்களைக் கடவுளின் சக்தி என்பார்கள். அன்னை பராசக்தியின் வடிவமான பெண் போற்றுதற்குரியவளாகின்றாள். மேலும் மனிதர்களுக்குரிய ஒரு தோழி. வாழ்க்கையின் அருஞ்செல்வம், இயற்கையின் விசித்திரம், இயற்கையின் அற்புதங்களுக்கெல்லாம் அற்புதம் பெண். வீட்டுக்கு அரசி, லக்ஷ்மி, இனிமையான துணைவி என்ற பெருமை எல்லாம் பெற்றுத் துலங்குபவள். இயற்கையாகவே பெண் பொறுமை, சகிப்புத்தன்மை, பக்தி, பிரேமை ஆகிய நற்குணங்கள் நிரம்பியவளாகவே காணப்படுகின்றாள். தாயாக , பிள்ளையாக, பெண்ணாக என்ற பல நிலைகளில் இருந்து ஒரு வீட்டையும் சமூகத்தையும், நாட்டையும் தாங்கிப் பிடிக்கும் தூணாகச் செயற்படுகின்றாள்.

பெண் என்பவளுக்கு நாணம் ஓர் அணிகலன் போன்றது. ஒரு பெண் அழகும் நாகரிகமும் உள்ள போதும் நாணம் இல்லாததவளாக இருந்தால் அவளது பெண்மை வெறுமையாகத் தோன்றும். பெண்மையை ஒளி இழக்கச் செய்துவிடும். எளிமை, பணிவு , சுறுசுறுப்பு , இனிய சுபாவம் உயர் தத்துவங்களின் மேல் பற்றுதல், அடக்கம் ஆகியவற்றின் கூட்டே நாணம் எனப்படுகிறது. இந்த நாணமுடைய பெண் இயற்கையாகவே தனது எல்லையை மீறிப் போகமாட்டாள். இது அவளைத் தெய்வ நிலைக்கு உயர்த்துகின்றது.

மலர்களில் உள்ள தேன், வண்டுகளையோ தேனீக்களையோ வருந்தியழைப்பதில்லை. அவற்றைத் தேடிச் செல்வதுமில்லை. அந்தத் தேனைச் சுவைக்க அவைகளே அந்த மலர்களை தேடி வருகின்றன. ஒரு நாணமுள்ள பெண்ணுக்கும் அவளைத் தேடி வரும் கௌரவத்துக்குமான தொடர்பும் இதைப் போன்றதே. ஒரு பவித்திரமான பெண் கௌரவத்துக்கோ புகழுக்கோ ஆசைப்படமாட்டாள். அதுவே அவளது ஆத்ம தர்மமாகக் கொள்ளப்படுகின்றது. இந்த நிலையிலே இல்லத் தலைவியானவள் கிருகலக்ஷ்மி என்று அழைக்கப்படுகின்றாள்.

எங்கள் அடுத்த தலைமுறையினர் சிறப்புற ஓங்க வேண்டுமாயின் அதற்கு ஆதாரமாக இருப்பவளும் பெண்ணே. பண்டைய காலம் தொட்டே பெண்கள் தம் குழந்தைகளுக்கு சத்தியம், தர்மம், அன்பு இவற்றைப் பற்றி எல்லாம் போதித்து வந்துள்ளனர். இதில் ஒரு தாயின் பங்கு மிகவும் புனிதமானது. இதனால் ஒரு குழந்தைக்கு முதல் குரு தாயாகிறாள். எங்கள் கலாசாரம் தாய்மைக்கு முன்னுரிமை கொடுத்து மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நிலையில் இவர்களது பெருமையையும் முக்கியத்துவத்தையும் போதித்து வருகின்றது.

மனித வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டாகக் கூறப்படும் உயர்ந்த உன்னத மேம்பாடுகளைக் கொண்ட உத்தமர்களான மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர், சரித்திர வீரரான சிவாஜி, அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் போன்ற பல மகான்களும் அவர்களது அன்னையர்களினாலேயே வளப்படுத்தப்பட்டார்கள். மேலும், அன்னையர்கள் அவர்களுக்கு உறுதுணையாகவும் இருந்துள்ளனர். உலகின் ஆரம்பகாலம் தொட்டே பெண்ணினம் முன்னிலைப்படுத்தப்பட்டு வாழ்வுக்கு ஒளியூட்டுபவர்களாகச் சித்திரிக்கப்பட்டு வந்துள்ளது. இந்தத் தன்மையை இதிகாச புராணங்களினூடாகவும் எமது முன்னைய தலைமுறையினூடாகவும் அறிந்து எமது வாழ்வைச் செப்பனிட்டு நாம் வாழ்ந்து வருகின்றோம்.

இன்று இந்த வாழ்க்கைமுறை ஒரு புறமிருக்க நாகரிக வளர்ச்சி காரணமாக வசதிவாய்ப்புகள் பெருகி பெண்கள் மத்தியில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. புனிதமான மேன்மையான வாழ்வு வாழும் பெண் எனப் போற்றப்பட்டவள் இன்று தன்னிச்சையான போக்கினால் உலக சுகங்களுக்கு அடிமையாகித் தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளாள்.

பெரும்பாலான இளம் சமூகத்துப் பிள்ளைகள் தமது தீய பழக்கங்களாலும், கீழ்த்தரமான நடத்தைகளாலும் சமூகத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களால் வீட்டினரின் கௌரவம், சமூகப் பண்பாட்டுச் சிறப்புகள் யாவும் அழியும் தன்மைக்கு இட்டுச் செல்லப்படுகின்றன. பெண்களுக்கு சிறந்த பண்புகளையும் சீலத்தையும் கற்பிக்கும் பெற்றோர்கள் நாட்டுக்கு நலத்தையும் சாந்தியையும் அளித்தவர்கள் ஆகின்றனர்.

ஒரு குடும்பத்தின் முன்னேற்றமாயினும் சரி, ஒரு சமூகத்தின் முன்னேற்றமாயினும் சரி, ஒரு நாட்டினுடைய முன்னேற்றமாயினும் சரி, யாவையும் ஒரு முறையான பெண் கல்வியையே ஆதாரமாகக் கொண்டுள்ளது. இந்தக் கல்வி மூலம் பெறும் பாண்டித்தியமானது நல்ல செயற்றிறனாக அமைந்து வீட்டுக்கும், நாட்டுக்கும் மேம்பாட்டைக் கொடுக்க வேண்டும். முன்னைய காலங்களில் சாவித்திரி, அனுசூயை, நளாயினி, சந்திரமதி போன்ற பதிவிரதைகள் தங்கள் இளமைக் காலங்களில் தகுந்த அறக்கல்வியையும் சிறந்த புத்திசாலித்தனத்தையும் பெற்றிருந்தனர்.

இன்று பெண்ணானவள் நாகரிக மோகத்தில் திளைத்துச் செயற்படும்போது பெண் பின்னடைவையே சந்திக்க நேர்கின்றது. பெண்ணானவள் தன்னையும், தன் சந்ததியினரின் எதிர்கால வாழ்வு குறித்தும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். நாகரிகத்தோடு போட்டி போட்டுச் செல்லாது சற்றும் பின் நிற்கும்போது பெண்ணானவள் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுக் கொள்கின்றாள்.

இன்றைய பெண்கள் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். உலகியல் கல்வியை நாம் எவ்வளவுதான் கற்றுக் கொண்டாலும், பெற்றுக்கொண்டாலும் எங்கள் தூயவாழ்வுக்கு ஆதாரமாகவும், உறுதுணையாகவும் இருப்பது தெய்வீக அன்பும் ஒழுக்க விழுமியங்களுமாகும். எவ்வளவு தான் பட்டங்களைப் பெற்றாலும், பதவிகளைப் பெற்றாலும் நல்ல பண்புகள், பழக்க வழக்கங்கள், நன்நடத்தைகள், அன்புசெய்தல் போன்றவற்றை நாம் தெரிந்து கொள்ளாவிட்டால் எமது கல்வியின் உச்சப்பயன் பூஜ்ஜியமாகவே அமைந்துவிடும்.

எனவே, பெண்கள் நாட்டின் கண்கள் என இருந்து அறநெறி காத்து, தன் சந்ததியையும் தலைமுறைகளையும் மனதாலும் வலிமை பெற்றிருக்க வேண்டும். நல்ல தாய்மாரே நல்ல தேச மக்களை உருவாக்குகின்றார்கள். தாய்மார்கள் தியாகம், யோகம், பக்தி என்பவற்றின் இருப்பிடமாகத் திகழ வேண்டும்.

ஒரு மரத்துக்கு ஆதாரமாக இருப்பது அதன் வேர். அந்த வேர்தான் மரத்துக்கு வேண்டிய நீரையும், கனியுப்புக்களையும் உறிஞ்சிக் கொடுத்து மரத்துக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கின்றது. மரத்தையும் விழாமல் தாங்கிப் பிடிக்கின்றது. அந்த வேருக்குரிய பெறுமதியை உடையவளாக எங்கள் [illegible] பெ[illegible]ங்க வேண்டும். இதனால் அமைதிக்கும் ஒரு வழி பிறந்துவிடுமே....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் விளையாட்டாகியுள்ள ராஜீவ் கொலையாளிகள் விடுதலை

ராஜீவ் கொலை குற்றவாளிகள் 7 பேரை விடுதலை செய்ய மத்திய அரசின் கருத்தைக் கேட்டு கடிதம் அனுப்பிய தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்துவிட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ், 1991 இல், ஸ்ரீபெரும்புதூரில், லோக்சபா தேர்தல் பரப்புரைக்கு வந்தபோது, மனித வெடிகுண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில், முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி ஆகிய நான்கு பேருக்கும், சுப்ரீம் கோர்ட், சாவுத் தண்டனையை உறுதி செய்தது. பின் நளினிக்கு விதிக்கப்பட்ட சாவுத் தண்டனை, ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

இந்த வழக்கில் குற்றவாளிகள் 7 பேர் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 20 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை அனுபவித்து வருவதால் விடுதலை செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக மத்திய அரசின் கருத்தைக் கேட்டு தமிழக உள்துறை செயலகம் வாயிலாக கடந்த மார்ச் 2 ஆம் திகதி கடிதம் அனுப்பியது.

மார்ச் 5ஆம் திகதி தமிழகம், புதுச்சேரி, உள்ளிட்ட 5 மாநில சட்டசபை தேர்தல் திகதியை தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்ததால், இது அரசியல் உள்நோக்கத்துடன் தமிழக அரசு எடுத்த முடிவு என விமர்சிக்கப்பட்டது. தமிழக அரசின் முடிவுக்கு காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்தது.

இந்நிலையில் மத்திய உள்துறை செயலர், தமிழக உள்துறை செயலர் ஞானதேசிகனுக்கு அனுப்பியுள்ள கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ராஜீவ் கொலையாளிகள் 7 பேர் விடுதலை தொடர்பாகத் தமிழக அரசு அனுப்பிய கடிதம் குறித்து, மத்திய சட்ட அமைச்சகத்தின் கருத்தை கேட்டது. இதனடிப்படையில் வழக்கு உயர் நீதிமன்றில் உள்ளதால் 7 பேரை விடுதலை செய்ய மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லை எனக் கூறப்பட்டுள்ளது.

ராஜீவ் கொலையாளிகளை விடுதலை செய்வது குறித்து தமிழக அரசின் கோரிக்கையை இரண்டாவது முறையாக மத்திய அரசு நிராகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2014 ஆம் ஆண்டு மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின்போது, 7 பேரை விடுதலை செய்யக் கோரி 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தமிழக அரசு முதல் கடிதம் எழுதியது. தற்போது கடந்த மார்ச் மாதம் இரண்டாவது கடிதம் அனுப்பியது. இதன் மூலம் இரண்டு கடிதங்களையும் மத்திய அரசு நிராகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

நீதிமன்றமே மாநில அரசு முடிவு செய்து கொள்ளலாம் என்று தான் சொல்லியது. அதனால் தமிழக அரசு இந்திய அரசியல் அமைப்பு விதி 67 சட்டப் படி விடுதலை செய்யவேண்டும். மத்திய அரசுக்குத் தெரியப்படுத்திவிட்டு விடுதலை செய்யலாம்.

ஆயினும் இந்த விடயத்தில் மத்தியில் ஆட்சியில் அமரும் கட்சிகள் விடாப்பிடி நிலையில் உள்ளமை தமிழக அரசுக்குப் பெரும் தலையிடியாகவே இருக்கப் போகின்றது.



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT













## அழியாத நினைவுகள்

சின்ன வயதிலை கிரிகெட் விளையாடும் போது கடைபிடிக்கும் தீவிர கட்டுப்பாடுகள்.
அதிவேகமாக பந்து போடக்கூடாது. அதையும் மீறி வேகமாகப் பந்தை வீசினால் அது "நோபோல்" ஆகும்.

விளையாடும்போது பந்து பக்கத்து வீட்டுக்குள் சென்று விட்டால் அதை அடித்தவரே எடுத்து வர வேண்டும்.

விளையாடும்போது எம்மை அம்மா தேடி வந்தால் விளையாட்டு டிஸ்மிஸ் ஆக்கப்படும்.

பேட்டிங் அணியில் உள்ள ஒருவர் தான் நடுவராக நிறுத்தப்படுவார்.

பந்து தூரமான இடத்துக்குச் சென்றுவிட்டால் அதை அடித்தவரே எடுத்து வர வேண்டும். ஆட்டமிழப்பாகவும் அமையும்.

திடீரென பந்து உடைந்து விட்டால் அணியில் உள்ள அனைவரும் உடனடியாக பணம் கொண்டு வர வேண்டும்.

கப்டனின் பேச்சை மீறினால் ஓவர் கொடுக்கப்பட மாட்டாது. துடுப்பாட கடைசியாக இறக்கப்படுவீர்.

முதல் ஓவர் வீசுபவருக்கு பட்டிங் செய்யும் போது ஓப்பனிங் இறக்கபட மாட்டார்கள்.

திருட்டுத் தனமாக ஓட்டங்கள் அதிகமாகச் சேர்த்துக்கொண்டால் இரு அணிகளுக்கும் இடையில் கலவரம் ஏற்படும்.

விளையாடும்போது எவரேனும் ஒருவர் காயமடைந்தால் நாம் அனைவரும் காயப்பட்டவரின் அம்மாவிடம் திட்டு வாங்க நேரிடும்.

தாமதமாக விளையாட வரும் அணி வீரர்கள் விளையாட்டில் சேர்க்க அனுமதி இல்லை.

வெற்றி பெற்ற அணியே மீண்டும் துடுப்பாட தேர்வு செய்யும் உரிமை கொண்டது.

பந்து மரங்களில் அல்லது சுவரில் பட்டு வந்தால் ஆட்டமிழப்பாகக் கருதப்படமாட்டாது.

அதிகமாக துடுப்பாடச் செல்வதே சரியான கருத்தாக இருக்கும்.

படித்ததில் பிடித்தது



## கபாலிக்கு போட்டி

ரஜினி நடிப்பில் உருவாகியுள்ள படம் "கபாலி". இந்தப் படத்தை "அட்டக்கத்தி" ரஞ்சித் இயக்கியுள்ளார். படத்தில் ரஜினியின் வித்தியாசமான தோற்றம் இரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வளவு எதிர்பார்ப்புடன் உருவாகிவரும் படத்தின் வெளிநாட்டு உரிமை 30 கோடி ரூபாவுக்கு (இந்திய) விற்பனையாகியுள்ளதாக இணையத் தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இதுவரை எந்தப் படத்துக்கும் இல்லாத அளவுக்கு படத்தின் வெளிநாட்டின் உரிமை இவ்வளவு தொகைக்கு விற்பனையாகியுள்ளதாக வெளியான செய்தி கோடம் பாக்கத்தில் அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரஜினி இந்தப் படத்தில் சால்ட் அண்ட் பெப்பர் ஸ்ரைலில் முகத்தில் தாடியுடன் வித்தியாசமான தோற்றத்தில் நடித்துள்ளார். இவருடன் ராதிகா ஆப்தே, தன்ஷிகா, தினேஷ், கலையரசன், உள்ளிட்டோரும் நடித்துள்ளனர். சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். கலைப்புலி எஸ்.தாணு படத்தை தயாரித்துள்ளார். படத்தின் பெரும்பாலான காட்சிகள் மலேசியாவில் படமாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 7 | | | | | | |
| | 8 | | 6 | 5 | | | | |
| 4 | | | | | | | | 8 |
| | 7 | 4 | | 1 | | 9 | 6 | |
| 8 | | | | 9 | | | | |
| | 1 | 3 | | 6 | | 7 | 8 | |
| 6 | | | | | | | | 9 |
| | | | | 2 | 8 | | 1 | |
| | | | | | | 3 | 4 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 9 | 8 | 6 | 2 | 1 | 7 | 4 |
| 2 | 8 | 6 | 7 | 1 | 4 | 5 | 3 | 9 |
| 1 | 4 | 7 | 9 | 3 | 5 | 2 | 8 | 6 |
| 8 | 1 | 2 | 4 | 9 | 6 | 7 | 5 | 3 |
| 5 | 7 | 4 | 1 | 8 | 3 | 9 | 6 | 2 |
| 6 | 9 | 3 | 2 | 5 | 7 | 4 | 1 | 8 |
| 4 | 6 | 5 | 3 | 7 | 9 | 8 | 2 | 1 |
| 9 | 3 | 1 | 5 | 2 | 8 | 6 | 4 | 7 |
| 7 | 2 | 8 | 6 | 4 | 1 | 3 | 9 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**வந்தியத்தேவன்**

இரண்டு பேர் வெளியே போனா ஒரு ஆளுக்கு ஆகிற செலவை விட இரண்டு மடங்கு ஆகும், ஆனா மனைவியோட போனால் நாலு மடங்கு செலவாகுது...


**மேடம்:** உத்தியோக முயற்சியில் வெற்றி கிட்டும் நாள். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். வரன்கள் வாயில் தேடி வந்து சேரும். பிரிந்து சென்ற நண்பர்கள் பிரியமுடன் வந்து சேருவர்.


**இடபம்:** தொட்ட காரியங்களில் வெற்றி கிட்டும் நாள். பரபரப்பாகச் செயற்பட்டு பலரது பாராட்டுக்களையும் பெறுவீர்கள். அடுத்தவர் நலனில் காட்டிய அக்கறைக்கு ஆதாயம் கிடைக்கும். இறைவனின் ஆசியும் உண்டு.


**மிதுனம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமை அடையும் நாள். பிரச்சினைகள் அனைத்தும் நல்ல முடிவுக்கு வரும். தொழில் முன்னேற்றத்துக்கு மங்கையர் வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும். தனவரவு திருப்தியைத் தரும்.


**கடகம்:** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்தி வந்து சேரும் நாள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். வீடு, வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.


**சிங்கம்:** புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் பெறும் நாள். புதிய நண்பர்களின் ஆலோசனையால் பொருளாதார நிலை உயரும். வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




**கன்னி:** நாவண்மையால் நல்ல பெயர் எடுக்கும் நாள். வீட்டு உபயோகப் பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். தொழில் ரீதியாக எடுத்த முயற்சி பயன் தரும். உங்கள் செல்வாக்கு மேலோங்கும்.


**துலாம்:** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள். அலைச்சல் அதிகரித்தாலும், [illegible] தொழில் ரீதியாக [illegible] ஒன்றை மேற் கொள்வீர்கள்.


**விருச்சிகம்:** புதிய பாதை புலப்படும் நாள். புகழ்மிக்கவர்களின் சந்திப்பு கிடைக்கும் நாள். இல்லத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். புதியவர்களின் சந்திப்பு கிட்டும். வீடு, இடம் வாங்கும் விருப்பம் நிறைவேறும்.


**தனுசு:** தொழில் வளர்ச்சி கூடும் நாள். எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடிவரும். வெளியுலக தொடர்பு அனுகூலம் தரும். புதிய பங்குதாரர்கள் தொழிலில் வந்திணைவர். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும்.


**மகரம்:** திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும் நாள். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். நீங்கள் செய்யும் செயல்கள் உங்களின் திறமைகளை வெளிபடுத்துவதாக அமையும்.


**கும்பம்:** எதிரிகளின் பலம் கூடும் நாள். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. குடும்பத்தினர் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டுபிடிக்கலாம். வரவைக் காட்டிலும் செலவு கூடும்.


**மீனம்:** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள். பிறருக்காக பொறுப்புச் சொல்லி வாங்கி கொடுத்த தொகை வந்து சேரும். இடம், பூமி வாங்க மற்றும் விற்க எடுத்த முயற்சி வெற்றி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இது புதுசு


### நெற் பிளவுஸ்

நெற் பிளவுஸ் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. வயது வந்தோர் களுக்காகவும், உடற்பருமனான வர்களுக்காகவும் இந்த வகை பிளவுஸ்கள் வடிவமைக்கப்பட் டுள்ளன. இதன் விலை 1,000 ரூபாவில் இருந்து 1,200 ரூபா ஆகும்.



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 800 | 800 | 600 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 300 | 100 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 600 | 500 | – |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 700 | – | 500 |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 500 | 450 | 400 |
| விளை | 650 | 400 | 400 | 500 | 450 | 500 | 350 |
| முரல் | 300 | 300 | 350 | 400 | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 300 | – | – | 450 | 300 | 350 |
| திரளி | 300 | 250 | 200 | 250 | 350 | 300 | 350 |
| நகரை | 250 | 250 | – | 200 | 400 | – | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 180 | 120 | 50 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 200 | 400 | 250 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 350 | 200 | 150 |
| மதனம் | 150 | 200 | 180 | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 120 | 50 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 500 | 100 | – |
| வாழை | 100 | 150 | 200 | 450 | 400 | – | – |



# தக்காளி ஊறுகாய்

### தேவையானப் பொருள்கள்

தக்காளி கால் கிலோ
காய்ந்த மிளகாய் – 2
மிளகாய்த் தூள் – 2 தேக்கரண்டி
மஞ்சள்தூள் – அரைக் தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு
எண்ணெய் – 1 குழிக்கரண்டி
பெருங்காயம்
– அரைக் தேக்கரண்டி
கறிவேப்பிலை – 1 கொத்து

**செய்முறை :**

தக்காளியை வேகவைத்து நன்றாக மசித்துக் கொள் ளுங்கள்.

ஒரு சட்டியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு, காய்ந்த மிளகாய், கறி வேப்பிலை போட்டு தாளி யுங்கள்.

பிறகு, இதில் மசித்த தக் காளியுடன், மஞ்சள்தூள், மிளகாய்த் தூள் ஆகியவற் றுடன் உப்பு போட்டு நன்றாக வதக்குங்கள்.

இந்தக் கலவை கொதித்து நன்றாகச் சுண்டி எண்ணெய் மிதந்து வரும் சமயத்தில் அடுப்பிலிருந்து இறக்குங்கள்.

இந்தத் தக்காளி ஊறுகாய் பத்து நாள்கள் வரை கெடா மல் இருக்கும்.



# பயன்தரும் வீட்டுக் குறிப்புகள்!

- மருதாணியால் ஆடையில் ஏற்படும் கறைபோக, அதை வெதுவெதுப்பான பாலில் அரை மணி நேரம் ஊற வைத்து, பின் சோப் போட்டு அலசி னால் கறை போய்விடும்.
- பூசணிக்காய் சாற்றில் தங்க நகை களை ஊற வைத்து கழுவினால் அவை நன்றாகப் பளிச்சிடும்.
- தரையைத் துடைக்கும் தண்ணீரில் இரண்டு கரண்டி உப்பைப் போட்டு துடைக்க, ஈக்கள் பறந்தோடும், தொந்தரவில்லாமல் துடைக்கலாம். துணியில் உள்ள வெற்றிலைக் கறையை போக்க எலுமிச்சம் பழத் தின் தோல் அல்லது புளித்த மோரை வெற்றிலைக் கறையின் மீது தடவி னால் கறை இல்லாமல் போய்விடும்.
- தோசைக் கல்லில் எண்ணெய் பிசு பிசுப்பு போக்க தோசைக்கல் அல் லது தாச்சி சட்டி மிதமான சூட்டில் இருக்கும் போது, அவற்றின் மேற் பரப்பில் சிறிது மோர் விட்டு தேங்காய் நாரினால் அழுத்தித் தேய்த்துக் கழுவினால் எண்ணெய் பிசுபிசுப்பு சட்டெனப் போய்விடும்.
- உரல், அம்மி, கிரைண்டர் போன்ற வற்றை புதிதாக வாங்கியவுடன் தவிடு போட்டு அரைத்தால் அதில் உள்ள துளைகள் அடைபட்டு விடும். எனவே, தவிடுக்கு பதிலாக வெங் காயத்தைப் போட்டு அரைத்தால், சிறு சிறு மணல், கல், துகள் ஆகி யவை வெங்காயத்துடன் ஒட்டிக் கொண்டு வந்துவிடும்.
- 2 தேக்கரண்டி தண்ணீர், 1 தேக் கரண்டி வினிகர், 2 தேக்கரண்டி சோப்புக் கரைசல் இதனைக் கலந்து எறும்பு வரகூடாத இடங்களில் தெளித்து விடுங்கள்.
- மூன்று நாள்கள் தொடர்ந்து அந்த எலுமிச்சம் தோல் குக்கரில் அடியில் ஊறிய பிறகு அதனை எடுத்து தேய்த்தால் குக்கரைப் பிடித்திருந்த கறை தனியாக வந்து விடும்.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | கந்தர்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 50 | 60 | 50 | 80 | 20 | 40 |
| கத்தரி | 80 | 50 | 60 | 60 | 60 | 50 | 30 | 20 |
| கரட் | 80 | 100 | 80–200 | 120 | 80 | 140 | 80 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 150 | 140 | 100 | 140 | 80 | 80 | 150 | 60 |
| பாகல் | 120 | 100 | 120 | 140 | 100 | 120 | 110 | 40 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 | – | 80 | 120 | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 80 | 90 | 80 | 100 | 70 | 60 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 100 | 100 | 80 | 130 | 100 | 60 |
| பூசணி | 40 | 80 | 40 | 40 | 30 | 40 | 12 | 20 |
| தக்காளி | 70 | 40 | 80 | 100 | 100 | 120 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 50 | 40 | 30 | 30 |
| கீரை | 20 | 25 | 40 | 20 | 30 | 40 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 20 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 80 | 80 | 100 | 100 | 120 | 60 | 70 |
| புடோல் | 50 | 50 | 60 | 60 | 50 | 60 | 30 | 40 |
| கோவா | 80 | 70 | 70 | 70 | 50 | 100 | 55 | 45 |
| வெண்டி | 80 | 60 | 80 | 100 | 80 | 60 | 50 | 30 |
| போஞ்சி | 40 | 120 | 120 | 140 | 120 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 140 | 160 | 120 | 140 | 110 | 90 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80–120 | 90 | 80 | 100 | 70 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 400 | 300 | 340 | 400 | 300 | 350 |
| வல்லாரை | 15 | 15 | 10 | 15 | 10 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 80 | 80 | 100 | 100 | 120 | 80 | 70 | 50 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 160 | 140 | 160 | 110 | 90 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 250 | 300 | 400 | 280 | 250 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாளை

**சித்திரை-09**

வெள்ளிக்கிழமை
22.04.2016
திதி: பூரணை
மு.ப.10.57 வரை
நட்சத்திரம்: சித்திரை
கா.07.19 வரை
ராகுகாலம்:
10.31-12.01 வரை
சுபநேரம்:
06.01-07.31 வரை

# நிறுவனசார் அனுசரணையாளராக சிலிம்-லிட்ரோ காஸ் கைகோர்ப்பு

இலங்கையில் திரவப் பெற்றோலிய வாயு இறக்குமதியில் ஈடுபடும் மாபெரும்நிறுவனமான லிட்ரோ காஸ், இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகத்துக்கு இந்த ஆண்டுக்கான நிறுவனசார் அனுசரணையாளராகச் செயற்படுவதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இந்நிகழ்வு லிட்ரோ காஸ் பிரதான அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இரு நிறுவனங்களினதும் சிரேஷ்ட அதிகாரிகள் மத்தியில் இந்த உடன்படிக்கை கைமாறப்பட்டிருந்தது.



லிட்ரோ காஸ் மற்றும் சிலிம் ஆகியவற்றுக்கிடையிலாக ஒன்றிணைவு என்பது சந்தைப்படுத்தல் துறையில் பலவாய்ப்புக்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன், வர்த்தக நாமச் சிறப்புகள், Effie விருதுகள், மக்கள் தெரிவு விருதுகள், NASCO, Marketing Rokskw மற்றும் Gamata Marketing போன்ற தேசிய மட்டத்தில் புகழ்பெற்ற நிகழ்வுகளிலும் கைகோர்க்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

இலங்கையின் சந்தைப்படுத்தல் துறையுடன் இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகத்துடனான பங்காண்மை ஊடாக கைகோர்த்துள்ளமையையிட்டு மிகவும் பெருமையடைகிறோம். எமது விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளை மேலும் முன்னோக்கி கொண்டு செல்வதற்கு நாம் திட்டமிட்டுள்ளதுடன், எமது வர்த்தக நாமங்களை ஒன்றிணைத்து, நாடு முழுவதும் உறுதியான சமூகங்களைக் கட்டியெழுப்பவும் திட்டமிட்டுள்ளோம் என லிட்ரோ காஸ் லங்கா லிமிட்டெட் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் சமிந்த எதிரிவிக்கிரம தெரிவித்தார்.

இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் ஸ்தாபிக்கப்பட்டது முதல் சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வமுள்ளவர்களை ஊக்குவித்து அவர்களிடையே தகைமைகளை விருத்தி செய்யும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. இந்தச் செயற்பாடுகள் பெருமளவு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், இக்கல்வியகத்தினூடாக வழங்கப்படும் மூன்றாம் தரப்பு சந்தைப்படுத்தல் தகைமைகளின் மூலம் மாணவர்கள் மற்றும் தேசத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இக்கல்வியகம் வருடாந்தம் 4000 தகைமை வாய்ந்த சந்தைப்படுத்தல் நிபுணர்களை வெவ்வேறு தகைமை மட்டத்தில் உருவாக்கி வருகிறது. இலங்கை சந்தைப்படுத்தல் துறையைச் சேர்ந்தவர்களின் காப்பகமாக இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் திகழ்கிறது.

1970 ஆம் ஆண்டு இந்த அமைப்பு ஸ்தாபிக்கப்பட் டிருந்தது. சந்தைப் படுத்தலுக்கான தேசிய அமைப்பு என்பதை உறுதி செய்யும் வகையிலும், இலாப நோக் கற்ற அமைப்பு எனும் வகையிலும் 1980 ஆம் ஆண்டு நாடாளுமன்ற சட்டத்தின் பிரகாரம் உறுதி செய் யப்பட்டிருந்தது. இலங்கையில் சந்தைப்படுத்தல் தொழிலை மேம்படுத்துவதற்கான பொறுப்பை இந்த அமைப்பு ஏற்றிருந்ததுடன், இதற்காக சந்தைப் படுத்தல் கற்கைகளை வழங்குவதுடன் தேசிய மட்டத்தில் நிகழ்ச்சிகள் மற்றும் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதையும் மேற்கொள்கிறது. இலங்கை சந்தைப் படுத்தல் கல்வியகத்தை முகாமைத்துவ சம்மேளனம் மற்றும் நிறைவேற்றுச் சபை மேற்பார்வை செய்வதுடன், இதில் தலைவர் மற்றும் வெவ்வேறு துறைகளின் நிபுணர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கையில் திரவ பெற்றோலிய வாயு விற்பனையிலும் சந்தைப்படுத்தலிலும் சந்தை முன்னோடியாக லிட்ரோ காஸ் லங்கா லிமிட்டெட் செயற்படுகிறது. இணை நிறுவனமான லிட்ரோ காஸ் டேர்மினல் லங்கா பிரைவேட் லிமிட்டெட் உடன் இணைந்துதனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. லிட்ரோ காஸ் வர்த்தக நாமத்தின உரிமையாண்மையை நிறுவனம் தன்னகத்தே கொண் டுள்ளதுடன், நாடு முழுவதையும் சேர்ந்த தனது 5000 விற்பனை மையங்களின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கி வருகிறது. பாதுகாப்பு நியமங் களைக் கடுமையாக பேணுவதற்காக லிட்ரோ காஸ் நன் மதிப்பைக் கொண்டுள்ளது. கம்பனியின் கொள்கையில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாக கருதப்படுகிறது. (த்)

# மொபைல் கேம் செலன்ஜ் போட்டியை அறிமுகம் செய்துள்ள கொமர்ஷல் வங்கி

நடமாடும் கருவிகள் மூலமான விளையாட்டுக்களை கண்டுபிடிப்பவர்களை ஆதரவளிக்கும் வகையில் கொமர்ஷல் வங்கி ஒரு போட்டியை நடத்தி முடித்துள்ளது. இந்த விளையாட்டுக்களை விருத்தி செய்பவர்களின் படைப்பாக்கத் திறனை அங்கீகரிக்கும் வகையில் இந்தப் போட்டி நடத்தப்பட்டுள்ளது. இலங்கையில் வங்கியொன்றால் அறிமுகம் செய்யப்பட்ட இவ்வகை சார்ந்த முதலாவது போட்டி இதுவாகும். கொமர்ஷல் வங்கி மொபைல் விளையாட்டு அபிவிருத்தி சவால் எனும் பெயரில் இந்தப் போட்டி அறிமுகம் செய்யப்பட்டது. கடந்த மூன்று மாதத்துக்கு மேற்பட்ட காலப் பகுதியில் பேஸ்புக் வழியாக இந்தப் போட்டிக்கு 100க்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்தன. தனிநபர்கள், கம்பனிகள், தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் பலவற்றின் பட்டதாரி மாணவர்கள் இதில் அடங்கும். இதன் முடிவில் 13 விளையாட்டுக்கள் இறுதிச் சுற்றுக்காகத் தெரிவாகின.

பரிசோதனைக் காலப்பகுதியில் அதிகளவு தரவிறக்கம் செய்யப்பட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் லைட் அப் த கிரிட்,டெவில் ரண் மற்றும் பிளப்பி என்பன முறையே முதல் மூன்று இடங்களையும் பிடித்துள்ளன. கூகுள் பிளே ஸ்டோரில் இவற்றை தற்போது இலவசமாகத் தரவிறக்கம் செய்யலாம். இவற்றுக்கு சிறந்த விமர்சனங்களும் கிடைத்து வருகின்றன.



உள்ளூரின் நடமாடும் விளையாட்டு துறையை அபி விருத்தி செய்ய வேண்டிய தன் அவசியத்தை கொமர்ஷல் வங்கி உணர்ந்துள்ளது. இது பெரும்பாலும் பட்டதாரி மாணவர்களும் ஏனைய மாணவர்களும் பங்கேற்கும் ஒரு துறையாக உள்ளது. நடமாடும் கருவிகளுக்கான மென் பொருள் அபிவிருத்தியாளர்களை ஊக்குவித்து அங்கீகரிப்பதே இதன் பிரதான குறிக் கோளாகும். அவர்கள் இத்தகைய பிரயோகங்களைக் கண்டு பிடித்து வங்கியின் ஆதரவோடு அறிமுகம் செய்யும் ஒரு வாய்ப்பை வழங்குவதும், இதன் நோக்கமாகும் என்று கூறினார் வங்கியின் சந்தைப் படுத்தல்பிரிவுபிரதிபொதுமுகாமையாளர்ஹஸ்ரத்முனசிங்க. விளையாட்டுக்களை கண்டுபிடித்து அவற்றை இணைய மேடையில் அரங்கேற்றி ஏதாவது ஒரு சந்தைப்படுத்தல் பொறிமுறையைப் பயன்படுத்தி பிரபலம் அடையச் செய்வது ஆகிய விடயங்களை உள்ளடக்கியதே இந்தப் போட்டியாகும். சமர்ப்பிக்கப்பட்ட விளையாட்டுக்கள் துறை சார் நிபுணர்களால் பரிசீலிக்கப்பட்டுள்ளன. எண்ணக் கருவின் அசல் தன்மை, தரவிறக்கம் செய்யப்படும் எண்ணிக்கை, தொழில்நுட்ப பாவனை, கற்புல வடிவமைப்பு, கட்டுப்பாடுகள், உள்சேர்க்கைகள், பொழுது போக்கு பெறுமானம் என்பன மதிப்பீடுகளின் போது கவனத்தில் கொள்ளப்பட்ட அமசங்களாகும். வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்தச் சவாலை முன்னெடுத்தவர்கள் என்ற வகையில் கொமர்ஷல் வங்கி இதன் அபிவிருத்தியாளர்கள் சார்பாக இவற்றைச் சந்தைப்படுத்தும். அத்தோடு உள்ளூரில் இவற்றைப் பிரபலப்படுத்தும் அதேவேளை, சர்வதேச சந்தைக்கு இவற்றை அறிமுகம் செய்வதற்கான அடித்தளத்தையும் வங்கி பெற்றுக்கொடுக்கும். வங்கித் துறையில் தொழில்நுட்ப ரீதியான வசதிகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் முன்னணி வகிக்கும் கொமர்ஷல் வங்கி அண்மையில் அதன் வாடிக்கையாளர்களுக்கு இலத்திரனியல் கணக்குப் புத்தகத்தை அறிமுகம் செய்து புதிய சாதனைப் படைத்துள்ளது. சேமிப்பு கணக்கு, நடைமுறை கணக்கு, வதியாதோர் வெளிநாட்டு நாணய கணக்கு, வதிவிட வெளிநாட்டு நாணய கணக்கு என்பவற்றின் விவரங்களை அனட்ரோயிட் மற்றும் ஐ.ஓ.எஸ் வலு மூலம் செயற்படும் கையடக்க கருவிகள் மூலம் தெரிந்து கொள்ள இது வழியமைத் துள்ளது. மேலும் அப்பிள் அல்லது அன்ட்ரோயிட் வலு கொண்ட கருவிகள் மூலம் வங்கி அறிமுகம் செய்துள்ள அதன் சொந்த அதிநவீன பிரயோகம் மூலம் இன்னும் பல்வேறு விதமான வசதிகளை அனுபவிக்கும் வாய்ப்பும் வாடிக்கையா ளர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் நடமாடும் கருவிகள் மூலமான விளையாட்டு அபிவி ருத்தி துறையானது துரித வளர்ச்சி கண்டு வரும் ஒரு துறையாகும். இந்தத் துறை பல தொழில்முயற்சியாளர்களை உரு வாக்கியுள்ளது. தொழில்நுட்ப ரீதியாகப் புதிய கண்டு பிடிப் புக்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பல வசதிகளை வழங்க அர்ப்பணம் பூண்டுள்ள கொமர்ஷல் வங்கி அதற்கு மேலதிகமாக உள்ளூர் நடமாடும் விளையாட்டுத்துறை அபிவிருத்தியாளர்களுக்கு தொழில்நுட்ப ரீதியாகவும் தனது சந்தைப்படுத்தல் நிபுணத்துவம் மூலமும் தொடர்ந்து தேவையான ஆதரவை வழங்க முன்வந்துள்ளது என வங்கி அறிவித்துள்ளது. (த்)

வணிகம்

நுட்பம்



## ஐ போனின் ஆயுள் மூன்று ஆண்டுகள்!

உலகில் முன்னணியில் உள்ள அப்பிள் நிறுவனத்தின் ஐபோன் தற்போது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த நிலையில் தமது ஐபோனின் ஆயுள்காலம் 3 ஆண்டுகள் என்று அப்பிள் நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

அப்பிள் நிறுவனத் தாயாரிப்புக்களின் ஆயுள் காலம் குறித்து அந்நிறுவனம் அண்மையில் விளக்கம் அளித்துள்ளது. அப்பிள் கைக் கடிகாரங்களின் ஆயுள்காலம் 3 ஆண்டுகள் என்றும், அப்பள் தொலைக்காட்சியின் ஆயுள் காலம் 4 ஆண்டுகள் என்றும் குறிப்பிட்டுள்ளது. இது தவிர, சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் கருத்தில் கொண்டு எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்துள்ள அப்பிள் நிறுவனம், தங்களது தயாரிப்புக்களில் பெரும்பாலானவை மறுசுழற்சிக்கு உட்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது.



## மேர்சிடிஸ் பென்ஸின் அதி சொகுசுப் படகு

கார்களை உற்பத்தி செய்து உலக அளவில் விற்பனை செய்துவரும் ஜேர்மன் கம்பெனியான மேர்சிடிஸ் பென்ஸ் தற்போது முதல் முறையாக கார் வடிவில் அதி நவீன சொகுசு படகுகளை உற்பத்திசெய்ய ஆரம்பித்துள்ளது. நேர்த்தியான வடிமைப்பு, உறுதி மற்றும் தொழில்நுட்பத்தால் உருவான கார்களை மேர் சிடிஸ் பென்ஸ் நிறுவனம் உலகில் பல மில்லியன் எண்ணிக்கையில் விற்பனை செய்துள்ளது. இந்த நிலையில் இவர்கள் வடிவமைத்துள்ள சூப்பர் படகு, பல வசதிகளை கொண்ட சிறிய படகாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப விலை 1.2 மில்லியன் பவுண்ஸ் என்றும் முதல் கட்டமாக 10 படகுகளை தயாரிக்கப்பட உள்ளன என்றும் மேர்சிடிஸ் பென்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தப் படகை பெரும் செல்வந்தர்களால் மட்டுமே இந்தப் படகை விலை கொடுத்து வாங்க முடியும்.

தற்போது இந்தப் படகின் வடிவமைப்பு அதன் தோற்றம் ஆகியன இணையத்தில் வெளியாகி பெரும் வரவேற்பு பெற்றுள்ளது.

கடலில் மிதக்கும் ஒரு காரைப்போல இதன் வடிவமைப்பு இருப்பதாகவும் 10 பேரை இந்தப் படகு தாங்கிச் செல்லும் திறன் கொண்டது என்றும் கூறப்படுகிறது. உள்ளே பல்வேறு வசதிகளை அது கொண்டதாகவும் உள்ளது. வடிவத்தில் மாறுபடும் விதத்தில் இந்தப் படகு அமைக்கப்பட்டுள்ளமை ஜேர்மன் தொழில் நுட்பம் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அனைத்துத் தரப்பினரும் நம்பிக்கையுடன் செயற்பட்டால் ஆண்டு இறுதிக்குள் அரசியல் தீர்வைப் பெறலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருக்கின்றார். வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசை அமைத்துள்ள நிலையிலேயே, எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அவரின் நம்பிக்கை நியாயமானதுதான். அதுமட்டுமன்றி, அவரைப்போன்ற நம்பிக்கையை நாங்களும் வைத்திருக்கின்றோம். புதிய அரசமைப்பை உருவாக்கும் வேலைத் திட்டங்களும் இடம்பெற்று வருகின்றன. எமது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலையீட்டில் அதில் பல திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

புதிய அரசமைப்பில் அல்லது அரசமைப்பு திருத்தத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படவேண்டும் என்ற இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இது எமக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். அதற்கான முயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன. அப்படிப் பார்க்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனின் நம்பிக்கை வெற்றிபெறும் சாத்தியம் உள்ளது.

**குழப்பும் விக்கி**

இது இவ்வாறு இருக்க, வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் ஒரு காலத்தில் பதுளை நீதிமன்றத்தில் பணியாற்றியவர். ஒரு சட்டத்தரணியாக நான் அவரிடம்தான் முதலில் எனது தொழிலை ஆரம்பித்தேன். தனது வாகனத்தைத் தானே செலுத்தி வந்த நீதிபதியாக விக்னேஸ்வரன் அந்தக் காலத்தில் இருந்தார். அவ்வாறான ஒருவர், வடக்கு மாகாண முதலமைச்சராக வந்தமையையிட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் தற்போது அவர் மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் தொடர்பில் நான் கவலையடைகின்றேன்.

வடக்கு மாகாண சபையின் தீர்வுத் திட்ட யோசனையானது, சவால்களுக்கு மத்தியில் தீர்வைக் காணும் எமது முயற்சிக்குப் பெரியளவில் தடையாக அமைந்துள்ளது. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளின் அடிப்படையில் இரண்டு மாநிலங்கள் உருவாக்கப்படவேண்டும் என்ற வடக்கு முதலமைச்சரின் யோசனையானது, தற்போதைய நிலைமையில் அவசியமற்றதாக உள்ளது. நாங்கள் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் புதிய அரசமைப்பின் ஊடாக தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முயற்சித்து வருகின்றோம். ஆனால் அந்த முயற்சிகளைச் சீர்குலைக்கும் நோக்கிலேயே, வடக்கு முதல்வரின் திட்ட வரைவு அமைந்துள்ளது. இதுதொடர்பில் நாங்கள் கவலையடைகின்றோம். இந்த அரசியல் தீர்வுத் திட்ட விவகாரமானது மிகவும் உணர்வுபூர்வமானதாகும். எனவே இதில் அவசரப்படக்கூடாது. அவசரப்பட்டுக் குழப்பிவிட்டால், எதிர்பார்ப்புக்களைக் கைவிட வேண்டியேற்படும். குறிப்பாக, வடக்கு மாகாண சபையின் இந்தச் செயற்பாடானது, தெற்கில் சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருக்கும் இனவாதிகளைப் போஷிப்பதாக காணப்படுகின்றது. தெற்கு இனவாதிகளுக்குத் தீனிபோடும் வகையிலேயே, வடக்கு முதலமைச்சரின் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

அது மட்டுமன்றி எமது நேர்மையான அர்ப்பணிப்புமிக்க முயற்சிகளுக்குத் தடையேற்படுத்துவதாக இவர்களின் செயற்பாடுகள் உள்ளன. எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மற்றும் என்னைப் போன்றவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு உலை வைப்பதாகவே, வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் உள்ளன - என்றார். (த-வ-5)

## கணவனைக்

கூலித் தொழிலாளியான குறித்த குடும்பஸ்தருக்கும், அவரது மனைவிக்கும் இடையே நீண்ட நாள்களாகத் தகராறு இடம்பெற்றுள்ளது. இதன் உச்சக் கட்டமாகவே நேற்று இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு கணவன் உறங்கிக் கொண்டிருந்த வேளை, அவரை மனைவி அவரைக் கோடரியால் கொத்தியுள்ளார். இதனால் அந்த இடத்திலேயே கணவன் உயிரிழந்துள்ளார் எனவிசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதன் பின்னர் நேற்றுக் காலை மனைவி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். அவரைக் கைதுசெய்த பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சடலம்பிரேதபரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(த-வ-4-402-21)

## ஆலயங்களில்

நடத்தப்பட்டு வருகின்றது. அதனைத்தடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுவரும் நிலையிலும், வேள்விகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் சைவ மகா சபை அமைப்பு, வேள்வியைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று கோரி, யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

இதனை விசாரணைக்கு எடுத்த நீதிமன்று, வேள்வி நடத்துவதற்கு இடைக் காலத் தடை விதித்தது. அந்த இடைக் காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நேற்றுவரை திகதியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, வேள்வி நடத்துவதற்கான இடைக்காலத் தடை எதிர்வரும் ஜூன் 29 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டது. (த-வ-4)

### வாடகைத்தாய் தேவை

கொழும்பிலுள்ள தம்பதியினர்க்கு IU.F ஊசிமூலம் குழந்தை பெற்றுக்கொள்ள 30 வயதிற்குக் குறைவான பெண் வாடகைத்தாயாகத் தேவை

077 906 1406

### வீடு வாடகைக்கு

இரத்தினபுரம், கிளிநொச்சியில் 2 அறைகள் கொண்ட புதிய வீடு வாடகைக்குண்டு. Hero Hunk மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

076 545 6609

### கணக்காளர் தேவை

கொழும்பில் இறக்குமதி செய்து விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு கணக்கு வேலை முழுவதும் தெரிந்த ஒருவர் தேவை. முன் அனுபவம் திறமையுள்ள 35 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. உங்கள் சுயவிவரக்கோவையை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**இல.48, பலாலி வீதி,**
**திருநெல்வேலி.**

### வெற்றிடம்

Sierra ஸ்தாபனத்தின் கொழும்பு, களுத்துறை, அனுராதபுரம், கம்பளை ஆகிய இடங்களில் உள்ள வேலைத் தளங்களில் வேலை செய்வதற்கு மேசன்மார், மாபிள் பதிக்கக்கூடிய ரைலர்ஸ், கூலிகள், போர்ம் வேர்க் கார்பெண்டர்ஸ், கம்பி வளைக்கும் பார்பெண்டர்ஸ் தேவை. தனியாகவோ குழுவாகவோ வரலாம். சம்பளம் 1,200 ரூபாவிலிருந்து தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். O.T உண்டு. தங்குமிட வசதியுமுண்டு.

கொந்திராத்தும் கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு

**071 599 6611, 077 756 3930, 071 313 5663, 071 510 5720,**

### முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**21.04.2016**



கரணவாய் கிழக்கைச் சேர்ந்த

**சுதாகரன் – புவனா**

தம்பதிகளின் செல்வப்புதல்வி

**செல்வி**

**சுதாகரன் விபீஷனா**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று 21.04.2016 இல் தனது இல்லத்தில் குதூகலமாக கொண்டாடுகிறார்.

செல்வி சு.விபீஷனாவை அப்பா, அம்மா, பைங்கவி, அபிவர்சி, கபீஷன், ஆஹர்சன், நர்மதன், ஆகாஸ், சானுஷன், தரணிகா, நிலா, கம்ஷா, அபினயன், நர்த்தனன், தீபக் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

" வைரசோதி "
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

அப்பம்மா - ந.பாலசரஸ்வதி
அத்தை - ஆனந்தி

### வேலைவாய்ப்பு

வடமாகாணத்தில் வெற்றிகரமாக இயங்கிவரும் "ஸ்மாட்விஷன் மாக்கெற்றிங்" நிறுவனத்திற்கு O/L, A/L படித்த துடிப்பான இளைஞர், யுவதிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. எமது நிறுவனத்திற்கு மேற்பார்வையாளர், உதவி முகாமையாளர்,விநியோகஸ்தர் பதவி வெற்றிடம் உள்ளன. கவர்ச்சிகரமான சம்பளத்துடன் இலகுவான பயிற்சிகளும் வழங்கப்படும். அனைத்து பதவிகளுக்கும் நேர்முகப் பரீட்சை மூலம் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர். முன்பதிவு செய்வோருக்கும் அனுபவம் உள்ளோருக்கும் முன்னுரிமை உண்டு. நேர்முகத் தேர்வு திகதி: 21.04.2016 தொடக்கம் 29.04.2016 வரை நேர்முகத் தேர்வு நடக்கும்

**முகவரி: ரவி லேணர்ஸ் காக்கா கடைச் சந்தி, A9 வீதி, கிளிநொச்சி.**

தொடர்புகளுக்கு:

**077 368 4610 ,021 730 6031, 077 856 9133**

### மரண அறிவித்தல்

**திருமதி ஞானாம்பாள் சிவசூரியர்**



**தோற்றம்: 10.03.1924 மறைவு :19.04.2016**

ஐயனார் கோயிலடி, வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் லண்டன் நியூமோல்டனை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி ஞானாம்பாள் சிவசூரியர் 19.04.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை (உடையார்)-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரை சிவசூரியரின்(ஓய்வு பெற்ற பிரதம புகையிரத நிலைய அதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ராசாம்பாள், சின்னையா, கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, துரையப்பா மற்றும் செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் மகேந்திரராஜா காலஞ்சென்ற ஜெயந்திரன் மற்றும் சிவநிதி, பாலேந்திரன், செல்வநிதி, குலேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் உஷா, சாந்தினி, நாகேந்திரா, உஷா, திருமூலன், சறோ ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆஷி, சாம், பிரகத், அனுஜா,ரெஷ்மி, அவி னாஷ், நிருஜன், அர்சுனா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ரஜிவன், ரதன், சரணன், வாரகி ஆகியோரின் அன்பு அம் மம்மாவும் காவி, பக்ஸ்ரன், அயத்தி, ஆர்தவி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.04.2016 ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

**பிள்ளைகள்**

**மகேன் (ஆஸ்திரேலியா) 61401993712**
**நிதி (லண்டன்) 02087151948**
**பாலா (லண்டன்) 07534933700**
**செல்வி (லண்டன்) 07703065593**
**குலன் (லண்டன்) 07939212616**

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

THE HALO TRUST

**அனுபவமுள்ள மின்னிணைப்புப் பணியாளர்கள் (ELECTRICIANS) பதவி வெற்றிடம்.**

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய நீதியில் 17 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

கிளிநொச்சியைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் எமது வாகனத்திருத்தகத்திற்கும் மற்றும் இயந்திரம் மூலம் மிதிவெடி அகற்றும் உபகரணங்களுக்குமான மின்னிணைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக அனுபவமுள்ள மின்னிணைப்புப் பணியாளர்களை ஆட்சேர்த்துக் கொண்டிருக்கின்றோம்.

**அத்தியாவசிய தகுதிகள்:**

- குறைந்தது மூன்று வருடங்கள் இத்தொழிலில் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.
- கடினவேலை செய்யக்கூடிய ஆர்வமுடையவராகவும் நல்ல தேகாரோக்கியமுடையவராகவும் இருக்க வேண்டும்.
- கிளிநொச்சியைச் சார்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
- செல்லுபடியான வாகன ஓட்டுனர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

**பயனுள்ள (இருப்பினும் அத்தியாவசிய) அனுபவம்/ தகுதிகள்:**

- இலத்திரனியல் கட்டுப்பாட்டு முறைகள்/நீரியல் முறைகள் பற்றிய அறிவு.
- ஆங்கிலப் பேச்சுத்திறன்

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவரங்களை கீழ் உள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

**ஹெலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

அனைத்து விண்ணப்பங்களும் (27/04/2016) புதன் கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் நேர்முகத்தேர்விற்கான அழைப்பு விடுக்கப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்.

(J 522)(10.17.12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### ஸ்ரீநாகேஸ்வரன்

( அரச முகாமைத்துவ உதவியாளர் யாழ்ப்பாணம்)

தோற்றம் 08 . 04 . 1968



மறைவு 20 . 04 . 2016

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீநாகேஸ்வரன் நேற்று (20 .04.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா-மங்கையர்க்கரசி தம்பதியரின் மூத்த மகனும் சிவசுப்பிரமணியம் காலஞ்சென்ற பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயந்தியின் (உமா) அன்புக் கணவரும் ஐங்கரனின் (USA) அன்புச் சகோதரனும் சந்திரராசாவின் (கொக்குவில்) சிறிய தந்தையும்சாவித்திரிதேவி (யாழ்ப்பாணம்), சத்தியசீலன் (லண்டன்), ஜெயசீலன் (லண்டன்), வசந்தி (பிரான்ஸ்), சுகந்தி (லண்டன்), சாந்தி (லண்டன்), குணசீலன்(லண்டன், ஆகியோ ரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
ஜெயந்தி (மனைவி)
ராகினி
021 222 7368

இல-09, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

**திரு.சி.உமாபாலன்**

அவர்களின் அன்புத் தந்தையார்

**நாகநாதர் சிவசுப்பிரமணியம்**

அவர்கள் 2016.04.19 ஆம் திகதி காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த மனவேதனையடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை இராமசாமி



பருத்தித்துறை புலோலி வடக்கு, விஸ்வகுல வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம் பிகை இராமசாமி 20 .04.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமியின் அன்பு மனைவியும் சிறீதரன் (டுபாய்), மேனகா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும் சூரியகுமாரி (டுபாய்), மனோகரன் (ஆசிரியர் -பொலிகண்டி இ.த.க பாடசாலை) ஆகியோரின் மாமியாரும் காருண்யன், கிருஷ்ணி, ராகவி, சாருகி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
077 922 6186

விஸ்வகுல வீதி,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்



திருமதி

### குமரேசுவரி கணநாதன்

யாழ். வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி நுணாவிலை வதிவிடமாகவும் ஆனைக்கோட்டையை தற்காலிக வதிவிட மாகவும் கொண்ட திருமதி குமரேசுவரி கணநாதன் அவர்கள் 18.04.2016 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்-ஆழ்வார்பிள்ளை தம்பதியரின் கொள்ளுப்பேர்த்தியும், காலஞ்சென்ற பெரியதம்பி- கணபதிப்பிள்ளை தம்பதியரின் பேர்த்தியும், காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை- செல்லப்பாக்கியம் தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-நாகம்மா, செல்வநாயகம்-சிவபாக்கியம் மற்றும் நாகம்மா (மட்டுவில்), காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, பொன்னுச்சாமி, செல்லமுத்து, சின்னத்தம்பி, கமலாம்பிகை, சுந்தரலிங்கம் ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-அன்னம்மா, சண்முகநாதன்-அன்னலட்சுமி, தம்பிப்பிள்ளை-நல்லம்மா, சுப்பிரமணியம், சிவபாக்கியம் மற்றும் கதிரேசு ஆகியோரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவரான இரவீந்திரநாதன் மற்றும் இரகுநாதன், மகேசுவரி ஆகியோரின் சகோதரியும், சண்முகலிங்கம், தவமணி, கணேசலிங்கம், சோமலிங்கம் அமுதலிங்கம், பஞ்சலிங்கம், இராமச்சந்திரன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், கணநாதனின் அன்பு மனைவியும், அருந்ததி, கணேசுவரி, இந்திரா, கணேசலிங்கம், கமலாம்பிகை, தில்லையம்பலம், கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனியும், வெற்றிக்குமரன் (செயக்குமார்), மோகனகௌரி ஆகியோரின் பாசமிகு தாயும், கிருஸ்ணவாணி, கணேசுவரன், மகேசுவரன், தர்மேசுவரன், கலைவாணி, தணிசுவரன் ஆகியோரின் பெரிய தாயும், சுதர்சன், சுரேசன், சுதர்சினி, சுதேந்திரன், சுதந்தனா, சுகுணாவதி, சுரேசு, இரமேசு, இரணேசு, சுரேக்கா, திரேசு, கமலநாதன், ஆர்குழலி (ஐங்கிரி) ஆகியோரின் பாசமிகு மாமியும், பிரசாத், நிதர்சன், பிரநிலா, பிரநியா, நிதர்சி, டினேஸ், ஸ்பூர்த்தி, அஸ்வினி, ஐஸ்வர்யா, அஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2016) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணி அளவில் ஆனைக்கோட்டை கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
தம்பி இரகுநாதன்
தங்கை மகேசுவரி } 076 8079135

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்
(J/543) (10,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதான

முதலில் 6 பேரும் பின்னர் 3 பேருமாக 9 பேரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். பின்னர் அவர்களைச் சுன்னாகம் பொலிஸிடம் ஒப்படைத்திருந்தனர்.

அத்துடன், கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து வாள், கைக்கோடரி, இரும்புக் கம்பிகள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களையும் மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் பெரும்பாலானவர்கள் கொக்குவிலைச் சேர்ந்தவர்கள் என்றும், ஏனையவர்கள் பருத்தித்துறை, ஆனைக்கோட்டை, முழங்காவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் முன்னர் பல்வேறு இடங்களிலும் வாள்வெட்டுக்களில் ஈடுபட்டவர்களுடன் குறித்த மாணவர்கள் தொடர்பைப் பேணி வந்துள்ளனர் என்றும், வாள்வெட்டுக் கும்பல்களுக்கும் கைதான மாணவர்களுக்கும் தொடர்பு உண்டு என்றும் பொலிஸாரால் கூறப்பட்டுள்ளது.

பொலிஸார் வேறு விடயம் பற்றிய விசாரணைக்குச் சென்றபோது, குறித்த நபர்கள் பொலிஸாரைக் கண்டு தப்பியோட முற்பட்டபோதே, அவர்களைப் பொலிஸார் துரத்தித் துரத்திப் பிடித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் அநேகமான மாணவர்களின் பெற்றோர், அரச உத்தியோகத்தர்கள் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். மாணவர்களின் பெற்றோர்களில் பிரதேச செயலகம் ஒன்றில் பணிபுரியும் தாய் ஒருவரும், விரிவுரையாளராகவுள்ள தந்தை ஒருவரும், வைத்தியராக உள்ள தந்தை ஒருவரும் உள்ளடங்கியுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

கைதான மாணவர்கள் மல்லாகம் நீதிமன்றில் மேலதிக நீதிவான் கருணாகரனிடம் நேற்று முற்படுத்தப்பட்டனர். இதன்போது குறித்த மாணவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும் பொலிஸார் சான்றுப் பொருள்களாக நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்களுக்கு எதிராகப் பொலிஸார் 2 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வழக்குத் தொடுத்துள்ளனர். சட்டவிரோதமாகக்கூட்டம் கூடியமை மற்றும் ஆபத்தான ஆயுதங்களை வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் அவர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது குறித்த மாணவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், மாணவர்கள் அனைவரும் தனியார் கல்வி நிலையம் சென்று வந்தவர்கள் என்றும், அவர்களுக்கும் வாள்வெட்டுக் குழுக்களுக்கும் தொடர்பில்லை என்றும் மன்றில் தெரிவித்தனர்.

எனவே மாணவர்களைப் பிணையில் விடுவிக்கவேண்டும் என்றும் சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரினர். எனினும் வாள் வெட்டுக் குற்றச்சாட்டில் அவர்கள் ஈடுபட்டுள்ளதாகக் குற்றஞ் சுமத்தித் துரத்திக் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணைகளில் மேலதிக விடயங்களைப் பார்க்கலாம் என்று கூறி அவர்களை எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (த-வ-4)

**வீடு உடன் வாடகைக்குத் தேவை**

யாழ். நல்லூர். திருநெல்வேலி,
கச்சேரி, கொக்குவில் பகுதிகளில்
வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:
**077 005 1796**
(J 526)(10.17)

**வேலையாள்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பிரமாண்டமான தங்க ஆபரண காட்சியறை ஒன்றுக்கு

★ காசாளர் - 1
★ விற்பனையாளர் - 5 பேர்
★ சமையல் உதவியாளர்கள் - 2 பெண்கள்
தேவைப்படுகின்றனர்.

உங்கள்
★ தேசிய அடையாள அட்டை போட்டோ பிரதி
★ கல்வித் தகைமை சான்றிதழ்
★ கிராமசேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடச் சான்றிதழ்.
★ உறவினர் அல்லாத அரசாங்க உத்தியோகத்தர் இருவரின் சாட்சிகளுடன் கூடிய உங்கள் சுயவிவரக் கோவையுடன்

**சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிக்கவும்.**
(கொழும்பில் உள்ள எமது கிளைக்கு பணியாளர்கள் தேவை)

மேலதிக விவரங்களுக்கு
**075 999 3769**
(J 531) (10.17)

## சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் 109 ஆவது ஆண்டு நினைவு விழா-2016

காலம்: 21.04.2016 வியாழக்கிழமை பி.ப 5.30 மணி
இடம் :சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்

தலைவர்
**திரு. பா.கஜேந்திரன்** (சனசமூக நிலையத் தலைவர்)
பிரதம விருந்தினர்
**ஸ்ரீமான் ஆ.நடராஜன் அவர்கள்**
(இந்தியத் துணைத் தூதுவர். யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்
**கலாநிதி. மு.சர்வானந்தன் அவர்கள்**
(பொருளியல் ஆய்வாளர்)
கௌரவ விருந்தினர்கள்
**திரு பு.ரமேஸ்வரன் அவர்கள்**
(செயலாளர் நகராட்சி மன்றம் பருத்தித்துறை)
**திரு. அ. ஜெயநிமலன் அவர்கள்**
(தலைவர், சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்)

சதாவதானி குருபூசைத்தினப் போட்டிகளிலும்,சதுரங்கப்போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்களக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வுகளுடன் கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை, சனசமூக நிலையம்,தம்பசிட்டி, பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்கள்

### டெனிஸ் அருள் சத்தியதேவா



41. மாட்டின் றோட்டைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட டெனிஸ் அருள் சத்தியதேவா 17.04.2016 ஞாயிற்றுக்கிழமை நெதர்லாந்தில் காலமானார்.

அன்னார் ஜெயநாயகி யின் அன்புக் கணவரும் யூடா. யூடித் தெபோரா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.04.2016) வியாழக்கிழமை நெதர்லாந்தில் நடைபெறும்.

அன்னாரின் அஞ்சலி ஜெபக்கூட்டம் அராலி வடக்கு வட்டுக்கோட்டையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.**

**தகவல்: சகோதரர்கள்
பூ. ஜெயநாதன், ஜெயபாலநாயகி
(கண்ணன்)**

**077 283 5155**

### சண்முகராசா சுதர்மன் (மாம்பழம்)



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் பரந்தன். தொண்டமான்நகர் ஆகிய இடங்களை தற்காலிக வசிப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை நிரந்தர வசிப்பிடமாக வும் கொண்ட சண்முகராசா சுதர்மன் (மாம்பழம்) 20.04.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகராசா (முன்னாள் ஊழியர் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை) நித்தியலட்சுமி தம்பதியரின் ஏக புதல்வனும் கௌசலா (ஆசிரியை).துவாரகா. மதுரா (யூனியன் அஸ்யூரன்ஸ் சுன்னாகம்) ஆகியோரின் அன்புச் சகோதர னும் விஜிதரனின் மைத்துனரும் அறிவகனின் அன்பு மாமனுமா வார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 20.04.2016 அன்னாரது இல்லத்தில் நடைபெற்றன.இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஏழாலை கிழக்கு,
ஏழாலை.**

**தகவல்
குடும்பத்தினர்.**

### திருமதி மங்களேஸ்வரி வடிவேலன்



வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் வசாவிளானை வசிப்பிட மாகவும் கொழும்பு. சுன்னாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்களேஸ்வரி வடிவேலன் நேற்று (20.04.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் முருகன் வடிவேல னின் (ஓய்வு நிலை பாடசாலை அதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-மாணிக்கம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான முருகன்-கதிரி தம்பதியினரின் பாசமிகு மருமகளும் திருமதி கமலேஸ்வரி கிருஷ்ணனின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2016) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் புனித அந்தோனியர் வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று கொத்தியாலடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மு.வடிவேலன்
(ஓய்வுநிலை பாடசாலை அதிபர்)**

**சுன்னாகம்.**

**077 697 6773**

## துயர் பகிர்கின்றோம்



நல்லூர் பிரதேச செயலகத்தில்
கடமையாற்றுகின்ற வாழ்வின் எழுச்சி
அபிவிருத்தி உத்தியோகத்தர்
**குருநாதபிள்ளை றஜீவன்**
அவர்களின் அன்புத் தாய்

**குருநாதபிள்ளை இராசலட்சுமி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் எமது சக உத்தியோகத்தருக்கும் அவரின் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்,
முகாமையாளர்களும்,
பிரதேச செயலகம்-நல்லூர்.**
(J/539)(10.17)

## இறைவன் மடியில் இரண்டாம் ஆண்டு

பிறப்பு
08 . 01 . 1936



இறப்பு
21 . 04 . 2014

**திருமதி செசிலியம்மா அன்ரன்**

எங்கள் குடும்ப குத்துவிளக்கு எங்களை விட்டுப் பிரிந்து
இரண்டு ஆண்டுகள் முடிந்தும் உங்கள் நினைவுகள்
எங்களை வாட்டுகின்றன. எங்கள் வாழ்க்கைப்
போராட்டத்தில் நீங்கள் இல்லாத இழப்பை எங்களால் ஈடு
செய்ய முடியவில்லை இருந்தும் உங்கள் ஆத்ம சாந்திக்காக
தினமும் பிரார்த்திக்கின்றோம்.

**63, மத்தியூஸ் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.**

**மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.**

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
18 . 06 . 1945



இறப்பு
21 . 04 . 1991

**திருமதி றெஜீனா றீற்றா தியாகராசா**

கருவறைக் கவசம் தந்த தாயே
கால் நூற்றாண்டுக் காலமாகிறதே
நீ கண்மணிகள் எமைப்பிரிந்து
முத்தென மொழிந்த நீ முகிலாகிப் போனாயோ
சொத்தென நீயின்றி எதுபெற்றும் வீணாயோ
வித்தான நாமுனக்கு அணையாத விளக்காவோம்
விலையேது கொடுப்போம் விடைகாண....?

**46/11 ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர்.**

**குடும்பத்தினர்.**

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
**07.01.1931**

ஆண்டவன் மடியில்
**21.04.2006**



**பொ.டேவிற் ராஜசிங்கம் தம்பிராசா**

21.04.2016

என் அம்மாவாக அப்பாவாக
என் மீது பாசம் நேசம் வைத்து
என்னை உன் மார்புமீதும் தோள்மீதும்
சுமந்து வளர்த்துவிட்டு இன்று
நான் உன்னைத் தேடும் போது
என்னைத் தவிக்கவிட்டுச் சென்றதெங்கே?
என்றும் நீ இயேசப்பாவின் மடியில்
இளைப்பாற உனக்காக என்றும் பிரார்த்திக்கின்றேன்.

120/13, சங்கமித்தை மாவத்த,
கொழும்பு - 13

உன் செல்லப் பேத்தி
சோபாயூட் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘லாரியஸ்’ விருது ஜோகோவிக்கிடம்; சிறந்த வீராங்கனையாக வில்லியம்ஸ்




உலக விளையாட்டு அரங்கில்ஆண்டு தோறும் பெரும் தாக்கத்தை ஏற் படுத்தி அசத்தும் வீரர், வீராங்க னைக்கு புகழ் பெற்ற 'லாரியஸ்' விருது வழங்கப்படுகிறது. 'விளையாட்டின் ஒஸ்கார்' என்று அழைக்கப்படும் இந்த விருது 2000ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி 17ஆவது 'லாரியஸ்' விளையாட்டு விருதுகள் வழங்கும் விழா ஜேர்மனியின் தலைநகர் பெர் லினில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் சிறந்த வீரராக ஜோகோவிக்கும் சிறந்த வீராங்கனையாக செரினா வில்லியம்ஸும் தெரி வானார்கள்.

ஜோகோவிக் ஏற்கனவே 2012 ஆம், 2015ஆம் ஆண்டுகளில் இந்த விருதை பெற்றிருக்கிறார். ஆர்ஜென்டினா கால்பந்து வீரர் லயோனல் மெஸ்சி, ஜமைக்கா ஓட்டப்பந்தய வீரர் உசேன் போல்ட், உலக கார்பந்தய நடப்புச் சம்பியன் ஹமில்டன் ஆகியோரும் இதற்கான போட்டியில் இருந்தபோதிலும் அவர்களை ஜோகோவிக் பின்னுக்கு தள்ளிவிட்டார். 2015 ஆம் ஆண்டில் மூன்று சர்வதேச கிண்ணங்களைக் கைப்பற்றி அமர்க்களப்படுத்திய ஜோகோவிக் 88 ஆட்டங்களில் 82இல் வெற்றி பெற்றிருந்தார். இதே போல் கடந்த ஆண்டு 3 சர்வதேச கிண்ணங் களை வென்றதுடன் ரென்னிஸ் உலகில் முதலிடத்தில் வலம் வரும் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் சிறந்த வீராங்கனையாக தெரிவானார்.

வாழ்நாள் சாதனையாளர் விருது மூன்று முறை உலக கார்பந்தய கிண்ணத்தை வென்றவரான ஆஸ்திரியாவின் 67 வயதான நிக்கி லாவ்டாவுக்கு வழங்கப் பட்டது. உலக ரக்பி சம்பியன் நியூசிலாந்து அணி, உலகின் சிறந்த அணிக்குரிய விருதை தனதாக்கியது. (ம)

# இன்றைய மோதல்கள்

**யாழ். மாவட்ட கால்பந்தாட்டம்**

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்படும் மாவட்ட மட்ட கால்பந்தாட்டத் தொடர் இன்று வியாழக்கிழமை முதல் அரியாலை கால்பந்தாட்ட சம்மேளன மைதானத்திலும் ஸ்ரான்லிக்கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

இதன்படி, அரியாலை பொது விளையாட்டு மைதானத்தில் இன்று இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டங்களில் காலை 9 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியும், 10 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செய லக அணியும்,

11 மணிக்கு இடம்பெறும் மூன்றாவது ஆட்டத்தில் காரைநகர் பிரதேச செயலக அணியை எதிர்த்து சங்கானை பிரதேச செயலக அணியும் தொடர்ந்து இடம்பெறும் நான்காவது ஆட்டத்தில் நெடுந்தீவு பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி யும் மோதவுள்ளன.

ஸ்ரான்லிக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் காலை 9 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும், 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணியும், 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து சாவகச்சேரி பிரதேச செயலக அணியும் தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன. (ம-23-108)

## தமிழர்

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊடக அறிக்கை மூலம் வெளிப்படுத்தியிருந்தார். இந்த நிலையில், கட்சியிலிருந்து வெளியேறுவது தொடர்பாக விளக்க மளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பை அவர் யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்தினார். இந்தச் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

என்னை நேசிக்கின்ற மக்கள், நான் ஈ.பி.டி.பி.யில் இருப்பதை விரும்பவில்லை.இதனால்என்னை நேசிக்கின்ற மக்களுக்காக, அந்தக் கட்சியிலிருந்து நான் தனித்து விலகியுள்ளேன். நான் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து வெளியில் வந்துள்ளேன். என்னுடன் வேறு எவரும் விலகவில்லை. எந்தவொரு அரசியல் கட்சியிலும் நான் இணையவில்லை. அவ்வாறு இணைவதற்காக நான் யாருடனும் பேரம் பேசவில்லை. என்னுடன் யாரும் பேரம் பேசவில்லை. 20 லட்சம் தமிழ் மக்களுக்கு 40 தமிழ் அரசியல் கட்சிகள் இருக்கின்ற சூழ்நிலையில், புதிய அரசியல் கட்சி தேவையில்லை. தமிழ் மக்களைப் பொறுத்த வரை, அரசியல் கட்சிகள் எல்லாம் ஒரே குரலில் நிற்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். இவ்வாறான நிலையில் புதிய அரசியல் கட்சி என்பது தேவையில்லாதது.

தற்போதைய நிலையில் நான் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் இல்லை. தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய காலகட்டம் இதுவென்று நம்புகின்றேன். இதனால் தமிழ் தரப்புக்கள் ஓரணியில் நிற்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார். கடந்த காலங்களிலும் ஈ.பி.டி.பியிலிருந்து நீங்கள் வெளியேறியிருந்தீர்கள். பின்னர் அந்தக் கட்சியுடன் மீளவும் இணைந்திருந்தீர்கள். தற்போதைய வெளியேற்றம் நிரந்தரமானதா ? என்ற கேள்விக்கு, கடந்த காலங்களில் வெளியேறியது என்பது எனது பாதுகாப்புக் காரணமாகத்தான். ஆனால் தற்போது அரசியல் ரீதியாக வெளியேறியுள்ளேன்.

தென்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்கும் என்று யாராவது எதிர்பார்த்தார்களா ? எதிரும் புதிருமாக இருந்த தரப்புக்கள் ஒன்றாக இணைவது தமிழர் அரசியலிலும் நடந்துள்ளது. நான் நம்புகின்ற அரசியல் சூழல்வந்தால்,நாங்கள்எல்லோரும் ஒரு அணியில் வரலாம் – என்றார்.

தமிழ் மக்களின் வேணவாக்கள் – உணர்வுகளுக்கு மதிப்பளித்து ஈ.பி.டி.பியிலிருந்து வெளியேறியதாகக் குறிப்பிட்டீர்கள். அப்படியாயின் ஈ.பி.டி.பி தமிழ் மக்களின் வேணாவாக்கள் - உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவில்லையா ? என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த சந்திரகுமார்,

நான் நம்பியுள்ள அல்லது எனக்கு நெருக்கமாகவுள்ள மக்கள், நான் ஈ.பி.டி.பி.யில் இருந்து கொண்டுதமிழ்மக்களின் வேணாவாக்களை வென்றெடுக்க முடியாது என்று கருதலாம். அதற்காக நான் சொல்லவில்லை ஈ.பி.டி.பியில் அந்த வேணவா இல்லை என்று–என்றார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது, ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ்தேவானந்தாவுக்கு விருப்பு வாக்களிக்குமாறு கிளிநொச்சியில் நீங்கள் கோரவில்லை என்றும், உங்களுக்கு மாத்திரமே விருப்பு வாக்களிக்கச் சொன்னீர்கள் என்றும், இதனால் உங்களுக்கும் ஈ.பி.டி.பி.க்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டதாகவும், இதனால்தான் கட்சியை விட்டு வெளியேறினீர்கள் என்றும் சொல்லப்படுகின்றது. இது உண்மையா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, இது காரணமாக இருக்க முடியாது. இதுவும் இருந்திருக்கலாம். சகல அரசியல் கட்சிகளிலும் இந்தப் பிரச்சினை இருக்கின்றது. அது நாட்டின் தேர்தல் முறைமையில் உள்ள குறைபாடு – என்றார்.

ஈ.பி.டி.பியிலிருந்து விலகுவது தொடர்பில் உங்கள் கட்சித் தலைமைப்பீடத்துக்கு அறிவித்துவிட்டீர்களா ? அவர்கள் ஏதாவது விளக்கம் கோரினார்களா ? என்ற கேள்விக்கு,

இதுவரை அறிவிக்கவில்லை. இன்னமும் 3 தினங்களுக்குள் அறிவிப்பேன். இதுவரை விளக்கம் கேட்கப்படவில்லை. விளக்கம் கேட்கப்படலாம் எனக் குறிப்பிட்டார். தமிழ் மக்களின் வேணவாக்களுக்கு முரணாக, ஈ.பி.டி.பி. செயற்படுவதை உங்களின் கட்சியின் தலைமைப் பீடத்துக்கு தெரியப்படுத்தியிருக்கின்றீர்களா? தமிழ் மக்களினுடைய விருப்பத்துக்கு மாறாக ஈ.பி.டி.பி செயற்படுவதை ஏற்றுக் கொள்கின்றீர்களா? என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, மக்களின்உணர்வுகளுக்கு அமைவாகக்கட்சிக்கட்டமைப்பைகொண்டு செல்லவேண்டும் என்று கட்சியின் தலைமைத்துவத்துக்கு தெரியப்படுத்தியிருந்தேன். நான் மட்டுமல்ல பலரும் தெரியப்படுத்தியிருந்தார்கள். எங்கள் மக்களின் வேணவாக்களை பிரதிபலித்திருந்தால், தேர்தல் முடிவுகளில் நிச்சயம் மாற்றம் ஏற்பட்டிருக்கும் எனக் கூறினார்.

நீங்கள் ஈ.பி.டி.பியின் உறுப்பினராக இருந்த அடிப்படையில், ஈ.பி.டி.பி. கட்சியின் மீது சுமத்தப்படுகின்ற கொலை, கடத்தல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதில் என்ன என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு,

எமது கட்சியின் தலைமைப்பீடம் இது தொடர்பில் பல்வேறு தடவைகள் பதிலளித்துள்ளது. தனி நபர்கள் யாராவது தவறு செய்திருப்பார்கள் எனில், அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிகளில் யாழ். குடாநாடு திறந்தவெளிச் சிறைச்சாலையாக இருந்தபோது, ஈ.பி.டி.பி அமைப்பு இராணுவத்தினருடன் இணைந்து, இராணுவத் துணைக்குழுவாகக் கொலை, கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. தனிநபர்கள் மீதான குற்றச்சாட்டு என்பதை விட, கட்சி மீதே குற்றச்சாட்டு உள்ளது. இது தொடர்பில் நீங்கள் என்ன சொல்கின்றீர்கள் ? இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் என்னிடம் ஆதாரங்கள் இல்லை. அத்துடன் அந்தக் காலப் பகுதியில் நான் கட்சியில் இல்லை. இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் பல இடங்களில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. இது தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டும் – என்றார். (த-வ-5)

## தோல்வியடைந்து

நான்தான் நாட்டின் ஜனாதிபதி பதவியில் இருந் தேன்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவும், உலங்கு வானூர்தியில், அவரது கிராமத்துக்குச் செல்லவும் சந்தர்ப்பம் வழங்கியதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் உலங்கு வானூர்தியில் செல்லும்போது, தேர்தல் முடிவுகள் முற்றாக வெளியாகி இருக்கவில்லை. தேர்தல்கள் ஆணையாளர் தேர்தல் முடிவுகளை அறிவித்திருக்கவில்லை. வேட்பாளர் சிறிசேனவைக் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது. இதனையடுத்து ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து விட்டுக் காலை ஆறு மணிக்கு நான் அலரி மாளிகையில் இருந்து வெளியேறினேன்.

அப்போது நானே நாட்டின் ஜனாதிபதி. எனது பாதுகாப்புப் படையினருடன் கொழும்பில் இருந்து வெளியேறும்போது, நானே நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி. ஜனாதிபதித் தேர்தல் தோல்விக்குப் பின்னர் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க முயற்சித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றேன். இந்தக் குற்றச்சாட்டுக்குப் பொலிஸ்மா அதிபர், முப்படை தளபதிகள் சாட்சியமளித்துள்ளனர். அப்படி நடந்திருந்தால், விசாரணை முடிவுகளை அறிவிக்கச் சொல்லுங்கள். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்குச் செல்ல முன்னர் நாடாளுமன்றத்தில் அவரைச் சந்தித்துப் பேசும்போது, எனது பாதுகாப்பு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, பிரதமருடன் கலந்துரையாடினார். 1980 ஆம் ஆண்டுகளில் நான் நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத காலத்தில் எனக்கு இருந்த உயிர் அச்சுறுத்தல் காரணமாக, அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் ஆலோசனைப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன எனக்கு இராணுவப் பாதுகாப்பை வழங்கினார். அன்று முதல் அனைத்து அரசுகளும் அந்த இராணுவப் பாதுகாப்பை நீக்காது தொடர்ந்தும் வழங்கி வந்தன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 89 வீதம் வாக்களிக்கப்பட்டிருந்ததால், நான் தோல்வியடைவேன் என்று அறிந்து கொண்டேன். சிறுபான்மையினர் வாழும் பிரதேசங்களில் இந்தளவுக்கு வாக்களிப்பார்கள் என்றுநான் நம்பியிருக்கவில்லை–என்றார். (த-வ-5)

## தனக்குத்தானே

தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவு 3 ஆம் வட்டாரத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயாரான ஜோசப் அன்ரனி மரியம்மா (வயது 30) என்பவரே உயிரிழந்தார்.

குறித்த பெண்ணின் கணவன் தினமும் இரவில் வீட்டுக்குச் செல்லும் போது, போதையில் மனைவியுடன் முரண்படுவதும் சண்டையிடுவதும் துன்புறுத்துவதுமாக இருந்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதனைச் சகித்துக் கொண்டிருந்த அவரது மனைவி, கடந்த 17 ஆம் திகதி தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டியுள்ளார். அதனால் அவர் உடல் முழுதும் தீக் காயங்களுக்கு உள்ளானார். அதனை அணைக்கச் சென்ற அவரது கணவனும், எரிகாயங்களுக்கு உள்ளானார்.

எரிவு தாங்க முடியாத மனைவி ஓடிச்சென்று அங்கிருந்த கிணற்றில் குதித்துள்ளார். அவரைக் கணவன் மீட்டபோதும், உதவிக்கு அயலவர்கள் எவரும்செல்லவில்லை என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அவ்வழியே சென்ற பொலிஸாரே அவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குறித்த தாயார், சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். நீதிமன்றப் பணிப்புக்கு அமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மற்றும் பொலிஸாரும் விசாரணை மேற்கொண்டனர். பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சியான தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது மும்பை

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற மும்பை–பெங்களூர் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றிபெற்றது மும்பை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. கெயில் தனது சொந்த நாட்டுக்குத் திரும்பியிருந்தமையால் ஆரம்ப வீரர்களாக கோக்லி மற்றும் ராகுல். டெஸ்ட் ஆட்டங்களுக்குரிய வீரராக அடையாளம் காணப்பட்ட லோகேஸ் ராகுல் அடித்தாடவும் செய்வார் என்பது பாதிப்பேருக்கு நேற்றுத்தான் தெரிந்திருக்கும். இருப்பினும் பவர்பிளேய் முடியும் வரையாவது அவரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. வழக்கத்துக்கு மாறாக கோக்லி நேற்று சிறிது தடுமாறினார். வில்லியர்ஸின் இன்னிங்ஸிலும் சிக்சர்கள் பெரிதாக இல்லை. 33 ஓட்டங்களுடன் கோக்லியும், 29 ஓட்டங்களுடன் வில்லியர்ஸூம், 5 ஓட்டங்களுடன் வற்சனும் ஆட்டமிழக்க,பெங்களூர் சுருண்டுவிடப் போகிறது என்ற கணிப்புக்களும் இருந்தன. ஹெட், சர்பிராஸ்கான் இருவரும் இணைந்து ஆட்டத்தில் திருப்பு முனையை ஏற்படுத்தினர். 37 ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார் ஹெட். சராசரியில் சடுதியான ஏற்றத்தை ஏற்படுத்தினார் சர்பிராஸ்கான். அவர் 18 பந்துகளில் 28 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்க,முடிவில் பெங்களூர் 170–7. பந்துவீச்சில் மும்பை சார்பாக பும்ரா 3 இலக்குகளையும், குருனல் பாண்டியா 2 இலக்குகளையும், மக்கெலிநகன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது மும்பை. ஐந்தே ஓட்டங்களுடன் ஏமாற்றிச் சென்றார் பார்திவ் பட்டேல். சீரான இடைவெளியில் சிக்சர் பவுண்டரிகளை அனுப்பி நிலைத்து நின்றார் ரோகித். ரோகித்துக்குப்பக்க பலமாக நின்றார் ராயிடு. மேலதிக இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்களைத் தொட்டது மும்பை. 10 பந்துப்பரிமாற்றங்களில் மும்பை 80–1. 31 ஓட்டங்களுடன் ராயிடுவரை இருக்கைக்குத் திருப்பினார் இக்பால் அப்துல்லா. 38 பந்துகளில் அரைச்சதம் கடந்து 62 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் ரோகித். இறுதி 5 பந்துப்பரிமாற்றங்களில் 41 ஓட்டங்கள் பெறப்படவேண்டும் என்ற நிலைமை. அடுத்தடுத்து சிக்சர்களையும் பவுண்டரிகளையும் பதிவுசெய்து 12 பந்துகள் மீதமிருக்க ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் பொலார்ட். பந்துவீச்சில் பெங்களூர் சார்பில் இக்பால் அப்துல்லா 3 இலக்குகளையும், ரிச்சாட்சன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)





# வடக்கு – ஊவா ஆட்டம் சமநிலை மழை இடையே குறுக்கிட்டமையால்

யாழ்ப்பாணம், ஏப். 21

19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் மாகாண மட்டத் தொடரில் ஊவா மாகாணத்துக்கும், வடமாகாணத்துக்கும் இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

சிறந்த தேசிய அணியை உருவாக்கும் நோக்கத்துடனும், இலங்கை தேசிய அணிக்கான எதிர்கால நட்சத்திரங்களைத் தெரிவுசெய்யும் நோக்கத்துடனும் இலங்கைக் கிரிக்கெட் சபையினால், மாகாணங்களின் 19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையில் இந்தத் தொடர் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. வட மாகாணம் தனது முதலாவது ஆட்டத்தில் (டெஸ்ட் ஆட்டம்) ஊவாவை மத்தேகொடவில் வைத்து நேற்றுமுன்தினம் சந்தித்தது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஊவா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வடக்கு சகல இலக்குகளையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக யதுசன் 38 ஓட்டங்களையும் கபில்ராஜ் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஊவா சார்பாக அவிந்து திக்சன 7 இலக்குகளையும் கயனரத்திம ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய ஊவா 9 இலக்குகளை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் நாள் முடிவுக்கு வர ஆட்டம் சமநிலையானது. அதிகபட்சமாக கயனரத்திம 36 ஓட்டங்களையும் திக்சன 35 ஓட்டங்களையும் டில்சாரா ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வடமாகாணத்தின் சார்பாக பிரவீன் ஜெய விக்கிரம 4 இலக்குகளையும் கபில்ராஜ் 3 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம–23)

# சீன தொடரையும் தனதாக்கி ஹட்ரிக் பதிந்தார் ரஸ்பேர்க்

உலக கார்ப்பந்தயத் தொடரில், சீனாவில் நடைபெற்ற மூன்றாவது சுற்றில் ஜேர்மனியின் ரஸ்பேர்க் வெற்றிபெற்றுள்ளார். உலக கார்ப்பந்தயத் தொடர் வழக்கம் போல் இந்த வருடமும் மொத்தம் 21 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் 3ஆவது சுற்று சீனாவின் சர்வதேச ஓடுதளத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. பந்தயத்தூரம் 305 கிலோமீற்றர் ஆகும். 11 அணிகளைச் சேர்ந்த 22 வீரர்கள் காரில் மின்னல் வேகத்தில் சீறிப்பாய்ந்தனர். இதில் மெர்சிடஸ் அணிக்காக பங்கேற்று வரும் ஜேர்மனி வீரர் நிகோ ரஸ்பேர்க் 1 மணி 38 நிமிடம் 53.891 வினாடிகளில் இலக்கைக்கடந்து முதலிடத்தை பிடித்ததுடன் அதற்குரிய 25 புள்ளிகளையும் தட்டிச் சென்றார். அவருக்கு இது ஹட்ரிக் வெற்றியாக அமைந்தது. ஏற்கனவே ஆஸ்திரேலியா, பக்ரைன் ஆகிய இடங்களில் நடந்த முதல் இரு போட்டிகளிலும் ரஸ்பேர்க்தான் வெற்றி பெற்றிருந்தார்.

செபஸ்ரியன் வெட்டல் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். நடப்புச் சம்பியனாக வலம்வரும் ஹமில்டனால் 7ஆவது இடத்துக்கே வரமுடிந்தது. (ம)




# யூனியன், ஞானமுருகன் அணிகளுக்கு நாமகளின் கால்பந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 21

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் ஆனைக்கோட்டை யூனியன், ஞானமுருகன் 'ஏ' அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

தொடர் நாமகள் விளையாட்டுக் கழகமைதானத்தில் இடம்பெற்று வருகிறது. இதில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதிக் கொண்டது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் 'ஏ' அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள், புத்தூர் கலைமதி அணிகள் மோதிக் கொண்டன. இதில் மயிலங்காடு ஞானமுருகன் 'ஏ' அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம–23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Established in 2000, ESOFT has rapidly grown to be a trendsetter in the industry.

As part of our expansion, we are looking for skilled individuals who can work in a team environment, to achieve set goals.

Successful candidates shuld be self motivated and have the capabilty of setting own standards and be able to see that they areachieved and surpassed.

**Management Trainee / Assistant**

- Must be a graduate / HND holder in IT / Business Management
- Handing student records and certification process
- Maintain information with regard to class schedules and payment structures
- Fluency in English and Computer Literacy for communicating with internal and external divisions
- Prior expenence in similar positions,customer care and front office operations willbe advantageous

**Program Head- Masters Program & PG Diplomas**

- Must be a graduate in IT with postgraduate qualification in Business with an experience in similar
- Ability to lead the lecturing team and MBA and PGD programs
- Having experience in conducting lectures for HND & Bachelors level programs
- Would be responsible for achieving set targets, and assinging lecturers and other resourses. Sucessful candidates will receive a good figure home take salary and allowances.

**Lecturer - English / IT / Management**

- SLecturers should be graduates or have equivalent qualifications with similer field expenence.
- Those without experience can be considered if you have excellent demonstration skills.
- Ability to explain concepts to others effectively
- Ability to handle a diverse range of subjects and programs from Diplomas to Degrees.

**Assistant Manager - Marketing**

- Possess a degree / HND in Marketing / Partly qualified in CIM / SLIM
- Possess excellent communication and interpersonal skills.
- Assist to achieve branch monthly targets and engage and monitoring promotional activites of branch
- An attarctive remuneration package and allowance will be given for sucessful candidates. You will work on targets an incentivised rewards scheme in addition to your salary.

If you think are the ideal that we are looking for you are entitled to a monthly salary along with commision which is the way above the industry standard to commensurate your qualifications and awaits along with exceptional opportunities for career development.

**HOW TO APPLY :**
Send us your Completed CV with in 10 Days of this advertisment including a covering letter introducing your self to **jaffna@esoft.lk** please state the position applied as the subject line of the email.

**ESOFT METRO CAMPUS**
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka. Email : jaffna@esoft.lk


# கே.ஸி.ஸி.ஸியின் அரையிறுதிகள்

கே.ஸி.ஸி.ஸி. வி.கழகம் யாழ். மாவட்ட துடுப் பாட்ட சங்கத்தில் பதிவு செய்த கழகங்களுக்கு இடையில் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங் கள் இன்று நடை பெற வுள்ளன. கொக்குவில் இந்துக்கல்லூரி மைதா னத்தில்நடைபெறவுள்ள இந்த அரையிறுதி ஆட் டங்களில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட் டத் தில் மானிப்பாய் பரிஸ் அணி யை எதிர்த்து திரு நெல் வேலி அணியும் பிற் பகல் 1 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணி யை எதிர்த்து கே.ஸி. ஸி.ஸி.அணியும் மோத வுள்ளன. (ம-422)


**எந்தவொரு பிறிண்டிங் நிறுவனமும் வழங்காத, வழங்கமுடியாத நியாய விலை.**
சகல பிறிண்டிங் வேலைகளுக்கும்
வடக்கில் நவீன அச்சுப்பதிப்பின் இன்றைய முன்னோடி
**கொழும்பு பிறிண்டேர்ஸ்**
666, கே.கே.எஸ் வீதி, யாழ் 077 1974875

**கும்பாபிஷேக அறிவித்தல்**

வத்திராயன் ஸ்ரீமுருகமூர்த்தி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெரு விழாவானது எதிர்வரும் (22.04. 2016) வெள்ளிக்கிழமை நடைபெற இருப்பதோடு எண் ணெய்க்காப்பு நிகழ்வு இன்று (21.04.2016) வியாழக் கிழமை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

ஸ்ரீ முருகமூர்த்தி அம்மன் ஆலயம், வத்திராயன்.

தர்மகர்த்தா சபையும், ஆலய பரிபாலன சபையும்.

(J 527) (10.17)

**நாய்குட்டிகள் விற்பனைக்குண்டு**

ஜேர்மன் சீப்பட் அல்சேசியன் நாய்குட்டிகள் விற்பனைக்குண்டு.
T.P: 0756575875 கோண்டாவில் 021 4919531 (J 541)(10.17)

சிறிய வைத்திய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: 0772987506, 0772626944.

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்தை காட்டி பெற்றுக்கொள்ளவும்.
077 46 85 714 (J 542)(10.17)

**விற்பனைக்கு**

கலப்பு இன ஊர்க்கோழிக்குஞ்சுகள் கிரிராஜ் குஞ்சுகள் (3 நாள்கள்) பெற்றுக்கொள்ளலாம்.
குறிப்பு: 20 குஞ்சுகளில் இருந்து வழங்கப்படும்.
077 837 6620

**வீடு வாடகைக்கு**

நீர்வேலி தெற்கு. நீர்வேலி குருந்தடி வீதியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகம் பார்ப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 077 662 1745
077 533 0289

**வாகனம் விற்பனைக்கு**

PP-xxxx தொடரிலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள, அலுமினிய Body யுடன் பட்ட வடி வாகனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 24 33 580

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: 077 327 6502


# வடமாகாண மக்களின் உள்ளங்களை தன் பணிகளால் கவர்ந்துகொண்ட வங்கியாளர் மாணிக்கசிங்கி

## சேவை நலன் பாராட்டு



**மாணிக்கசிங்கி**

இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளராக வடமாகாணத்தில் பணியாற்றிவந்த நடராஜா மாணிக்க சிங்கி தனது முப்பத்தெட்டு வருடகால வங்கிச் சேவையை நிறைவுசெய்து 20.04.2016 நேற்று ஓய்வு பெற்றார். அமைதியும் இனிமையோடு பழகும் சுபாவமும் கடின உழைப்பும் நிறைந்த ஒருவர் மாணிக்கசிங்கி. தன்னிடம் ஒப்படைக்கப்படும், பொறுப்புக்களை நேர்த்தியாக நிறைவு செய்வதில் வல்லவர் மட்டுமல்ல நாடிவருவோரின் தேவைகளைப் புரிந்துகொண்டு அனுசரணையாகச் செயற்படுபவருங்கூட. இதனாலேயே மாணிக்கசிங்கி வெற்றிகரமான வங்கியாளராகப் பணியாற்றி ஓய்வு பெறுகிறார்.

கனிஷ்ட எழுதுவினைஞர்/ உதவிக் காசாளராக 1978 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியில் இணைந்து வங்கிப்பணியை ஆரம்பித்தார் மாணிக்கசிங்கி. அவரது அயராத உழைப்பும் விடா முயற்சியும் உதவிப் பொதுமுகாமையாளர் பதவிவரை அவரை உயர்த்தியது என்பது மிகையல்ல. வங்கியாளர் டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்த மாணிக்கசிங்கி பின்னர் லண்டன் சந்தைப்படுத்தல் நிறுவனத்தில் சந்தைப்படுத்தலில் Post Graduate Diploma பட்டத்தினையும் Chartered Marketer விருதினையும் பெற்றவர். வங்கிப்பணியில் படிப்படியாக உயர்ந்து இலங்கை வங்கியின் சந்தைப்படுத்தல் பகுதியில் ஏழு வருடங்கள் முகாமையாளராகப் பணியாற்றினார். வடக்கு, மலையகம், கொழும்பு தலைமைக்காரியாலயம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் சேவையாற்றி கடந்த 5 1/2 வருடகாலமாக தனது சொந்தப் பிரதேசமான யாழ்ப்பாணத்தில் பிரதேச முகாமையாளராகவும் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளராகவும் உதவிப் பொது முகாமையாளராகவும் பல பதவி நிலைகளில் பணியாற்றி வந்தார்.

வடமாகாணத்தில் இவரது முயற்சியால் வங்கிக்கிளைகள் அதிகரிக்கப்பட்டு மக்களுக்கான சேவைகள் விரிவுபடுத்தப்பட்டன. வட்டுக்கோட்டையிலும் இவர் தம்முயற்சியால் கிளையொன்று நிறுவப்பெற்று சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நடராஜா தம்பதிகளின் மூத்த புதல்வரான மாணிக்கசிங்கி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவராவார். யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் நீண்டகால உறுப்பினராகச் செயற்பட்டு வருபவர். சமூகப் பணிகளில் அக்கறை கொண்ட இவர், வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க உறுப்பினராகவும் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் கொழும்புக்கிளை உறுப்பினராகவும் செயற்பட்டு சமூகப் பணியாற்றி வருபவர். தன்னை முன்னிலைப்படுத்தாது, புகழ்விரும்பாது பணிகளில் முதுகெலும்பாய் செயற்படுகின்ற நற்பண்பு மிக்கவர்தான் மாணிக்கசிங்கி. தொழில்சார் வங்கியாளர் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும் பின்னர் பொருளாளராகவும் செயலாற்றி வங்கியாளர் கழகத்தின் வளர்ச்சிக்குப் பணியாற்றியவர். இவர் வடமாகாண மக்களின் உள்ளங்களை தன்பணிகளால் கவர்ந்துகொண்டவர். விவசாயிகள், சுயதொழிலாளர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலதரப்பினரினதும் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றுக்கொள்ளும் வண்ணமாக சீரிய பணியாற்றிய மிகவும் நேர்மையான வங்கியாளர் ஆவார். தனது நெறிப்பட்ட நல்வாழ்வால் பிறருக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்த மாணிக்க சிங்கி, தான் பிறந்த வட்டுக்கோட்டை மண்ணிற்கும் பெருமை சேர்த்தார். மாணிக்கசிங்கியின் ஓய்வுகாலம் மகிழ்ச்சிகரமானதாக அமைய இறைவன் அருள்புரிவானாக.

**ந.பாலராமன்**
**(ஓய்வுபெற்ற முகாமையாளர் - இலங்கை வங்கி)**
**தலைவர்**
**வட்டு. இந்து வாலிபர் சங்க கொழும்புக் கிளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.